விலை : 20.00
பக்கங்கள் : இருபத்து நான்கு
website : www.valampurii.lk
Viber : 076 636 3378
Registered as a Newspaper in Sri Lanka

# வலம்புரி
Valampurii


E-mail: valampurii@yahoo.com, valampurii@sltnet.lk

கல்யாண மாலை
[சர்வதேச திருமண சேவை]
T.P: 021 720 1005
இல.144,
பிறவுண் வீதி,
யாழ்ப்பாணம்.
Email Kalyanamalai.jaffna@gmail.com
பதிவுக் கட்டணம்
1000/- மட்டுமே



சங்கு 19 வள்ளுவர் ஆண்டு 2049 பங்குனி 21 புதன்கிழமை (04.04.2018) தொலைபேசி 222 3378, 222 7829 ஒலி 106

## அரசியலில் பெரும் பரபரப்பு
## பிரதமர் ரணிலுக்கு எதிரான
# நம்பிக்கையில்லா
# பிரேரணை இன்று



(கொழும்பு) அரசியலில் ஆட்சி மாற்றத்தையே ஏற்படுத்தக்கூடிய பிரதமர் ரணிலுக்கு எதிரான நம்பிக்கையில்லா பிரேரணை இன்று நாடாளு மன்றில் இடம்பெறவுள்ளது. 12 மணி நேரம் விவாதம் நடைபெற்று இரவு 9.30 மணிக்கு வாக் கெடுப்பு நடைபெறவுள்ளது.(3-ம் பக்கம்...)

நம்பிக்கையில்லா பிரேரணை தொடர்பில்

## ஜனாதிபதி மைத்திரி - சம்பந்தன் நேற்றைய தினம் திடீர் சந்திப்பு

(கொழும்பு)

எதிர்க்கட்சி தலைவரும், தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் தலைவருமான இரா.சம்பந்தனுக்கும், ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன விற்கும் இடையில் சந்திப்பொன்று நேற்று இடம்பெற்றுள்ளது.

குறித்த சந்திப்பின்போது பிரதமருக்கு எதிரான நம்பிக்கையில்லா பிரேரணை குறித்து கூட்டமைப்பின் நிலைப்பாடு வெளியிடப்படும் என எதிர்பார்க்கப்பட்டபோதும் எவ்வித அறிவிப்பும் வெளியாகவில்லை.

இந்நிலையில் சந்திப்பை தொடர்ந்து ஊடகங்களுக்கு கருத்து தெரிவித்த சம்பந்தன்,

'நம்பிக்கையில்லா பிரேரணை குறித்து இன்று கட்சிக்கி 24

## கரவெட்டி பிரதேச சபையும் த.தே.கூட்டமைப்பு வசம்

தவிசாளராக தங்கவேலாயுதம் ஐங்கரன் தெரிவு



24

வட பகுதி அபிவிருத்தி தொடர்பாக

## இந்திய துணைத் தூதுவருடன் ஆளுநர் கூரே கலந்துரையாடல்

(கரணவாய்)

வட பகுதியில் எதிர் காலத்தில் முன்னெடுக்கப்படவுள்ள அபிவிருத்தி திட்டங்கள் தொடர்பாக யதிதாக பொறுப்பேற்றுள்ள யாழ்.இந்திய துணைத் தூதுவர் எஸ்.பாலசந்திரன் நேற்று முன் 23



## ரணிலை காப்பாற்றுவதற்கு த.தே.கூ தீர்மானித்துள்ளது

முடிவு இன்று அறிவிக்கப்படும்

(கொழும்பு)

கூட்டு எதிரணியால் பிரதமர் ரணில் விக்கிரமசிங்கவுக்கு எதிராக கொண்டுவரப்படும் நம்பிக்கையில்லா பிரேரணையை தோற்கடித்து பிரதமரை காப்பாற்றுவதற்கு தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு முடிவு செய்துள்ளது.

எனினும் இது தொடர்பான இறுதி முடிவை இன்றைய தினமே கூட்டமைப்பு வெளியிடவுள்ளது.

தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் தலைவரும் பாராளுமன்றத்தின் எதிர்க்கட்சித் தலைவருமான இரா. சம்பந்தன் தலைமையில் கூட்டமைப்பின் பாராளுமன்ற 23

காணாமல்போன உறவுகளை

## பார்க்காது சென்ற சந்திரிகா அம்மையார்

(கிளிநொச்சி)

வடக்கிற்கு உத்தியோகபூர்வ விஜயம் மேற்கொண்டிருந்த முன்னாள் ஜனாதிபதி சந்திரிகா பண்டாரநாயக்க, காணாமல் ஆக்கப்பட்டோரது உறவினர்களுடனான சந்திப்பை புறக்கணித்துள்ளார்.

வடக்கு விஜயத்தின் மூன்றாவது நாளான நேற்று செவ்வாய்க் கிழமை வீதியில் தவிக்கும் 24



தரம் 5
மாணவர்களுக்கான
புலமைப் பரிசில்
பரீட்சைக்கான
மாதிரி வினாத்தாள்
உள்ளே...

## பிரதமர் பதவியை பெறும் எண்ணம் மகிந்தவுக்கு இல்லை

ரோஹித்த அபேகுணவர்த்தன தெரிவிப்பு

முன்னாள் ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷ, ஒன்றிணைந்த எதிர்க் கட்சியினருடன் கொழும்பு விஜயராம இல்லத்தில் நேற்று மாலை கலந்துரையாடலில் ஈடுபட்டார்.

பிரதமருக்கு எதிரான இன்றைய வாக்கெடுப்பின் போது முன்னாள் ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷ பங்கேற்பார் என பாராளுமன்ற உறுப்பினர் விதுர விக்ரமநாயக்க குறிப்பிட்டார்.

இதேவேளை, நம்பிக்கையில்லா பிரேரணையை வெற்றி கொண்டு பிரதமர் பதவியைப் பெறும் எண்ணம் மகிந்த ராஜபக்ஷவுக்கு இல்லை என ரோஹித்த அபேகுணவர்த்தன குறிப்பிட்டார். (ம)

பிரேரணைக்கு அஞ்சப்போவதில்லை

## இறுதிவரை போராட போவதாக ஐக்கிய தேசியக் கட்சி அறிவிப்பு

(கொழும்பு)

நம்பிக்கையில்லா பிரேரணைக்கு அஞ்சி பதவி விலகப் போவதில்லை. இறுதிவரை போராடப் போவதாக் பிரதமர் ரணில் விக்கிரமசிங்கவும், ஐக்கிய தேசிய கட்சியும் அறிவித்துள்ளது.

நம்பிக்கையில்லா பிரேரணை குறித்த விவாதத்திற்கு முன்னர் பதவி விலகுமாறும், இல்லையேல் அவருக்கு எதிர்ப்பு தெரிவிக்கப்படும் என்றும் சிறிலங்கா சுதந்திரக் கட்சி கோரியிருந்த நிலையில், ஐ.தே.க. தமது நிலைப்பாட்டை அறிவித்துள்ளது.

நம்பிக்கையில்லா பிரேரணை குறித்து ஜனாதிபதி மாளிகையில் நேற்று இடம்பெற்ற 23

## வட மாகாணத்தின் புதிய கடற்படை தளபதி யாழுக்கு விஜயம்



(யாழ்ப்பாணம்)

வடமாகாணத்திற்கு புதிதாக நியமிக்கப்பட்டிருக்கும் கடற்படைக் கட்டளைத் தளபதி ரியல் அட்மிரல் பி.எம். விக்கிரமசிங்க 23

## நம்பிக்கையில்லா பிரேரணை சர்ச்சை நீங்கியவுடன் ஐ.தே.கவில் மாற்றம்

பிரதமர் ரணில் அறிவிப்பு

(கொழும்பு)

நம்பிக்கையில்லா பிரேரணை குறித்த விவாதம் நிறைவடைந்தவுடன், கட்சியை மறுசீரமைப்புக்கான நடவடிக்கைகள் உடனடியாக ஆரம்பிக்கப்படும் என பிரதமரும், ஐக்கிய தேசிய கட்சியின் தலைவருமான ரணில் விக்கிரமசிங்க தெரிவித்துள்ளார்.

நேற்று செவ்வாய்க்கிழமை நடைபெற்ற ஐ.தே.க. நாடாளுமன்ற குழுக் கூட்டத்தில் உரையாற்றிய போதே அவர் இவ்வாறு குறிப்பிட்டுள்ளார்.

அங்கு தொடர்ந்து தெரிவித்த பிரதமர், ஏற்கெனவே கலந்துரையாடியதற்கு அமைய கட்சியின் பொறுப்புகள் புதிய அணியிடம் ஒப்படைக்கப்பட்டு, எதிர்வரும் தேர்தல்களில் சக்திவாய்ந்த ஒரு அணியாக முகங்கொடுக்க தயாராவோம்.

இதேவேளை, கட்சியின் புதிய அங்கத்தவர்கள் எதிர் 24

## முஸ்லிம் காங்கிரஸ் ரணிலுக்கு ஆதரவு

அமைச்சர் ஹக்கீம் அறிவிப்பு

(கொழும்பு)

பிரதமர் ரணில் விக்கிரமசிங்கவுக்கு எதிரான நம்பிக்கையில்லா பிரேரணையைத் தோற்கடிக்க சிறிலங்கா முஸ்லிம் காங்கிரஸ் வாக்களிக்கும் என அதன் தலைவரும் அமைச்சருமான ரவூக் ஹக்கீம் அறிவித்துள்ளார். இந்த அறிவிப்பை அவர் நேற்று இரவு வெளியிட்டுள்ளார். 23

## திருத்தம்

01.04.2018 அன்று வலம்புரி சங்கு நாதத்தில் வெளிவந்த நெஞ்சை நெருடும் ஒரு பெண் போராளியின் கதை என்ற கட்டு ரையில் வெளிவந்த போராளியின் பெயரும் அவரின் ஊரும் தவறானது என்பதை வாச கர்களுக்குத் தெரியப்படுத்திக் கொள்கின் றோம். (ஆ-ர்)

## முன்னாள் பொலிஸ் அதிகாரி கைது

போலி கடன் அட்டைகளை தயாரித்த முன்னாள் பொலிஸ் அதிகாரி ஒருவரை பொலிஸார் கைது செய்துள்ளனர்.

போலி கடன் அட்டைகளை தயாரிப்ப தற்கு பயன்படுத்தப்படும் 400 அட்டைகளு டன் முன்னாள் பிரதான பொலிஸ் பரிசோத கர் ஒருவர் கைது செய்யப்பட்டுள்ளதாக பொலிஸ் ஊடகப் பேச்சாளர் ருவான் குண சேகர தெரிவித்துள்ளார். (ம)


## தவறிவிட்டது

மீசாலை வடக்கு கொடிகாமத்தை சேர்ந்த ஐயாத்துரை திருச்செல்வம் ஆகிய எனது வெளிநாட்டு நாணயத்தாள்கள் உட்பட ஒரு தொகைப்பணமும் தேசிய அடையாள அட்டை, கடனட்டை உள்ளிட்ட ஆவணங்கள் அடங்கிய பேர்ஸ் நேற்றுமுன்தினம் (02.04.2018) மீசா லையிலிருந்து மானிப்பாய்க்கு செல்லும் வழி யில் தவறிவிட்டது. கண்டெடுத்தவர்கள் தொடர்பு கொள்ளவும். சன்மானம் வழங்கப்படும்.

தொடர்பு:
0777445246, 0041786111489

(சி-2108)

WESTERN UNION WU

moving money for better

உலகெங்குமுள்ள
உறவுகளுக்கு துரித தபால்கள், பொதிகள் சேவை உடனுக்குடன் அனுப்ப
நாடுங்கள்

உறவுகளிடமிருந்து WESTERN UNION மூலம் அனுப்பிய பணத்தை ஒருசில நிமிடங்களில் நீங்கள் பெற்றுக்கொள்ள.

இவையனைத்தையும் ஒரே கூரையின் கீழ் அதிவிரைவு, பாதுகாப்பு, நம்பகத்தன்மை

Authorised Agent
SRI MURUGAN
TELE COMMUNICATION & AGENCY POST OFFICE

# 303, K.K.S.ROAD, JAFFNA.
TEL: 021 222 5392, 021 222 2670, FAX: 021 222 3214
E-mail:srimurugan303@gmail.com, E-mail:srimurugan09@gmail.com

(C-2091)


## பாராட்டி வாழ்த்துகின்றோம்



### நல்லையா அமிர்தநாதன்

உடையார் கட்டு ஆரம்ப பாடசா லையில் அதிபராகக் கடமையாற்றி இன்று புதுக்குடியிருப்பு ஸ்ரீ சுப்பிரமணிய வித்தியாசாலையில் அதிபராகக் கடமையைப் பொறுப்பேற்கும் எமது அதிபர் திரு.ந.அமிர்தநாதன் அவர்களின் பணி சிறப்பாக அமை யவும் 28.03.2018 அன்று பண் டாரநாயக்க சர்வதேச மாநாட்டு மண்டபத்தில் நடைபெற்ற பட்டமளி ப்பு விழாவில் தகவல் தொடர்பாடல் தொழில்நுட்பத்தில் கல்விமாணிப் பட்டம் பெற்ற முதலாவது அணி யில் ஒருவராக பட்டம் பெற்றமை யையும் அகமகிழ்ந்து பாராட்டி வாழ்த்துகின்றோம்.

பாடசாலைச்சமூகம்
மு/உடையார் கட்டு
ஆரம்ப பாடசாலை

(சி-2103)


யாழ் போதனா வைத்தியசாலையிலுள்ள சிற்றுண்டிச்சாலையை ஒப்பந்த அடிப்படையில் குத்தகைக்கு வழங்குதல்

22.03.2018ஆம் திகதிய மேற்படி விளம்பரத்தில் விலைக்கேள்விகள் சமர்ப்பிக்கப்பட வேண்டிய இறுதித் திகதி 04.04.2018 ஆனது 12.04.2018ஆம் திகதியாக நீடிக்கப்படுகிறது.

தலைவர்/பணிப்பாளர்
போதனா வைத்தியசாலை,
யாழ்ப்பாணம், (சி-2104) 04.04.2018

வலம்புரி
விளம்பரத் தொடர்புகளுக்கு
021 221 7603, 021 567 1532





## இரண்டாம் ஆண்டு நினைவஞ்சலி



அமரர்
### அம்பலவாணர் சிவலோகநாதன்

தோற்றம் : 27.11.1948
மறைவு : 27.03.2016

சேராத செல்வமெல்லாம்
சேர்த்துவிட்டு சேர்ந்திருக்க
மறந்து நீங்கள் சென்றதெங்கே?
பாரினிலே பந்தங்கள்
பலவிருக்க பக்கத்துணை நீங்கள்
இன்றி பயனேது எமக்கு!!!

அன்புடனும் பண்புடனும்
பாசத்துடனும் வழிநடத்திய
எங்கள் அன்புத் தந்தையே
நீங்கள் இல்லாத உலகம்
என்றும் இருள் மயமானது
எங்கே காண்போம்,
உங்கள் மலர்ந்த முகத்தை?
உங்கள் பிரிவை தாங்குமா
எங்கள் இதயம்!!!

இங்ஙனம்:
குடும்பத்தினர்.

சூராவத்தை,
சுன்னாகம்.

(3505)

## கிளி/கிளிநொச்சி மத்திய ஆரம்ப வித்தியாலயம்
## பாராட்டி வாழ்த்துகின்றோம்



திரு.சுந்தரம் பாலகுமாரன் | திருமதி தயானந்தி கேதீஸ்வரன் | திருமதி யசோதா சசிபாபு

திருமதி பபிர்தா கஜேந்திரன் | திருமதி சசிகலா சிவானந்தன்

2018.03.28 அன்று பண்டாரநாயக்க ஞாபகார்த்த சர்வதேச மாநாட்டு மண்டபத்தில் நடைபெற்ற பட்டமளிப்பு விழாவில் கல்விமாணி (B.Ed) பட்டம் பெற்ற எமது பாடசாலை ஆசிரியர்களான திரு.சுந்தரம் பாலகுமாரன், திருமதி தயானந்தி கேதீஸ்வரன், திருமதி யசோதா சசிபாபு, திருமதி பபிர்தா கஜேந்திரன், திருமதி சசிகலா சிவானந்தன் ஆகியோரை வாழ்த்திப் பாராட்டுவதுடன் இவர்கள் மேன்மேலும் உயர்வு பெற இறைவனைப் பிரார்த்திக்கின்றோம்.

பாடசாலைச் சமூகம்
கிளி/கிளிநொச்சி மத்திய ஆரம்ப வித்தியாலயம்

(சி-2105)

# பிரதமர் ரணிலுக்கு எதிரான பிரேரணை மீது 12 மணிநேர விவாதம் இரவு 9.30 மணிக்கு வாக்கெடுப்பு

(கொழும்பு)

அரசியலில் பெரும் பரபரப்புக்குள்ளாகியுள்ள பிரதமர் ரணில் விக்கிரமசிங்கவிற்கு எதிரான நம்பிக்கையில்லாப் பிரேரணை மீதான விவாதம் இன்று புதன் கிழமை காலை எடுக்கப்பட்டு இரவு 9.30 மணிக்கு வாக்கெடுப்பு நடைபெறவுள்ளது.

இன்று காலை 9.30 மணிக்கு பாராளுமன்றம் சபாநாயகர் கரு ஜெயசூரிய தலைமையில் கூடவுள்ளதுடன் சபையின் தினப்பணிகள் நிறைவடைந்த பின்னர் நம்பிக்கையில்லாப் பிரேரணை மீதான விவாதம் 12 மணி நேரம் நடைபெற்று அதன் பின்னர் இரவு 9.30 மணிக்கு வாக்கெடுப்புக்கு விடப்படவுள்ளது.

உள்ளூராட்சி மன்ற தேர்தலின் பின்னர் நாட்டில் ஏற்பட்டுள்ள சிக்கலான நிலைமையில் பிரதமர் ரணில் விக்கிரமசிங்கவிற்கு எதிராக நம்பிக்கையில்லாப் பிரேரணையை கூட்டு எதிர்க்கட்சி கொண்டு வந்தது.



குறித்த பிரேரணை சபாநாயகர் கரு ஜெயசூரியவிடம் 55 பாராளுமன்ற உறுப்பினர்களின் கையொப்பங்களுடன் கையளிக்கப்பட்டது. இதன்பிரகாரம் கூட்டு எதிர்க்கட்சியின் 52 உறுப்பினர்களும் சுதந்திரக் கட்சி சார்பாக இராஜாங்க அமைச்சர் ரி.பி ஏக்கநாயக்க, பிரதி அமைச்சர் சுசந்த புஞ்சிநிலமே மற்றும் பாராளுமன்ற உறுப்பினர் காதர் மஸ்தான் ஆகியோரும் கையொப்பமிட்டிருந்தனர்.

எனினும் முன்னாள் ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷ குறித்த பிரேரணையில் கைச்சாத்திடவில்லை. தற்போது பிரதமர் ரணில் விக்கிரமசிங்கவிற்கு எதிரான நம்பிக்கையில்லா பிரேரணையை தோற்கடிப்பதற்கு ஐக்கிய தேசியக் கட்சி பெரும் முயற்சிகளை முன்னெடுத்து வருகின்றது.

இதன்படி பல்வேறு கட்சிகளுடன் பேச்சுவார்த்தைகளை நடத்தி வருகின்றது. அதேபோன்று ஐக்கிய தேசியக் கட்சிக்குள்ளும் பலமட்ட சந்திப்புகள் நடத்தப்பட்டு வருகின்றது. இதற்கு அப்பால் பிரதமர் ரணில் விக்கிரமசிங்கவின் தலைமையிலும் பல்வேறு மட்ட பேச்சுவார்த்தைகள் இடம்பெற்று வருகின்றன.

அதேபோன்று கூட்டு எதிர்க்கட்சியும் ஐக்கிய தேசியக் கட்சியின் ஒரு சிலருடனும் சுதந்திரக் கட்சியுடனும் தமிழ் தேசியக் கூட்டமைப்புடனும் பல்வேறு மட்ட பேச்சுவார்த்தைகளை நடத்தி வருகின்றது.

பிரதமர் ரணில் விக்கிரமசிங்கவிற்கு எதிராக வாக்களிக்க போவதாக சுதந்திரக் கட்சியின் ஒரு சிலரும் மக்கள் விடுதலை முன்னணியினரும் அறிவித்துள்ளனர்.

தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு பிரதமருக்கு ஆதரவு வெளியிடும் என கட்சி வட்டார தகவல்கள் தெரிவித்தாலும் உத்தியோகபூர்வமாக இன்னும் அறிவிக்கப்படவில்லை.

எவ்வாறாயினும் பிரதமர் ரணில் விக்கிரமசிங்கவிற்கு எதிரான நம்பிக்கையில்லாப் பிரேரணை இன்று புதன் கிழமை விவாதத்திற்கு எடுக்கப்பட்டு இரவு 9.30 மணிக்கு வாக்கெடுப்புக்கு விடப்படவுள்ளது.

வாக்கெடுப்பின் போது தனிநபர் பெயர் அழைத்து வாக்கெடுப்பு நடத்தப்படவுள்ளமை குறிப்பிடத்தக்கது. (இ-7)

## ஐ.தே.கவிற்கு கம்மன்பில சவால்

(கொழும்பு)

நம்பிக்கையில்லாப் பிரேரணைக்கு எதிராக பிரதமருக்கு ஆதரவு தெரிவிக்கும் ஐக்கிய தேசியக் கட்சியினர் கைச்சாத்திட்டுள்ள ஆவணத்தை வெளியிடுமாறு பிவிதுரு ஹெல உறுமயவின் பொதுச் செயலாளர் நாடாளுமன்ற உறுப்பினர் உதய கம்மன்பில சவால் விடுத்துள்ளார்.




கொழும்பில் நேற்று இடம்பெற்ற ஊடக சந்திப்பு ஒன்றில் வைத்து அவர் இந்தச் சவாலை விடுத்துள்ளார்.

பிரதமருக்கு ஆதரவாக 78 பேரே கைச்சாத்திட்டுள்ளதாக அவர் இதன்போது தெரிவித்தார். (இ-7)

## நம்பிக்கையில்லாப் பிரேரணைக்கு பசில் ராஜபக்ஷ எதிர்ப்பு

### மகிந்த அமெரிக்கா பயணம்



(கொழும்பு)

பிரதமர் ரணில் விக்கிரமசிங்கவுக்கு எதிராக கூட்டு எதிர்க்கட்சி நாடாளுமன்றத்தில் கொண்டு வந்துள்ள நம்பிக்கையில்லாப் பிரேரணை தொடர்பான யோசனைக்கு முன்னாள் அமைச்சர் பசில் ராஜபக்ஷ கடுமையான எதிர்ப்பை வெளியிட்டுள்ளதாக அரசியல் தரப்புத் தகவல்கள் தெரிவிக்கின்றன.

கூட்டு எதிர்க்கட்சி கொண்டு வந்துள்ள நம்பிக்கையில்லாப் பிரேரணை வெற்றி பெற ஆதரவளிக்கக்கூடாது என்ற நிலைப்பாட்டில் பசில் ராஜபக்ஷ இருந்து வருவதாக கூறப்படுகிறது.

பிரதமர் ரணில் விக்கிரமசிங்கவுக்கு எதிரான நம்பிக்கையில்லாப் பிரேரணைக்கு பசில் போதிய ஆதரவை வழங்கவில்லை எனவும் இவ்வாறான அரசியல் நடவடிக்கைகளுக்கு தலைமைத்துவத்தை வழங்கும் அவர், நம்பிக்கையில்லாப் பிரேரணை தொடர்பான விடயத்தில் எந்த உதவிகளையும் வழங்கவில்லை எனக் கூறப்படுகிறது.

அரசாங்கத்தை அடுத்த இரண்டு வருடங்கள் நடத்திச் செல்ல பிரதமர் ரணில் விக்கிரமசிங்கவுக்கு வாய்ப்பளிக்க வேண்டும் என்ற நிலைப்பாட்டில் பசில் ராஜபக்ஷ இருந்து வருகிறார்.

ரணில் விக்கிரமசிங்க தலைமையிலான ஆட்சியை தொடரவிட்டால், அரசாங்கத்திற்கு எதிரான மக்களின் அதிருப்தி மேலும் அதிகரிக்கும் எனவும் இதன்மூலம் அடுத்த பொதுத் தேர்தல் ஒன்றில் கூட்டு எதிர்க்கட்சி இலகுவாக வெற்றி பெற முடியும் எனவும் பசில் ராஜபக்ஷ கருதுவதாக அரசியல் தரப்புத் தகவல்கள் கூறுகின்றன.

அதேவேளை முன்னாள் அமைச்சர் பசில் ராஜபக்ஷ ஐக்கிய தேசியக்கட்சியின் அணி ஒன்றுடன் தொடர்ந்தும் பேச்சுவார்த்தை ஒன்றில் ஈடுபட்டுள்ளதாக கூறப்படுகிறது.

எவ்வாறாயினும் பிரதமர் ரணில் விக்கிரமசிங்கவுக்கு எதிரான நம்பிக்கையில்லாப் பிரேரணையில் முன்னாள் ஜனாதிபதியும் நாடாளுமன்ற உறுப்பினருமான மகிந்த ராஜபக்ஷ கையெழுத்திடவில்லை என்பது குறிப்பிடத்தக்கது.

அத்துடன் நம்பிக்கையில்லாப் பிரேரணை விவாதத்திற்கு எடுக்கப்படும் இன்று அவர் நாடாளுமன்ற அமர்விலும் கலந்துகொள்ள மாட்டார். அமெரிக்காவில் நடைபெறும் வைபவம் ஒன்றில் கலந்துகொள்ள மகிந்த ராஜபக்ஷ அமெரிக்கா செல்லவுள்ளதாகவும் தெரிவிக்கப்படுகிறது. (இ-7)

## பிரதமர் பதவி விலக வேண்டும் சுதந்திரக்கட்சி அறிவிப்பு

(கொழும்பு)

நம்பிக்கையில்லாப் பிரேரணை மீதான வாக்கெடுப்புக்கு முன்னர் பிரதமர் ரணில் விக்கிரமசிங்க பதவியில் இருந்து விலக வேண்டும் என ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சி எடுத்துள்ள தீர்மானம் பிரதமருக்கு அறிவிக்கப்பட்டுள்ளது.



அமைச்சர் நிமால் சிறிபால டி சில்வாவால் இது தொடர்பில் பிரதமருக்கு அறிவிக்கப்பட்டுள்ளதாக அமைச்சர் சந்திம வீரக்கொடி தெரிவித்துள்ளார்.

கொழும்பு ஊடகம் ஒன்றிற்கு அவர் மேற்கண்டவாறு தெரிவித்துள்ளார்.

ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சியின் நாடாளுமன்றக் குழு கூட்டத்தில் வைத்து இதற்கான தீர்மானம் நேற்று முன்தினமிரவு ஏகமனதாக மேற்கொள்ளப்பட்டிருந்தமை குறிப்பிடத்தக்கது. (இ-7)

## தமிழ்த் தேசிய கூட்டமைப்புடன் இரகசிய ஒப்பந்தம் வேண்டாம்

### ஐ.தே.கவிடம் ஜனாதிபதி வலியுறுத்து பழையதை நினைவுபடுத்திய மங்கள





(கொழும்பு)

தமிழ்த் தேசியக் கூட்டமைப்புடன் இரகசிய ஒப்பந்தங்களை மேற்கொண்டு பிரதமருக்கு எதிரான நம்பிக்கையில்லாப் பிரேரணையை வெற்றிகொள்ள நடவடிக்கை எடுப்பதை தவிர்த்துக் கொள்ளுமாறு ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன ஐக்கிய தேசியக் கட்சி அமைச்சர்களிடம் நேற்று முன்தினமிரவு வேண்டுகோள் விடுத்துள்ளதாக தெரிவிக்கப்படுகின்றது.

ஜனாதிபதியின் இக் கருத்துக்கு மறுப்புத் தெரிவித்த அமைச்சர் மங்கள சமரவீர, தாங்கள் இப்பதவிக்கு தெரிவு செய்யப்பட்டது தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் ஆதரவுடனேயே ஆகும் என ஜனாதிபதிக்கு நினைவுபடுத்தியுள்ளதாக தெரிய வருகிறது. (இ-7)

### விடைபெற்றார் மோர்னே மோர்கல்

# பிலாண்டரின் 'ஸ்விங்' பந்துவீச்சின் முன் நொறுங்கியது ஆஸி

## 48 வருடங்களுக்கு பின் சொந்த மண்ணில் தொடரை வென்றது தெ.ஆ

பிலாண்டர் 21 ஓட்டங்களுக்கு 6 விக்கெட்டுகளை வீழ்த்த அவுஸ்திரேலியா தனது 2ஆவது இன்னிங்ஸில் 119 ஓட்டங்களுக்குச் சுருண்டு 492 ஓட்டங்களால் மிகப்பெரிய தோல்வி கண்டது. தென்னாபிரிக்கா அணி 1970க்குப் பிறகு தங்கள் சொந்த மண்ணில் அவுஸ்திரேலியாவை டெஸ்ட் தொடரில் வீழ்த்தி 3-1 என்ற கணக்கில் தொடரைக் கைப்பற்றியது.

88/3 என்று நேற்று தொடங்கிய இறுதிநாளாட்டத்தில் அவுஸ்திரேலியா 31 ஓட்டங்களுக்கு 7 விக்கெட்டுக்களை இழந்து 119 ஓட்டங்களுக்கு சுருண்டது. வெர்னன் பிலாண்டர் 13 ஓவர்கள் 5 மெய்டன்களுடன 21 ஓட்டங்களுக்கு 6 விக்கெட்டுக்கள் என்று தனது சிறந்த டெஸ்ட் பந்து வீச்சை பெறுதியை வெளிப்படுத்தினார். மோர்னி மோர்கல் 2 விக்கெட்டுகளைக் கைப்பற்றினார், அவர் இத்துடன் 309 டெஸ்ட் விக்கெட்டுக்களுடன் ஓய்வுபெற்றார்.

ஆட்டம் தொடங்கி ஒன்றரை மணி நேரத்துக்குள் சம்பிரதாயங்களை முடித்து வைத்தார் பிலாண்டர். கடைசியில் நேதன் லயன் ரன் அவுட் ஆக, இருதரப்பினரிடையேயும் கடும் வாக்குவாதங்களும் காயங்களும் தடைகளும் சர்ச்சைகளும் மிகுந்த, ஒரு டெஸ்ட் தொடர் முடிவுக்கு வந்தது. அவுஸ்திரேலியா ஆதிக்கமும் இத்துடன் முடிவுக்கு வந்தது.

அவுஸ்திரேலிய துடுப்பாட்ட வீரர்களில் ஒருவர் கூட 4 டெஸ்ட் போட்டிகளில் ஒரு சதம் கூட எடுக்காமல் முடிந்த அதிசயத்தொடரானது.

தென்னாபிரிக்க - அவுஸ்திரேலிய அணிகள் மோதிய 4ஆவதும் இறுதியுமான டெஸ்ட் ஜொகனஸ்பேர்க் நகரில் நடந்தது.

முதல் இன்னிங்சில் தென்னாபிரிக்கா 488, அவுஸ்திரேலியா 221 ஓட்டங்கள் எடுத்தன. இரண்டாவது இன்னிங்சில் தென்னாபிரிக்க அணி 344/6 ('டிக்ளேர்) ஓட்டங்கள் எடுத்தது. பின், 612 ஓட்டங்கள் எடுத்தால் வெற்றி என்ற கடின இலக்குடன் 2ஆவது இன்னிங்சை தொடங்கிய அவுஸ்திரேலிய அணி, நேற்று முன்தினம் 4ஆம் நாள் முடிவில், 3 விக்கெட்டுக்களை இழந்து 88 ஓட்டங்களை எடுத்திருந்தது. ஹேண்ட்ஸ்கோம்ப் (23), ஷோன் மார்ஷ் (7) ஆட்டமிழக்காமல் இருந்தனர்.

**பிலாண்டர் அசத்தல்**

நேற்றைய ஐந்தாம் நாள் ஆட்டத்தில், இரண்டாவது இன்னிங்சை தொடர்ந்த அவுஸ்திரேலிய அணிக்கு, பிலாண்டர் தொல்லை கொடுத்தார். இவரது 'வேகத்தில்' ஷோன் மார்ஷ் (7), மிட்சல் மார்ஷ்(0), ஹேண்ட்ஸ்கோம்ப் (24), அணித் தலைவர் ரிம் பெய்ன் (7), கம்மின்ஸ் (1), சேயர்ஸ் (0) ஆட்டமிழந்தனர். நேதன் லயன் (9) 'ரன்-அவுட்' ஆனார்.

இரண்டாவது இன்னிங்சில் அவுஸ்திரேலிய அணி, 119 ஓட்டங்களுக்கு சுருண்டு 492 ஓட்டங்களால் தோல்வியடைந்தது. ஹேசல்வுட் (9) ஆட்டமிழக்காமல் இருந்தார்.





பந்துவீச்சில் தென்னாபிரிக்கா சார்பில் அசத்திய பிலாண்டர் 21 ஓட்டங்களுக்கு 6 விக்கெட்டுக்களைச் சாய்த்தார்.

**492 ஓட்டங்கள்**

அவுஸ்திரேலியாவை வீழ்த்திய தென்னாபிரிக்க அணி, டெஸ்ட் அரங்கில் அதிக ஓட்டங்கள் வித்தியாசத்தில் (492 ஓட்.) தனது சிறந்த வெற்றியை பதிவு செய்தது. இதற்கு முன், 2007இல் நியூசிலாந்துக்கு எதிராக ஜொகன்னஸ்பேர்க்கில் நடந்த டெஸ்டில், 358 ஓட்டங்கள் வித்தியாசத்தில் வென்றிருந்தது தென்னாபிரிக்காவின் சிறந்த வெற்றியாக இருந்தது.

**48 ஆண்டுகளுக்கு பின்...**

கிண்ணம் வென்ற தென்னாபிரிக்க அணி, 48 ஆண்டுகளுக்கு பின், சொந்த மண்ணில் அவுஸ்திரேலியாவுக்கு எதிரான டெஸ்ட் தொடரை கைப்பற்றியது. கடைசியாக 1970இல் அவுஸ்திரேலியாவுக்கு எதிரான 4 போட்டிகள் கொண்ட டெஸ்ட் தொடரை 4-0 என, முழுமையாக வென்றிருந்தது. அதன் பின், தென்னாபிரிக்க மண்ணில் விளையாடிய 7 டெஸ்ட் தொடர்களில், 5இல் (1996-97, 2001-02, 2005-06, 2008-09, 2013-14) அவுஸ்திரேலியா கிண்ணம் வென்றது. இரண்டு (1993-94, 2011-12) தொடர்கள் சமனிலையில் முடிந்தன.

**மோர்கல் ஓய்வு**

இப்போட்டியுடன் தென்னாபிரிக்க வேகப் பந்துவீச்சாளர் மோர்னே மோர்கல், சர்வதேச கிரிக்கெட்டில் இருந்து ஓய்வை அறிவித்தார். கடந்த 2006 இல் இந்தியாவுக்கு எதிராக டேர்பன் டெஸ்டில் அறிமுகமான இவர், இது வரை 86 டெஸ்ட் (309 விக்கெட்), 117 ஒருநாள் (188 விக்கெட்), 44 சர்வதேச 'ரி20' (47 விக்கெட்) போட்டிகளில் பங்கேற்றுள்ளார்.

# ஹீரோவானார் சோதி; நியூசிலாந்துக்கு தொடர் வசமானது

## பிடிகள் தவறவிடப்பட இங்கிலாந்துக்கு மறுக்கப்பட்டது வெற்றி

கிறைஸ்ட்சேர்ச்சின் பரபரப்பான கடைசி நிமிடங்களில் ஜோ ரூட் என்னவெல்லாமோ செய்து பார்த்தார், பந்துவீச்சாளரைத் தவிர அனைவரும் மட்டையைச் சுற்றி நிறுத்தப்பட்டனர். ஆனால் விக்கெட் வந்தபாடில்லை. 256/8 என்ற நிலையில் வெற்றிக்கு அருகில் வந்தது. எனினும் இங்கிலாந்துக்கு வெற்றி மறுக்கப்பட்டது. ஆட்டம் சமனிலையாக நியூசிலாந்து தொடரை வென்றெடுத்தது. இங்கிலாந்து அணித் தலைவர் ஜோ ரூட் கடும் ஏமாற்றமடைந்தார்.

தளராது துணிவோடு இஷ் சோதி (56*) 168 பந்துகளையும் பந்துவீச்சாளர் நீல் வோக்னர் தனது 7 ஓட்டங்களுக்கு 103 பந்துகளை யும் சந்தித்து கடைசி சுமார் 100 நிமிடங்களைத் தாக்குப்பிடிக்க இங்கிலாந்துக்கு எதிரான 2 டெஸ்ட் கொண்ட தொடரை நியூஸிலாந்து 1-0 என்று கைப்பற்றியது.

கடைசி நிமிடங்களில் இஷ் சோதிக்கும் நீல் வோக்னருக்கும் ஷோர்ட் பிட்ச் பந்து வீச்சு சவால், ஸ்பின்னர்களுக்கு நெருக்கமான களவியூகம் என்று அனைத்தும் செய்யப்பட்டது. இதற்குப் பலனும் கிடைத்தது, சில எட்ஜ்களில் சுமார் 3 பிடிகளாவது தவறவிடப்பட்டன, சில பந்துகள் காற்றில் கைகளுக்கு அருகில் தாண்டிச் சென்று வலியை அதிகரித்தது.

ஸ்ருவேர்ட் பிரோட் இந்த டெஸ்ட் போட்டியில் அபாரமாக வீசினார், அதனை 2ஆவது இன்னிங்சிலும் தொடர்ந்து முதல் 2 பந்துகளிலேயே விக்கெட்டுக்களை சாய்த்து இங்கிலாந்துக்கு நம்பிக்கை அளித்தார்.

ஆனால் நியூஸிலாந்தின் ரொம் லேதம் (83), கொலின் டி கிராண்ட்ஹோம் (45) முதலில் முக்கிய பங்களிப்பு செய்ய பின்வரிசை உறுதியுடன் ஆடி தோல்வியைத் தவிர்த்துக் கொண்டது. நியூஸிலாந்து 1984க்குப் பிறகு இங்கிலாந்தை தங்கள் சொந்த மண்ணில் வீழ்த்தி டெஸ்ட் தொடரைக் கைப்பற்றியது.

ஜேம்ஸ் வின்ஸ், ரோஸ் ரெய்லர் (13) கொடுத்த பிடியை 3ஆவது ஸ்லிப்பில் தவறவிட்டார், ஆனால் 13 ஓட்டங்களில் ரெய்லர், இடது கை சுழற்பந்துவீச்சாளர் ஜேக் லீச்சிடம் வெளியேறினார். கொலின் டி கிராண்ட்ஹோமுக்கும் சோதிக்கும் மார்க் ஸ்டோன்மேன் பிடிகளை கோட்டைவிட்டார். கிராண்ட்ஹோம் 6 ஓட்டங்களிலும் சோதி பூச்சியத்திலும் அப்போது இருந்தனர். இது ஓரளவுக்கு கடினமான வாய்ப்பே என்றாலும் இருவரும் இணைந்து சுமார் 44 ஓவர்களை ஆடியபோதுதான் விட்டது பிடிகள் அல்ல போட்டி என்பதை உணர்த்தியிருக்கும்.



நேற்றும் காலை ஸ்ருவேர்ட் பிரோட் அபாரமாகத் தொடங்கினார், ஆனால் தொடக்க வீரர் ராவல் (17) ஹாஃப்வாலி பந்தை லெக் திசையில் மிட்விக்கெட்டில் நேராக ஸ்டோன்மனிடம் பிடி கொடுத்தார். இது ஒரு வோர்ம்-அப் பந்துதான் அதற்கே விக்கெட் ஆனால் அடுத்த பந்து உலகின் சிறந்த துடுப்பாட்ட வீரர்களில் ஒருவரான நியூஸிலாந்து அணித் தலைவர் கேன் வில்லியம்சனுக்கு போட்டது. அற்புதமான பந்து மட்டையின் வெளிவிளிம்பில் பட்டு பேர்ஸ்டோவிடம் பிடியானது கோல்டன் டக்கில் வெளியேறினார் கேன் வில்லியம்சன். ஹட்ரிக் பந்தை ரெய்லர் நிறுத்தினார். ரெய்லருக்கு பிடியை வின்ஸ் விட்டாலும் அவர் நீடிக்கவில்லை. இடது கை ஸ்பின்னர் ஜேக் லீச் (2/61) பந்தை ஸ்வீப் செய்யப்போய் ரொப் எட்ஜ் ஆகி வெளியேறினார்.

ஹென்றி நிகோல்ஸ் (13), ஜேம்ஸ் அண்டர்சன் பந்தை தளர்வான ஒரு டிரைவ் ஆடி ஸ்லிப்பில் பிடியாகி வெளியேறினார். பி.ஜே.வோட்லிங்கும் 19 ஓட்டங்களில் மார்க் வூட் பந்தை மிகவும் மோசமாக பிளிக் ஆடி பிடியாகி வெளியேறினார்.

ரொம் லேதம் ஒரு முனையில் 207 பந்துகளில் 83 ஓட்டங்கள் எடுத்து தாக்குப் பிடித்து வந்த நிலையில் ஸ்வீப் ஷொட்டில் ஜேக் லீச்சிடம் வீழ்ந்தார். வின்ஸ் இம்முறை அபாரமான டைவிங் பிடி எடுத்தது குறிப்பிடத்தக்கது.

அதன் பிறகுதான் இங்கிலாந்து பிடிகளை விட கொலின டி கிராண்ட் ஹோம், சோதி கூட்டணி அமைத்தனர். தேநீர் இடைவேளையின் போது 8 விக்கெட்டுகள் விழுந்திருக்க வேண்டியது 6 விக்கெட்டுகளுடன் நியூஸிலாந்து நம்பிக்கையுடன் சென்றது. டி கிராண்ட்ஹோம மார்க் வூட்டிடம் ஆட்டமிழந்தார், ஆனால் நீல் வோக்னர் 103 பந்துகள் வெறுப்பேற்றி கடைசியில் ஆட்டமிழந்தாலும் இங்கிலாந்து வெற்றி பெற முடியாததை சோதியும் இவரும் உறுதி செய்தனர். 256/8 என்றுடன் சமனிலையானது, நியூஸிலாந்து தொடரை வென்றது.

போட்டியின் ஆட்டநாயகன் ரிம் சௌதி, தொடர் நாயகன் டிரெண்ட் போல்ட்.

**அண்டர்சன் சாதனை**




டெஸ்ட் கிரிக்கெட்டில் 30 ஆயிரத்திற்கும் அதிகமான பந்துகளை வீசி இங்கிலாந்தின் ஜேம்ஸ் அண்டர்சன் உலக சாதனை படைத்துள்ளார்.

பலவேறு சாதனைகளை படைத்துள்ள இவர், தற்போது டெஸ்ட் போட்டியில் அதிக பந்துகளை வீசிய முதல் வேகப் பந்துவீச்சாளர் என்ற சாதனையை படைத்துள்ளார்.

இதற்குமுன் மேற்கிந்தியதீவுகளின் வோல்ஷ் 30,019 பந்துகள் வீசி சாதனை படைத்திருந்ததுடன் கிரிக்கெட்டில் 519 விக்கெட்டுக்களைக் வீழ்த்தியுள்ளார். அண்டர்சன நியூசிலாந்திற்கு எதிரான 2ஆவது டெஸ்டில் 50 ஓவர்கள் வீசினார். இதன்மூலம் 30,074 பந்துகள் வீசி வோல்ஷ் சாதனையை முறியடித்துள்ளார். இதுவரை இவர் 136 டெஸ்டில் 531 விக்கெட்டுக்கள் வீழ்த்தியுள்ளார்.

## பாதுகாப்புக் கட்டமைப்பை விரிவுபடுத்த இலங்கையின் உதவியை நாடும் ஜப்பான்

(கொழும்பு)

ஜப்பானின் சுய பாதுகாப்புப் படையின் நடவடிக்கைகளை தெற்காசிய நாடுகள் உட்பட ஏனைய நாடுகளின் படைத்தரப்பினருடன் விரிவுபடுத்த ஜப்பான் பாதுகாப்பு அமைச்சு திட்டமிட்டுள்ளது. இந்தத் திட்டத்தின் முதற் கட்டத்துக்காக இலங்கையின் உதவிகள் எதிர்ப்பார்க்கப்படுகிறது.

இதற்கமைய, ஜப்பான் பாதுகாப்பு அதிகாரிகள் இலங்கை அதிகாரிகளுடன் ஆலோசனைகளை நடத்தியுள்ளதாக தெரிவிக்கப்பட்டுள்ளது.

கடல்சார் பாதுகாப்பு செயற்பாடுகள் இதில் உள்ளடங்குவதாக தகவல்களை மேற்கோள்காட்டி தெரிவிக்கப்பட்டுள்ளது.

ஜப்பான் சுய பாதுகாப்புப் படையின் உயர் அதிகாரியும், கூட்டுப் படைகளின் தலைமை அதிகாரியுமான அட்மிரல் கட்சுடோஷிகவானோ கடந்த மார்ச் 8 முதல் 9 ஆம் திகதிகளில் இரண்டு நாட்கள் விஜயம் மேற்கொண்டிருந்தார்.

இதன்போது ஜப்பானின் திறன் மேம்பாட்டு உதவித் திட்டம் தொடர்பில் இலங்கை பாதுகாப்பு படைகளின் தலைமை அதிகாரியான அட்மிரல் ரவீந்திர விஜேகுணவர்தனவுடன் இணக்கப்பாட்டை ஏற்படுத்திக் கொண்டதாகவும் தெரிவிக்கப்பட்டுள்ளது. ஜப்பான் பாதுகாப்பு அமைச்சு கடந்த 2012 இல் ஆரம்பித்த இந்த திறன் மேம்பாட்டு உதவித் திட்டம் 14 நாடுகளில் நடை முறைப்படுத்தப்படுகிறது. (இ-7)

## ஜனாதிபதி உயிரிழப்பார் சோதிடருக்குச் சிக்கல்

(கொழும்பு)

ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன உயிரிழப்பார் என்று பொய்யாக கணித்துக் கூறிய சோதிடர் விஜித ரோஹண விஜயமுனிக்கு எதிராக சட்ட நடவடிக்கை எடுப்பதற்கு சட்டமா அதிபரிடம் ஆலோசனை பெற நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளதாக இரகசியப் பொலிஸார் நேற்று கொழும்பு நீதவான் நீதிமன்றில் தெரிவித்துள்ளனர்.

இது தொடர்பான மனு நேற்று கொழும்பு பிரதான நீதவான் லால் ரணசிங்க பண்டார முன்னிலையில் விசாரணைக்கு வந்த போது, இது தொடர்பான விசாரணைகள் தற்போது நிறைவடைந்துள்ளதாக இரகசியப் பொலிஸார் நீதிமன்றத்தில் தெரிவித்துள்ளனர்.

சந்தேகநபருக்கு எதிராக அடுத்த கட்ட நடவடிக்கைகள் எடுப்பது சம்பந்தமாக தீர்மானிப்பதற்கு சட்டமா அதிபரிடம் ஆலோசனை பெற தீர்மானித்துள்ளதாகவும், அதன்படி விசாரணை அறிக்கைகள் அனைத்தும் சட்டமா அதிபருக்கு அனுப்பி வைக்கப்பட்டுள்ளதாகவும் இரகசியப் பொலிஸார் நீதிமன்றத்தில் தெரிவித்துள்ளனர்.

அதன்படி இந்த மனுவை எதிர்வரும் ஜூலை 9 ஆம் திகதி மீண்டும் விசாரணைக்கு எடுக்க உத்தரவிட்ட நீதிபதி அன்றையதினம் விசாரணை முன்னேற்ற அறிக்கையை சமர்பிக்குமாறும் உத்தரவிட்டார். (இ-7)

## சித்திரைக் கொண்டாட்டம்

(யாழ்ப்பாணம்)

சிறுவர்களுக்கான சித்திரைக் கொண்டாட்டம் எதிர்வரும் 8 ஆம் திகதி தொடக்கம் 12 ஆம் திகதி வரை பிற்பகல் 3 மணிமுதல் இரவு 10 மணிவரை யாழ்.மாநகர சபை மைதானத்தில் நடைபெறும்.

இதில் தனி நடனம், குழு நடனம், விளையாட்டுக்கள் மாஜாயால வித்தைகள், சித்திரக் கண்காட்சி, கலாசார திருமண ஆடை அணிவகுப்பு, கார் ஓட்டப் போட்டி என்பன இடம்பெறும். (இ)


### கண்ணீர் அஞ்சலி



எமது கல்லூரியின் ஆசிரியை
திருமதி. மதிவதனி சிவானந்தநாதனின்
அன்பு மாமனார்
அமரர் சித்தர் வேலாயுதர்

31.03.2018 அன்று இறைபதமடைந்ததையிட்டு அன்னாரின் குடும்பத்தினருக்கு எமது ஆழ்ந்த அனுதாபங்களைத் தெரிவித்துக் கொள்வதுடன் அன்னாரின் ஆத்மா சாந்தியடைய இறைவனைப் பிரார்த்திக்கின்றோம்.

ஆசிரியர் நலன்புரிக் கழகம்,யாழ். கொக்குவில் இந்துக் கல்லூரி.

### அந்தியேட்டி சபிண்டீகரண அழைப்பு



மண்ணில் 26.11.1940
விண்ணில் 06.03.2018
அமரர் செல்லையா செல்வதி

கடந்த 2018.03.06 (செவ்வாய்க்கிழமை) இறைபதமடைந்த எமது இல்லத் தலைவி அமரர் திருமதி. செல்லையா செல்வதி அவர்களின் அந்தியேட்டிக் கிரியைகள் (2018.03.31) சனிக்கிழமை முற்பகல் 8 மணியளவில் கீரிமலை புனித தீர்த்தக் கரையில் நடைபெற்றது.

வீட்டுக்கிருத்தியக் கிரியைகள் (2018.04.05) வியாழக்கிழமை நண்பகல் 12 மணியளவில் அன்னாரது இல்லத்தில் நடைபெறும். அத்தருணம் தாங்களும் வருகை தந்து அன்னாரது ஆத்ம சாந்திப் பிரார்த்தனையிலும் அதனைத் தொடர்ந்து நடைபெறும் மதிய போசன நிகழ்விலும் கலந்து கொள்ளும் வண்ணம் தங்களை அன்புடன் அழைக்கின்றோம்.

தண்ணீரூற்று மேற்கு, முள்ளியவளை.

இங்ஙனம் குடும்பத்தினர்.

### 45ம் நாள் நினைவஞ்சலி

அமரர் யோகேஸ்வரராஜா இதயராஜா அவர்களின் மறைவுச் செய்தி கேட்டு உடனடி உதவிகளை வழங்கிய உற்றார், உறவினர், நண்பர்கள், அயலவர்களுக்கும், தொலைபேசி, முகநூல் மூலம் ஆறுதல் தெரிவித்தோருக்கும், மலர்வளையம் சாத்தி அனுதாபங்களைத் தெரிவித்தோருக்கும், துண்டுப் பிரசுரங்கள், பத்திரிகை ஊடாக அனுதாபங்களை வெளியிட்ட அனைத்து நிறுவனங்களுக்கும் - உள்ளங்களுக்கும் எமது இதயபூர்வமான நன்றிகளைத் தெரிவித்துக்கொள்கின்றோம்.



அமரர் யோகேஸ்வரராஜா இதயராஜா

தோற்றம்: 04.04.1982
மறைவு: 19.02.2018

இன்று (04.04.2018) புதன்கிழமை எமது இல்லத்தில் மு.ப. 10.00 மணியளவில் நடைபெறும் ஆத்ம சாந்திப் பிரார்த்தனையிலும் அதனைத் தொடர்ந்து இடம்பெறும் மதியபோசனத்திலும் கலந்துகொள்ளுமாறு உற்றார்,உறவினர், நண்பர்கள், அனைவரையும் அன்புடன் அழைக்கின்றோம்.

இந்த அழைப்பை தனிப்பட்ட அழைப்பாக ஏற்றுக்கொள்ளவும்

(3434)

இராமுப்பிள்ளை வீதி, கொக்குவில் மேற்கு.

பிரிந்தநாள் நினைவலைகளுடன் குடும்பத்தினர்


## இராசி பலன்

**மீனம்:** தடைகள் விலகி தனவரவுகள் கிடைக்கும் நாள், எதிர்காலம் குறித்து முக்கிய முடிவுகள் எடுப்பீர்கள், தேக நலன் சிராகும், பித்த சம்பந்தமான ரோக பயமுண்டு.

**மேடம்:** குடும்பத்தில் குழப்பங்கள் தோன்றி மறையும், யோசித்துச் செயற்பட வேண்டிய நாள், ஆரோக்கியத்தில் கவனம் தேவை, பிரயாண பயமுண்டு.

**இடபம்:** பெண்களால் பெருமைகள் வந்து சேரலாம், குடும்பத்தில் சுகங்களும், சந்தோசங்களும் அதிகரிக்கும், கடன் தொல்லைகள் குறையும்.

**மிதுனம்:** வியாபார விருத்தியுண்டு, அடுத்தவர் நலனில் அதிக அக்கறை காட்டுவீர்கள், கலகலப்பான தகவல்கள் வந்து சேரலாம், கனவு பலிதமுண்டு.

**கும்பம்:** எடுத்த காரியத்தை முடிக்க அதிக பிரயாசை காட்டுவீர்கள், அருமையான நாள், வசதி வாய்ப்புக்களைப் பெருக்கிக்கொள்ள முற்படுவீர்கள்.

**கடகம்:** ஊக்கத்தோடும் உற்சாகத்தோடும் பணிபுரிவீர்கள், பிரபலமானவர்களின் சந்திப்பால் பெருமையடைவீர்கள், பொருளாதார முன்னேற்றமுண்டு.

**மகரம்:** இலாபகரமான நாள், பலரது அன்பிற்கும் பாத்திரமாவீர்கள், வியக்கும் செய்திகள் வந்து சேரலாம், பயணங்கள் கைகூடும் வாய்ப்புண்டு.

**சிம்மம்:** வியாபார விருத்திக்கு வித்திடுவீர்கள், எப்படி நடக்குமோவென நினைத்த காரியமொன்று நல்லவிதமாக அமையலாம், தொலைபேசி வழியில் சுப தகவல்கள் வந்து சேரலாம்.

| | | | |
|---|---|---|---|
| சூரி, புத | சுக் | | |
| | இராசி பலன் | | ராகு |
| கேது | கிரகநிலை சந்திராஷ்டமம் அச்சுவினி | | |
| சனி, செவ் | குரு, சந் | | |

**04.04.2018**
பங்குனி 21, புதன்கிழமை
சூரிய உதயம் காலை 6.12 மணிக்கு
சதுர்த்தி முன்னிரவு 7.09 மணிவரை
விசாகம் முற்பகல் 8.53 மணிவரை
சுபநேரம் 4.40-6.10 மணிவரை
இராகுகாலம் 12.10-01.40 மணிவரை
சங்கடகர சதுர்த்தி விரதம்,
சித்தாமிர்தம்

வளவன்

**தனுசு:** அதிகாரிகளை அனுசரித்துச் செல்வது நல்லது, வழிபாடு வளர்ச்சியைக் கூட்டும், சுப செலவுகள் அதிகரிக்கும் நாள், ஊர் மாற்றம், இடமாற்றம் என்பன இடம்பெறலாம்.

**விருச்சிகம்:** வழிபாட்டால் பெருமை காண வேண்டிய நாள், தொழிலில் புதிய கூட்டாளிகள் வந்து இணைவர், தொலைபேசி வழியில் அனுகூலம் தரும் செய்திகள் வந்து சேரலாம்.

**துலாம்:** புதிய பொறுப்புக்களும் பதவிகளும் வந்து சேரலாம், தொழில் வளர்ச்சியுண்டு, பெரிய மனிதர்களின் ஒத்துழைப்பு கிடைக்கும், பணப் புழக்கம் அதிகரிக்கும்.

**கன்னி:** உயர்வான சிந்தனைகள் மனதில் தோன்றும், உடன் பிறப்புக்களின் ஒத்துழைப்புக்கள் கிடைக்கும், நீண்டநாளைய பிணக்குகளில் திருப்பங்கள் ஏற்படலாம்.

# அடுத்தவரை இடையூறு செய்யாமல் வழிபாடுகளை மேற்கொள்வது சிறந்தது

## நீதிபதி இளஞ்செழியன் சுட்டிக்காட்டு

(யாழ்ப்பாணம்)

கடவுளின் காது மிகக் கூர்மையானது. எனவே அடுத்தவரை இடையூறு செய்யாமல் வழிபாடுகளை மேற்கொள்வது சிறந்தது என யாழ்.மேல் நீதிமன்ற நீதிபதி மா.இளஞ்செழியன் தெரிவித்தார்.

நாயன்மார்கட்டு பகுதியில் அமைந்துள்ள மதவழிபாட்டு ஸ்தலத்தில் இடம்பெறும் வழிபாட்டு நிகழ்வில் அதிகூடிய சத்தம் எழுப்பி வழிபடுவதாகவும் இதனால் பல துன்பங்களை அனுபவிப்பதாக நபர் ஒருவர் யாழ்.மேல் நீதிமன்றில் தாக்கல் செய்த மனு தொடர்பான விசாரணை நேற்று முன்தினம் யாழ்.மேல் நீதிமன்றில் எடுத்துக் கொள்ளப்பட்டது. இதன்போதே அவர் மேற்கண்டவாறு தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்,

கடவுள் காது கூர்மை உடையவர். அவரை அமைதியான முறையில் வழிபடலாம். எங்கள் உரிமை, மத வழிப்பாட்டு உரிமை என்பன மற்றவர்களுக்கு இடையூறு விளைவிக்கக் கூடாது.

தற்போது ஆலயங்களில் ஒலிபெருக்கி பாவனைகள் கணிசமான அளவு குறைந்துள்ளது. கடவுளை அமைதியாக மற்றவர்களுக்கு மற்ற மதத்தினருக்கு இடையூறு விளைவிக்காத வகையில் வணங்குங்கள் என தெரிவித்தார்.

இதேவேளை எதிர்வரும் மே மாதம் 30 ஆம் திகதிக்கு குறித்த வழக்கை தீர்ப்புக்காக ஒத்திவைத்தார். (இ-9)

# இ.போ.ச.நடத்துநர்கள் ஐவரையும் மீளவும் பணியில் அமர்த்த உத்தரவு

(யாழ்ப்பாணம்)

முறைகேடு குற்றச்சாட்டில் பணி நீக்கம் செய்யப்பட்ட இ.போ.ச. நடத்துநர்கள் 5 பேரையும் மீளவும் பணியில் இணைப்பதற்கு யாழ்.மேல் நீதிமன்ற நீதிபதி மா.இளஞ்செழியன் உத்தரவிட்டுள்ளார்.

இலங்கை போக்குவரத்து சபையின் வடபிராந்திய சாலையில் பேருந்து சேவைகளில் பணியாற்றும் நடத்துநர்கள் 5 பேர், கடமையில் ஈடுபட்டிருந்த போது மேற்கொள்ளப்பட்ட சோதனையின் போது முறைகேடாகச் செயற்பட்ட குற்றச்சாட்டில் பணி இடைநீக்கம் செய்யப்பட்டனர்.

யாழ்ப்பாணம் - மன்னார் சேவைக்கு பயணி ஒருவரிடம் 6 ரூபா 50 சதத்துக்கு கட்டணச் சீட்டு வழங்கியமை (நியம கட்டணத் தொகைக்கு குறைவான கட்டணத்தை அறவிட்டமை), பணத்தைப் பெற்றுக்கொண்டு கட்டணச் சீட்டு வழங்காமை, கட்டணச் சீட்டுகளில் குறிக்கப்பட்ட பணத்தின் தொகைக்கும் கையில் வைத்திருந்த பணம் மீதிக்கும் இடையே குறை அல்லது அதிகம் காணப்பட்டமை உள்ளிட்ட குற்றச்சாட்டுக்களின் கீழ் அவர்கள் 5 பேருக்கும் நிர்வாக ஒழுக்காற்று குற்றப்பத்திரிகை முன் வைக்கப்பட்டது.

அது தொடர்பில் நடைபெற்ற ஒழுக்காற்று நடவடிக்கையின் போது அவர்கள் மீதான விசாரணையின் பின்னர் 5 பேரும் பணி நீக்கம் செய்யப்பட்டனர்.

தமக்கு மீளப் பணி வழங்கப்பட வேண்டும் எனவும், இழப்பீடு மற்றும்சம்பள நிலுவை வழங்கப்பட வேண்டும் எனவும் கோரி யாழ்ப்பாணம் தொழில் நியாய சபையில் நடத்துநர்கள் 5 பேரும் வழக்குத் தாக்கல் செய்தனர்.

விசாரணைகளின் பின்னர் 5 நடத்துநர்களின் விண்ணப்பங்களையும்ஏற்றதொழில் நியாய சபை அவர்களுக்கு சார்பான தீர்ப்பொன்றை வழங்கியது.

தொழில் நியாய சபையின் தீர்ப்புக்கு ஆட்சேபனை தெரிவித்து பிரதிவாதியான இ.போ.ச. வட பிராந்திய போக்குவரத்து சபை, யாழ்ப்பாணம் மேல் நீதிமன்றில் 5 பேரையும் எதிர்மனுதாரர்களாக குறிப்பிட்டு மேன்முறையீட்டு மனு தனித்தனியே தாக்கல் செய்தது. அதில் 5 பேருக்கு எதிரான மேன்முறையீட்டு மனுக்கள் மீது நேற்று முன்தினம் கட்டளை வழங்கப்பட்டது.

குறித்த கட்டளையில் உயர் நீதிமன்றில் வழங்கப்பட்ட தீர்ப்பின் அடிப்படையில், அரச பணியில் உள்ள ஒருவர் முறைகேடு செய்கின்றாராயின், அது பாரதூரமானதாக காணப்படுவது அவசியமாகும். எனினும் இந்த 5 பேரும் மேற்கொண்ட முறைகேட்டை இந்த நீதிமன்று பாரதூரமான முறைகேடாக எடுத்துக் கொள்ளாமல் தவறு என எடுத்துக் கொள்கிறது. எனினும் 5 பேரும் மேற்கொண்ட செயற்பாடானது அரச பணத்துக்கு அல்லது சொத்துக்கு இழப்பு விளைவிப்பதாகும்.

எனவே வடபிராந்திய போக்குவரத்துச் சபை எச்சரிக்கை செய்து நடத்துநர்கள் 5 பேரையும் மீள சேவையில் இணைக்குமாறு இந்த நீதிமன்று கட்டளையிடுகின்றது.

பணி நீக்கம் செய்யப்பட்ட காலப்பகுதியையும் சேவைக் காலமாக இணைக்குமாறும் மன்று கட்டளையிடுகின்றது. எனினும் 5 பேராலும் கோரப்பட்ட இழப்பீட்டுத் தொகையையும் பணி நீக்க காலப் பகுதிக்கான சம்பளத்தையும் வழங்கவேண்டிய கட்டாய தேவை காணப்படவில்லை என்பதால் அதனை வடபிராந்திய போக்குவரத்துச் சபை வழங்கத் தேவையில்லை.

அத்துடன் தொழில் நியாய சபையால் வழங்கப்பட்ட தீர்ப்பை திருத்தங்களுடன் இந்த மன்று உறுதி செய்கிறது என யாழ்.மேல் நீதிமன்ற நீதிபதி மா.இளஞ்செழியன் உத்தரவிட்டார். (இ-9)

# மாபெரும் மருத்துவக் கண்காட்சி யாழ்.பல்கலையில் இன்று ஆரம்பம்

(யாழ்ப்பாணம்)

யாழ்.பல்கலைக்கழக மருத்துவபீடமானது தனது 40 ஆவது வருட பூர்த்தியை முன்னிட்டு வடமாகாண சுகாதார அமைச்சுடன் இணைந்து, உள்நாட்டு, வெளிநாட்டு யாழ்.மருத்துவபீட பழைய மாணவர் சங்கங்கள் மற்றும் இவலூஷன் பிறைவட் லிமிட்டடின் பங்களிப்போடு மாபெரும் மருத்துவக் கண்காட்சியை இன்று காலை 9 மணிக்கு யாழ்.மருத்துவபீட வளாகத்தில் ஏற்பாடு செய்துள்ளது.

மேற்படி கண்காட்சியை வடக்கு மாகாண சுகாதார அமைச்சர் வைத்திய கலாநிதி ஜி.குணசீலன் பிரதம விருந்தினராகக் கலந்து கொண்டு ஆரம்பித்து வைப்பார்.

மேற்படி கண்காட்சியானது அடிப்படை உயிரியல்விஞ்ஞானம், நடைமுறை சவால்கள், நவீன மருத்துவ தொழில்நுட்பம், துறை வழிகாட்டல், குழந்தை, இளமைப்பருவ, வளர்ந்தோர் மற்றும் வயோதிப உடல், உள, ஆரோக்கியமும் அவர்கள் எதிர்கொள்ளும் சவால்களும் எனும் பிரதான தலைப்புகளினூடும் அவற்றிக்கூடாக பல உபதலைப்புக்களின் மூலமும் காட்சிப்படுத்தப்படவுள்ளது.

இத்தோடு மருத்துவம் சார்ந்து நின்றுவிடாது கண்காட்சியை முன்னிட்டு புகைப்படப் போட்டி, பாடசாலை மாணவர்களுக்கான விநாடிவினாப் போட்டியும் அவற்றிற்கு பெறுமதியான பரிசில்களும் வழங்கப்படவுள்ளன. வயதுஎல்லைகளின்றி அனைவரும்வருகை தந்து பயன்பெறக் கூடிய வகையில் கண்காட்சியானது வடிவமைக்கப்பட்டுள்ளது.

மேலும் காட்சிப்படுத்தல்கள், விழிப்புணர்வுகள், விளக்கவுரைகளோடு மட்டும் நின்றுவிடாமல் இலவச அடிப்படை மருத்துவ பரிசோதனைகள் அதனூடாக விளக்கங்களும் தேவைப்படின் மேலதிக பரிசோதனைகள் பெற்றுக் கொள்ளக்கூடிய இடங்களும் இங்கு விளங்கப்படுத்தப்படவுள்ளன.

இக் கண் காட்சியானது எதிர்வரும்7 ஆம் திகதி வரை நடைபெறும் என்பதுடன் இதற்கு முன் யாழ்.மருத்துவபீட கண்காட்சியானது 2012ஆம் ஆண்டில் நடைபெற்றமை குறிப்பிடத்தக்கது. (இ-9-312)

# முன்னணி தனியார் கம்பனி ஒன்றின் 250 தொழில் வெற்றிடங்களுக்கான ஆட்சேர்ப்பு 10ஆம் திகதி யாழ்ப்பாணத்தில்

(யாழ்ப்பாணம்)

யாழ்ப்பாண மாவட்டத்தில் தொழில் தேடுவோருக்கான தொழில் வாய்ப்புக்களைபெற்றுக்கொடுக்கும்நோக்கில்மாவட்ட பொதுமக்கள் தொழில் சேவை மத்திய நிலையம் நடைமுறைப்படுத்தி வரும் நடவடிக்கைகளின் தொடர்ச்சியாக நாடுமுழுவதும் கிளைகளைக் கொண்டுள்ள முன்னணி தனியார் கம்பனி ஒன்றின் 250 வரையிலான தொழில் வெற்றிடங்களுக்கு ஆட்களை தெரிவு செய்வதற்கான நேர்முகத் தேர்வு யாழ்ப்பாணத்தில் இம்மாதம் 10ஆம் திகதி காலை 8 மணிமுதல் மாலை 2 மணிவரை நடத்தப்படவுள்ளது.

இந் நேர்முகத் தேர்வில் கலந்துகொள்ள விரும்பும் க.பொ.த.சாதாரண தரத்தில் 5 பாடங்கள் அல்லது அதற்கு மேற்பட்ட தரத்தினில் சித்தியடைந்தவர்கள் மற்றும் க.பொ.த. உயர்தரம் கற்றவர்கள் மற்றும் சித்தியடைந்த 40 வயதிற்குட்பட்ட ஆண் மற்றும் 24 வயதிற்குட்பட்ட பெண் விண்ணப்பதாரிகள் நேர்முகத் தேர்வில் பங்கு பற்றி தொழில் வாய்ப்பினைப் பெற்றுக்கொள்ளலாம் என்பதை அறியத்தருவதோடு மேலதிக விளக்கங்கள், அறிவுறுத்தல்களை 021 221 9359 இலக்க அலுவலக தொலைபேசி ஊடாக அல்லது மாவட்டச் செயலகத்தின் பொதுமக்கள் தொழில் சேவை மத்திய நிலையம் பிரதேச செயலக மனிதவள அபிவிருத்தி உத்தியோகத்தர்களிடம் நேரடியாக பெற்றுக்கொள்ளலாம் என யாழ்.மாவட்ட அரசாங்க அதிபர் நா.வேதநாயகன் அறிவித்துள்ளார். (இ)

# க.பொ.த.(சா/த)பரீட்சைப் பெறுபேறுகள்

**யா/ஆனைக்கோட்டை பாலசுப்பிரமணிய வித்தியாலயம்**

ம.அஜித்-7ஏபிசி, ஜெ.இசையழகி-2ஏ2பி4சிஎஸ், வி.கஜநந்தினி-2ஏபி4சிஎஸ், ச.பகீரதன்-ஏபிசி5எஸ், ச.தக்ஷி-2பி3சி3எஸ், ம.விதுஷன்-பி3சி4எஸ்.

**யா/யூனியன் கல்லூரி தெல்லிப்பழை**

சி.தசாங்கி-8ஏபி, இ.வினிதா-8ஏபி, மோ.சஞ்சீபன்-8ஏசி, பா.செளதமி-8ஏஎஸ், இ.கிருசன்-7ஏபிசி, தி.தேவசாயினி-7ஏபிசி, ந.கிசோக்-6ஏ2பிசி, இ.கார்த்திகாயினி-6ஏ2பிஎஸ், யோ.ஜனுசிகா-6ஏபிசிஎஸ், யே.ஜக்சீதன்-6ஏ3சி, சு.விதுஷ்ரன்-5ஏ2பிசி, ச.வேணுமிதா-5ஏபி2சிஎஸ், இ.சுஜீபா-5ஏ3சிஎஸ், ஜெ.கிருத்திகா-4ஏ3பிசிஎஸ், தி.சபீனா-4ஏ3பிசிஎஸ், ப.கபிலன்-4ஏ2பி2சி, ச.சுஜிதா-4ஏ2பி2சி, செ.யுவன்யா-4ஏ2பிசிஎஸ், ச.டினுஜன்-4ஏபி3சிஎஸ், செ.திவியா-4ஏபி2சிஎஸ்.


**யா/ஆவரங்கால் நடராஜ இராமலிங்க வித்தியாலயம்**

சு.ஸ்ரீபதி-8ஏசி, ஜோ.சங்கீர்த்தனா-5ஏ3பிசி, வி.ரெனிஸ்ரன்-5ஏ3சி, எஸ்.சுதர்சன்-4ஏ3சிஎஸ், எஸ்.சிவரமணி-3ஏ4பிசிஎஸ், ரி.கேமிஷா-3ஏ2பி3சிஎஸ், எஸ்.சாயிஷா-3ஏ2பி2சி2எஸ், எஸ்.சாமீனா-3ஏபி2சி2எஸ், ரி.தலக்சனா-3ஏபிசி2எஸ்.

**யா/வைத்தீஸ்வரா... யா/நடேஸ்வர... **

**யா/நெல்லியடி? புத்துக்குமாரசுவாமி மகா வித்தியாலயம்**

ப.விதுர்ஷன்-9ஏ, சி.சுபாங்கன்-8ஏபி, த.தவவாசன்-8ஏபி, த.பிரவீனா-8ஏபி, பா.லாவணிசா-6ஏ3பி, கு.கயோதினி-6ஏ2பிசி, இ.அபிநயா-5ஏ4பி, அ.இஷாளினி-5ஏ3பிசி, தி.கோணேஸ்வரன்-5ஏ3பிஎஸ், அ.செளமிகன்-5ஏ3பிஎஸ், இ.திலக்ஷன்-4ஏ4பிசி, ம.யதுசிகன்-3ஏ2பி2சி2எஸ், சு.சுஜீவன்-3ஏபி2சி2எஸ், கி.பவப்பிரியங்கா-2ஏ2பி2சி2எஸ், ற.அனோஜன்-2ஏ2பி4சி, கு.சிவானுஜன்-2ஏ3பி4சி, ஜெ.விதுஷன்-2ஏபி4சி2எஸ், ம.எழிற்செல்வன்-ஏ3பி3சி2எஸ், பா.ஸ்நேகா-ஏ2பிசி5எஸ், ம.சபீனா-ஏபி2சி3எஸ், பி.நிரோஜன்-ஏ2சி5எஸ், சி.யதுர்ஷன்-பி2சி4எஸ், ம.தனுசிகா-பி3சி3எஸ், இ.ஆகாஸ்குமார்-3சி3எஸ்.




# சங்கடஹர சதுர்த்தி விரதம்

(யாழ்ப்பாணம்)

யாழ். வண்ண வடகிழக்கு கலட்டி ஸ்ரீ வீரகத்தி விநாயகர் ஆலயத்தில் இன்று புதன்கிழமை மாலை 4.30 மணிக்கு சங்கடஹர சதுர்த்தி விரத அபிஷேகம் ஆரம்பமாகி மூல மூர்த்தி பூஜை, வசந்த மண்டப பூஜையுடன் விநாயகப் பெருமான் உள்வீதி வலம் வருவார். (இ)



யாழ். சுழிபுரம் வடக்கு ஆறுமுக வித்தியாலய அதிபரும் காலையடி மறுமலர்ச்சி மன்றத்தின் முன்னாள் தலைவருமான சு. திருக்கேஸ்வரனின் அஞ்சலி நிகழ்வு கடந்த முதலாம் திகதி காலையடி மறுமலர்ச்சி மன்றத்தில் இடம்பெற்றது.

# தமிழ் -சிங்கள புதுவருடப்பிறப்பிற்காக விடுமுறை தினங்களில் கடைகள் திறத்தல்

(யாழ்ப்பாணம்)

எதிர்வரும் தமிழ், சிங்கள புத்தாண்டு வருடப்பிறப்பை முன்னிட்டு பொதுமக்கள் மற்றும் வாடிக்கையாளர்களின் நன்மை கருதி யாழ்ப்பாண நகரில் அமைந்துள்ள வர்த்தக நிலையங்கள் 03.04.2018 ஆம் திகதி முதல் 15.04.2018 ஆம் திகதி வரையிலான காலப்பகுதிகளில் உள்ள விடுமுறை நாட்கள் மற்றும் ஞாயிறு தினங்களில் வர்த்தகம் செய்வதற்கு ஏற்ற வகையில் வர்த்தக நிலையங்களை திறந்து வியாபாரத்தில் ஈடுபடுமாறு யாழ்.வணிகர் கழகத் தலைவர் இ.ஜனக்குமார் அறிவித்துள்ளார். (இ)

# ஊஷா ஏஜென்சி



SPECIAL OFFER

Usha கூரை மின் விசிறிகள் மூன்று வர்ணங்களில்

**5000-4500/=**

முன்னணி விற்பனையாளர்களின் வெப்பகால அதிரடி - விலைக் கழிவு



021 492 3393

No.62/32, Stanley Road, Jaffna.

(சி-2102)

# கல்யாணமாலை

## சர்வதேச திருமண சேவை

### இவர்களுக்கு மணமகள் தேவை

பிறப்பு: 1984 இந்து
நட்சத்திரம்: அத்தம்
உயரம்: 5'4"
தகைமை/தொழில்:BSc, MSc
கடைமுகாமையாளர்
தொ.இ: B/7428

பிறப்பு: 1987 இந்து
நட்சத்திரம்: சித்திரை
கி.பா: சூரி செவ் 10 இல்
உயரம்: 5'9"
தகைமை/தொழில்:BSc/
பொறியியலாளர்
தொ.இ: B/7429

பிறப்பு: 1986 இந்து
நட்சத்திரம்: சதயம்
கி.பா: செவ் 8 இல்
உயரம்: 5'8"
தகைமை/தொழில்:BCA/தனியார் தொழில்
தொ.இ: B/7430

பிறப்பு: 1980 இந்து
நட்சத்திரம்: கேட்டை
கி.பா: 34
உயரம்: 5'5"
தகைமை/தொழில்:HNDA/லண்டன் NOT PR
தொ.இ: B/6896

### இவர்களுக்கு மணமகன் தேவை

பிறப்பு: 1986 இந்து
நட்சத்திரம்: பரணி
கி.பா: 30
உயரம்: 5'8'
தகைமை/தொழில்: BA
தொ.இ: G/4104

பிறப்பு: 1989 இந்து
நட்சத்திரம்: உத்தரட்டாதி
கி.பா: 46 செவ் 2 இல்
உயரம்: 5'5"
தகைமை/தொழில்: பட்டதாரி
தொ.இ: G/4105

பிறப்பு: 1993 இந்து
நட்சத்திரம்: கேட்டை
கி.பா: 43 செவ் 12 இல்
உயரம்: 5'1"
தகைமை/தொழில்:HND IT
எதிர்பார்ப்பு: வெளிநாடு மட்டும்
தொ.இ: G/5598

பிறப்பு: 1983 இந்து
நட்சத்திரம்: பூராடம்
கி.பா: 15
உயரம்: 5'3"
தகைமை/தொழில்:A/L
தொ.இ: G/4106

கல்யாணமாலை
இல. 144, பிறவுண் வீதி, யாழ்ப்பாணம்
தொடர்பு:- 021 720 1005, 021 221 5434
E-mail:- kalyanamalai.jaffna@gmail.com
அலுவலக நேரம்:- காலை 9 மணி தொடக்கம் மாலை 5 மணிவரை
விடுமுறை தினம்:- ஞாயிற்றுக்கிழமை
பதிவுக் கட்டணம் 1000 ரூபாவுடன் தொலைத்தொடர்பு சேவைக் கட்டணமாக ரூபா 300 அறவிடப்படும்.

# மணமகள் தேவை

1984 யாழ் இந்து கௌரவ குடும்பத்தில் பிறந்த சுய தொழில் புரியும் மணமகனுக்கு மணமகள் தேவை.

தொடர்பு:- 077 812 1713, 0771129998

வலம்புரி
விளம்பரத் தொடர்புகளுக்கு:
021 221 7603,
021 567 1532

# UNIVERSITY OF CAMBRIDGE ENGLISH COURSES @

## Jaffna College - Undergraduate Department

### in Collaboration with British College of English

எமது வகுப்புக்களில் இணைந்து வாழ்நாள் முழுவதும் பயன்படும் கல்வித் தகைமையை பெற்று பயனடையுங்கள்.

## IELTS

எமது கல்வி நிலையம் British Council இன் அங்கீகாரம் பெற்ற Registration Centre ஆகும்.

எம்மிடம் IELTS கல்வி கற்பவர்களுக்கு நாம் வழங்கும் விசேட சலுகைகள்.

இலவசமாக 2 நூல்கள் வழங்கப்படும்.
British Council இன் Library இல் சென்று நூல்களை வாசிக்க அனுமதி அட்டை
விரும்பிய நேரம் Listening வந்து செய்யக்கூடிய வசதிகள்.

**OUR TARGET IS BAND : 9**

British Council ஒவ்வொன்றும் £ 3000 பவுண்ட்ஸ் பெறுமதியான ஆறு Scholarship களை இந்த ஆண்டில் 2017-2018 வழங்குகின்றது.

**Application Dead Line - 31.05.2018**

Six scholarships* each worth £3,000 will be awarded to students applying to any of the following countries

UK | Australia | Canada | New Zealand | USA




இன்றே எமது வகுப்புக்களில் இணைந்து அதிக புள்ளிகளைப் பெற்று Scholarship ஒன்றை வென்றிடுங்கள்.

வகுப்புக்கள் 04.04.2018 இல் ஆரம்பம்.

- சுமார் 40 இலட்சம் மாணவர்கள் ஆண்டு தோறும் Cambridge பரீட்சைகளை எடுக்கின்றனர்.
- சுமார் 13000 பல்கலைக்கழகங்கள் Cambridge ஆங்கிலப் பரீட்சைகளை தமது அனுமதிக்காக ஏற்றுக்கொள்கின்றன.
- 40000 கல்லூரிகளும் நிறுவனங்களும் மாணவர்களை Cambridge பரீட்சைக்காக ஆயத்தப்படுத்துகின்றனர்.

**Cambridge ன் இரண்டு பாடநெறிகளை 04.04.2018 இல் ஆரம்பிக்கின்றோம்**

## Cambridge - Prelimnary English Test (PET)

- இது ஓர் Intermediate B1. Level பரீட்சையாகும். U.K இல் பல கல்லூரிகளும் பல்கலைக்கழகங்களும் இதனை பல்கலைக்கழக அனுமதிக்காக ஏற்றுக்கொள்கின்றன.
- நீங்கள் IELTS பரீட்சை எடுப்பதற்கு விரும்புவீர்களானால், போதிய ஆங்கில அறிவு உங்களிடம் இல்லையேல் முதலில் PET பாடநெறியைப் பின்பற்றி பின் IELTS வகுப்பில் சேர்க இலகுவாக இருக்கும்.

It covers all four language skills (Reading, Writing, Listening and Speaking) and knowledge of grammar and vocabulary.

**Exam Date : 15.06.2018**
**Centre - British Council Colombo.**

## FCE Cambridge First Certificate in English

FCE is an upper intermadiate level exam. It tests the ability to deal confidently with a range of written and spoken. communication. FCE is the most widely taken of the general English exam with over 250,000 candidates every year. This exam is at CEFR Level B2

இது ஒரு சர்வதேசப் பரீட்சையாகும் International Exam. 15000 ற்கு மேற்பட்ட கல்வி நிறுவனங்களும் Employers ம் FCE யை ஏற்றுக்கொள்கின்றன. உலகத்தின் எந்த ஒரு இடத்திலும் சிறந்த ஓர் வேலை வாய்ப்பினைப் பெற்றுக் கொள்ள அதியுயர்ந்த தகுதியாகும். இது ஒரு வாழ்நாள் முதலீடு.

**Exam Date : 15.06. 2018**
Centre - British Council Colombo

It covers all four skills Reading and Use of English, Writing, Listening - Speaking

வகுப்புக்கள் ஆரம்பம் - 04.04.2018

| Course Schedule | Monday, Tues, Wed, Thurs 11.00 - 1.00 pm | Sat & Sunday 3.00 pm - 6.00 pm |
|---|---|---|

**Jaffna College - Undergraduate Department**

**No: 464, Hospital Road, Jaffna.**
**T.P: 021 222 0384, 077 880 3887**






முன்னாள் ஜனாதிபதியும் தேசிய நல்லிணக்க செயலகத்தின் தலைவியுமான சந்திரிகா பண்டாரநாயக்க குமாரதுங்க நேற்று கிளிநொச்சிக்கு விஜயம் மேற்கொண்டு தேசிய நல்லிணக்க செயலகத்தின் நிதியுதவியின்கீழ் மேற்கொள்ளப்பட்ட அபிவிருத்திப் பணிகளை ஆரம்பித்துள்ளார்.

நேற்று காலை பளை பிரதேசத்தில் பளை இந்து ஆரம்ப பாடசாலையின் வகுப்பறை கட்டடத்தை திறந்து வைத்த பின்னர் கிளிநொச்சி கரைச்சி பிரதேசத்தில் கரைச்சி தெற்கு பலநோக்கு கூட்டுறவுச் சங்கத்திற்கு ஐந்து மில்லியன் ரூபா செலவில் அமைக்கப்பட்ட உணவு பதனிடல் நிலையத்தையும் திறந்து வைத்துள்ளதோடு, வட்டக்கச்சி மற்றும் முழங்காவில் பிரதேசத்தில் தேசிய நல்லிணக்கத்தின் செயலகத்தின் நிதியுதவியில் அமைக்கப்பட்ட அபிவிருத்தி திட்டங்களையும் மக்களின் பாவனைக்கு திறந்து வைத்துள்ளார். (படங்கள்-பரந்தன் செய்தியாளர்)

# விசேட கடன் திட்டங்களை வழங்க அடுத்தமாதம் முதல் திட்டமிட்டுள்ளோம்

## கிளிநொச்சியில் முன்னாள் ஜனாதிபதி சந்திரிகா தெரிவிப்பு

(கண்டாவளை)

**எதிர்வரும் காலங்களில் 50 ஆயிரம் தொடக்கம் 6 இலட்சம் ரூபா வரையான விசேட கடன் திட்டங்களை வழங்குவதற்கு திட்டமிட்டுள்ளோம். இக் கடன் திட்டங்கள் அடுத்த மாதம் முதல் நடைமுறைப்படுத்தவுள்ளோம்.தொழில் முயற்சியாளர்கள் திட்டங்களை வகுக்க தயாராக இருங்கள் என முன்னாள் ஜனாதிபதியும் தேசிய ஒருமைப்பாட்டுக்கும் நல்லிணக்கத்துக்குமான பணியகத்தின் தலைவியுமான சந்திரிகா பண்டாரநாயக்க குமாரதுங்க தெரிவித்துள்ளார்.**

கரைச்சி தெற்கு பலநோக்கு கூட்டுறவு சங்கத்தின் உணவு பதனிடும் நிலையம் கிளிநொச்சியில் திறந்து வைக்கப்பட்டது.

கிளிநொச்சி கணேசபுரம் பகுதியில் குறித்த நிகழ்வு நேற்று பிற்பகல் 12.30 மணியளவில் இடம்பெற்றது.

முன்னாள் ஜனாதிபதியினால் குறித்த கட்டடம் கடந்காலப் பகுதியில் அடிக்கல் நாட்டப்பட்டு, நேற்று திறந்து வைக்கப்பட்டது. நல்லெண்ண நோக்குடன் வடக்கு மாகாணத்தில் முன்னாள் ஜனாதிபதி சந்திரிகா பண்டாரநாயக்கவினால் பல்வேறு திட்டங்கள் நடைமுறைப் படுத்தப்பட்டு வருகின்றன. இந்நிலையில் குறித்த கட்டடம் நேற்று திறந்து வைக்கப்பட்டு கையளிக்கப்பட்டமை குறிப்பிடத்தக்கது. நிகழ்வில் முன்னாள் ஜனாதிபதி மற்றும் கிளிநொச்சி மாவட்ட அரசாங்க அதிபர், கரைச்சி பிரதேச செயலாளர் உள்ளிட்ட பலர் கலந்து கொண்டிருந்தனர்.

நிகழ்வில் உரையாற்றிய முன்னாள் ஜனாதிபதி சந்திரிகா குறிப்பிடுகையில்,

யுத்தத்தால் பாதிக்கப்பட்ட வடக்கில் பல்வேறு திட்டங்களை நாம் முன்னெடுத்துள்ளோம். யுத்தம் காரணமாக முதலீடுகளை இழந்துள்ள இப்பகுதி மக்களின் நலன் கருதி இவ்வாறான திட்டங்கள் நடைமுறைப் படுத்தியுள்ளோம். இந் நிலையில், வடக்கு மற்றும் வடமத்திய மாகாண மக்களிற்காக எதிர்வரும் காலங்களில் 50 ஆயிரம் தொடக்கம் 8 இலட்சம் வரையான விசேட கடன் திட்டத்தினை வழங்குவதற்கு திட்டமிடப்பட்டுள்ளது. இதேவேளை கடந்த காலங்களில் வங்கியில் பெறப்பட்ட 50 ஆயிரத்திற்கு குறைவான கடன்களை செலுத்த முடியாதவர்களிற்கு 6 மாதங்கள் செலுத்தாது இருக்கும் வகையில் நாம் அவர்களிற்கு விசேட சலுகை வழங்கியுள்ளோம். ஏற்கனவே குறிப்பிட்டது போன்று விசேட கடன் திட்டம் அடுத்த மாதம் முதல் நடைமுறைப் படுத்தவுள்ளோம்.

எனவே தொழில் முயற்சியாளர்கள் திட்டங்களை வகுத்து தயாராக இருங்கள். 6 வீத வட்டி அடிப்படையிலேயே குறித்த கடன்கள் வழங்கப்படவுள்ளன என அவர் மேலும் தெரிவித்தார். (2-315)




# மனித எலும்பு எச்சங்கள் தொடர்பில் நீதியான விசாரணை அவசியம்

## சார்ள்ஸ் எம்.பி. வலியுறுத்து

(கண்டாவளை)

மன்னார் மற்றும் மாந்தைப் பகுதிகளில் இருந்து மீட்கப்பட்ட மனித எலும்பு எச்சங்கள் தொடர்பில் படையினருக்கு தொடர்புகள் இருக்கலாம் என தான் சந்தேகிப்பதாக தமிழ்த் தேசிய கூட்டமைப்பின் நாடாளுமன்ற உறுப் பினர் சார்ள்ஸ் நிர்மலநாதன் தெரிவித்துள்ளார்.

குறித்த விடயம் தொடர்பில் நாடாளுமன்ற உறுப்பினரிடம் வினவியபோதே அவர் நேற்று முன்தினம் நீதியான விசாரணை அவசியம் எனவும் வலியுறுத்தினார்.

மன்னார் மற்றும் மாந்தை பகுதிகளில் இருந்து மீட்கப்பட்ட பல மனித எலும்பு எச்சங்கள் மீட்கப்பட்டுள்ளன. இது தொடர்பில் நீதியான விசாரணை இடம்பெறுமா? எனவும் நாடாளுமன்ற உறுப்பினர் கேள்வியெழுப்பியுள்ளார்.

மன்னார் - "லங்கா சதொச" விற்பனை நிலைய வளாகத்தில் இருந்து அகழ்ந்தெடுக்கப்பட்ட மண், மன்னாரில் உள்ள பலருக்கு விற்பனை செய்யப்பட்டுள்ளது.

இந்நிலையில் மன்னார் எமில் நகரிலுள்ள வீடொன்றிற்கு விற்கப்பட்ட மண்ணில் சந்தேகிக்கப்படும் மனித எலும்புத் துண்டுகள் பல மீட்கப்பட் டுள்ளன.

இதனையடுத்து அந்த வீட்டின் உரிமையாளர் கடந்த மாதம் 25ஆம் திகதி மன்னார் பொலிஸ் நிலையத்தில் முறைப்பாடு செய்தார்.

இதனையடுத்து அந்தப் பகுதியில் அகழ்வு நடவடிக்கையை மேற்கொள்ள அனுமதி வழங்கப்பட்ட நிலையில் இதற்கான நடவடிக்கைகள் மன்னார் நீதவான் ஏ.ஜி. அலெக்ஸ்ராஜா முன்னிலையில் இடம்பெற்றன.

இந்த அகழ்வு நடவடிக்கையில் மனித எச்சங்கள் எனச் சந்தேகிக்கப்படும் எலும்புத் துண்டுகள் மற்றும் பற்கள் என்பன மீட்கப்பட்டன என அவர் தெரிவித்தார். (2-315)

# தமிழர்களின் இருப்பை சீர்குலைக்கும் குடியிருப்பு திட்டங்களை நாம் எதிர்க்கின்றோம்

## விவசாய அமைச்சரினால் முன்னாள் ஜனாதிபதி சந்திரிகாவிற்கு கடிதம்

(முல்லைத்தீவு)

அரசு திட்டமிட்ட வகையில் கபட நோக்குடன் தமிழர்களின் இருப்பை சீர்குலைக்கும் வகையில் செயற்படுத்தும் உருவாக்கும் குடியிருப்புத் திட்டங்களை நாம் நிச்சயம் எதிர்க்கின்றோம். வளமான எங்களின் வாழ்விடங்களை எங்களுக்கு மீண்டும் தாருங்கள். எங்களை எங்கள் நிலங்களில் தொழில் செய்வதற்கு அனுமதியுங்கள், எங்கள் நாளாந்த வாழ்வாதாரத்தைக் கொண்டு செல்ல வளங்களை எங்களிடமே விட்டுவிடுங்கள். அதுவே எமது உறுதியான கோரிக்கையாகும் என வடக்கு மாகாண விவசாய அமைச்சர் க.சிவநேசனினால் முன்னாள் ஜனாதிபதியும் தேசிய ஒருமைப்பாட்டுக்கும் நல்லிணக்கத்துக்குமான பணியகத்தின்தலைவருமானசந்திரிகா பண்டாரநாயக்க குமார துங்கவிற்கு கையளித்துள்ள கடிதத்தில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

கிளிநொச்சி வட்டக்கச்சி, மாயவனூர் பகுதியில் தேசிய ஒருமைப்பாட்டிற்கும் நல்லிணக்கத்துக்குமான அலுவலகத்தின் அனுசரணையுடன் பொருளாதார ஊக்குவிப்பு நிகழ்ச்சித் திட்டத்தின் கீழ் பயன்பெற்ற பயனாளி ஒருவரின் இல்லத்தில் நேற்று பிற்பகல் 12.30 மணியளவில் நடைபெற்ற பயனாளியுடனான சந்திப்பில் வைத்து மீள் குடியேற்ற மக்களின் நடைமுறையிலுள்ள பிரச்சினைகள், எதிர்கொள்ளும் இடர்பாடுகள் தொடர்பில் அமைச்சர் க.சிவநேசனினால் வழங்கப் பட்ட கடிதத்தில் குறிப்பிடப் பட்டுள்ளது.

அக்கடிதத்தில் குறிப்பிடப் பட்டுள்ள விடயங்கள் வருமாறு, "மகாவலி அபிவிருத்தி" என்ற பெயரில் தமிழ் மக்களின் பூர்வீக வாழ்விடங்களில் மேற்கொள்ளப்பட்ட எந்தத் திட்டங்களும் தமிழர்களுக்கென நடைமுறைப் படுத்தப்பட்டதில்லை. இவை தமிழர்களுக்கு பயன்பட்டதுமில்லை. மாறாக தமிழர்களை அவர்களின் சொந்த நிலங்களில் இருந்து விரட்டி வெளியேற்றியுள்ளது. கல்லோயாதிட்டம், மாதுறுஓயா திட்டம், யான்ஓயா திட்டம் என்று காலங்காலமாக தொடர்ந்த இன விரோத நடவடிக்கைகள் தற்போது மீண்டும் கலாபோகஸ்வேவ, மாயாபுர, நாமல்புர போன்ற திட்டங்களாக வேகம் கொண்டு செயற்படுத்தப்படுகின்றது.

மகாவலி அபிவிருத்தி, வனப்பாதுகாப்பு, பறவைகள் மற்றும் விலங்குகள் சரணாலயம், இயற்கை ஒதுக்கிடம் மற்றும் கடலும் கடல்சார் பாதுகாப்பு பிரதேசங்கள் என்கின்ற பெயர்களில் தமிழர்களின் வாழ்விடங்கள் அவற்றின் உரிமையாளரின் அனுமதிகளின்றி கபளீகரம் செய்யப்படுகின்றன.

ஆதலால் நாங்கள் கேட்பதெல்லாம், சொல்லுவதெல்லாம் ஒன்றுதான். அதாவது சாதாரண சாமானிய சிங்கள மக்கள் நாட்டின் எந்தத் திசையிலும் நிலங்கள் வாங்கி குடியிருப்பதற்கு நாம் எதிரானவர்கள் அல்ல.

ஆனால் அரசு திட்டமிட்ட வகையில் கபட நோக்குடன் தமிழர்களின் இருப்பை சீர்குலைக்கும் வகையில் செயற்படுத்தும் உருவாக்கும் குடியிருப்புத் திட்டங்களை நாம் நிச்சயம் எதிர்ப்போம்.

தமிழ் மக்கள் சிங்கள மக்களின் வாழ்விடங்களுக்கு வந்து ஆயிரக்கணக்கான ஏக்கர் நிலப்பரப்புக்களை கொள்ளையிட எக்காலத்திலும் எண்ணம் கொண்டிருக்கவில்லை. அதற்கான தேவையும் இல்லை.

தமிழராக, இலங்கையராக நாமும் வாழ்ந்து எல்லோரையும் வாழ வைக்க வேண்டும் என்பதே எம்முடைய விருப்பம்.

இதனை அனுமதிப்பதா? இல்லை எல்லா மக்களும் எல்லா இனமும் எல்லா மதங்களும் தொடர்ச்சியாக சீரழிவதற்கான ஏதுவான நிலைமைகளை உருவாக்குவதா? என்பதை நல்லாட்சி எனும்மாலைக்குள் ஆட்சி செய்யும் ஆட்சியாளர்களும் அரசும் அரச இயந்திரமுமே தீர்மானிக்க வேண்டும் என அதில் குறிப்பிடப்பட்டுள்ளது. (2)

# 14 ஆயிரத்து 415 குடும்பங்களுக்கு வீடுகள் அமைக்க வேண்டிய தேவையுள்ளது

## கிளிநொச்சி மாவட்ட அரச அதிபர் தெரிவிப்பு



(கண்டாவளை)

**கிளிநொச்சி மாவட்டத்தில் மீள்குடியேறியுள்ள 14 ஆயிரத்து 415 குடும்பங்களுக்கான வீட்டுத் தேவைகள் காணப்படுவதாக மாவட்ட அரசாங்க அதிபர் சுந்தரம் அருமைநாயகம் தெரிவித்துள்ளார்.**

கிளிநொச்சி மாவட்டத்தின் இவ்வாண்டுக்கான முதலாவது மாவட்ட அபிவிருத்தி ஒருங்கிணைப்புக் குழுக்கூட்டம் நேற்று முன்தினம் மாவட்ட செயலக மாநாட்டு மண்டபத்தில் இணைத் தலைவர்கள் தலைமையில் நடைபெற்றுள்ளது.

இதன்போது அறிமுக உரையாற்றிய அரச அதிபர் மாவட்டத்தில் மீள்குடியேறிய மக்களுக்கு 41 ஆயிரத்து 246 வீடுகள் அமைத்துக் கொடுக்க வேண்டிய தேவை காணப்பட்டது.

கடந்த 2017 ஆம் ஆண்டு வரையும் 25 ஆயிரத்து 564 வீடுகள் அமைத்துக்கொடுக்கப்பட்டுள்ளன.

இதனைவிட கடந்தாண்டிலே 867 வீடுகளுக்கான வேலைகள் ஆரம்பிக்கப்பட்டு அதற்கான வேலைகள் நடைபெற்று வருகின்றன.

இவை தவிர மாவட்டத்தில் 14 ஆயிரத்து 415 வீடுகளின் தேவைகள் காணப்படுகின்றன.

இந்தச் சந்தர்ப்பத்தில் தேசிய ஒருமைப்பாட்டிற்கும் நல்லிணக்கத்திற்குமான அமைச்சு ஏழாயிரம் வரையான வீடுகளை 2018 ஆம் ஆண்டிலிருந்து அமைப்பதற்கான அனுமதியை வழங்கியுள்ளது.

எனினும் இது தொடர்பில் இறுதியான கலந்துரையாடல்கள் எதுவும் நடைபெறவில்லை. இந்த ஏழாயிரம் வீடுகளையும் எந்தப் பிரதேசங்களிலும் அமைக்க வேண்டும் என்ற முடிவுகளை எடுக்க வேண்டிய நிலை காணப்படுகின்றது.

இதுதொடர்பில் பிரதேச செயலாளர்கள் விரைவாக செயற்பட வேண்டும். அதேபோல் மீள்குடியேற்ற அமைச்சின் நீண்ட காலமாக இடம்பெயர்ந்தவர்களுக்கான செயலணி மூலமாக 50 வீடுகள் 2018 ஆம் ஆண்டில் அமைப்பதற்கான ஏற்பாடுகள் முன்னெடுக்கப்படுகின்றன.

இதைத்தவிர தேசிய வீடமைப்பு அதிகார சபையின் முன்மொழிவுகளின் அடிப்படையில் 171 வீடுகளை அமைப்பதற்கான ஏற்பாடுகள் மேற்கொள்ளப்படுகின்றன என்றும் அவர் மேலும் தெரிவித்துள்ளார். (2-315)

# இவ்வாண்டு தரம் 1 இல் மாணவர்கள் இணைவு குறைவு

## கிளிநொச்சி வலயக் கல்விப் பணிப்பாளர் தெரிவிப்பு

(கண்டாவளை)

கிளிநொச்சி மாவட்டத்தில் தரம் ஒன்றில் மாணவர்கள் இணைவதில் காணப்படுகின்ற வீழ்ச்சி நிலையானது கிளிநொச்சி மாவட்டத்தின் பிறப்பு வீதத்தின் குறைவைக் காட்டுவதாக கிளிநொச்சி வலயக் கல்விப் பணிப்பாளர் ஜோன் குயின்ரஸ் தெரிவித்துள்ளார்.

கிளிநொச்சி மாவட்ட அபிவிருத்தி ஒருங்கிணைப்புக் குழுக்கூட்டம் இணைத் தலைவர்கள் தலைமையில் நேற்று முன்தினம் நடைபெற்றது. இதன் போதே கருத்துத் தெரிவித்த வலயக்கல்விப்பணிப்பாளர், கடந்த சில வருடங்களாக தரம் 1இல் மாண வர்கள் இணைவது மிகக் குறைவாகக் காணப்படுகின்றது.

கடந்த 2016 ஆம் ஆண்டில் 2 ஆயிரத்து 565 மாணவர்கள் தரம் ஒன்றிலே இணைந்து கொண்டனர்.

இதேபோன்று 2017 ஆம் ஆண்டில் 2 ஆயிரத்து 319 மாணவர்கள் தரம் 1 இல் இணைந்து கொண்டனர்.

2018ஆம்ஆண்டில் 2180 மாணவர்கள் இணைந்து கொண்டுள்ளனர். இவ்வாறு மாணவர்களின் இணைவு வீதம் மிகக் குறைவடைந்து செல்கின்றது.

இவ்வாறு குறைவடைந்து செல்வதற்கு இந்த மாவட்டத்தில் இருக்கின்ற பிறப்பு வீதத்தின் குறைவையே அவதானிக்க முடிகின்றது.

பிறப்பு வீதங்களை அதிகரிப்பதற்கான பல்வேறு நலத் திட்டங்களை உருவாக்க வேண்டுமென அவர் மேலும் தெரிவித்துள்ளார்.

இதேவேளை ஆயுள் தண்டனை விதிக்கப்பட்ட அரசியல்கைதியான ஆனந்தசுதாகரனின் பிள்ளைகள் எமது பிள்ளைகள் எமது வலயத்தில் கல்வி கற்பதனால் அவர்கள் தாயின் இழப்பைத் தொடர்ந்து விரக்தி நிலையில் காணப்படுகின்றார்கள்.

ஆனந்தசுதாகரனை விடுவிப்பதற்கு இந்த சபையில் அரசியல்வாதிகள் அதிகாரிகள் தீர்மானமாக எடுத்து அதற்கு உழைக்க வேண்டுமென்று அவர் கேட்டுக் கொண்டார். (2-315)




# அக்கராயனில் குடிநீருக்கு தட்டுப்பாடு கால்நடைகளும் குடிநீரின்றி அவதி

(கண்டாவளை)

கிளிநொச்சி அக்கராயன் பகுதியில் நிலவும் குடிநீர் தேவைகளைப் பூர்த்தி செய்து தருமாறு பாதிக்கப்பட்ட பகுதி மக்கள் கோரிக்கை விடுத்துள்ளனர். கிளிநொச்சி அக்கராயன் பிரதேசத்திற்குட்பட்ட கோணாவில், யூனியன்குளம், அக்கராயன் மத்தி, சுபாஸ் குடியிருப்பு, கொங்காதரன் குடியிருப்பு போன்ற பகுதிகளில் குறிப்பிட்ட சில பகுதிகளில் குடிநீருக்கான தட்டுப்பாடு நிலவி வருகின்றது.

அண்மைய நாட்களாக நிலவி வரும் தொடர் வரட்சி காரணமாக கிணறுகளில் நீர் வற்றிக்காணப்படுவதுடன் சில கிணறுகளில் நீர் நிறம் மாறியும் உவர்த்தன்மை கொண்டும் காணப்படுகின்றது.

தமக்கான குடிநீரைப் பெற்றுக்கொள்வதில் பெரும் சிரமங்களை எதிர்கொள்வதாகவும் தமது பகுதிகளுக்கான குடிநீரை வழங்க நடவடிக்கை எடுக்குமாறு இப்பகுதி மக்கள் கோரிக்கை விடுத்துள்ளனர்.

இதேவேளை பயன்தரு மரங்கள் பல அழிவடையும் நிலை காணப்படுவதுடன் கால்நடைகளும் குடிநீர் தேடி அலையும் நிலையும் காணப்படுவதாகவும் இப்பகுதி மக்கள் தெரிவித்துள்ளனர். (2-315)

# இரணைதீவு மக்களின் போராட்டம் மே ஒன்றில் ஒரு வருடப்பூர்த்தி

## போராட்டத்தின் வடிவத்தை மாற்றவுள்ளதாக எச்சரிக்கை

(கண்டாவளை)

எவரிடமும் கையேந்த வைக்காத வாழ்வைத்தந்த எங்கள் இரணைதீவை விடுவித்து எங்களை மீள் குடியேற்ற அரசாங்கம் இதுவரை அனுமதிக்கவில்லை. எனவே எமது போராட்டத்தை வேறு வடிவத்தில் கொண்டு செல்ல இருக்கின்றோம் என இரணைதீவு மக்கள் தெரிவித்துள்ளனர்.

கிளிநொச்சி பூநகரி பிரதேச செயலர் பிரிவிற்குட்பட்ட இரணைதீவுப்பகுதியை விடுவிக்குமாறு கோரி கடந்த ஆண்டு மேமாதம் முதலாம்திகதி முதல் தொடர் கவனயீர்ப்புப் போராட்டத்தில் ஈடுபட்டு வரும் மக்கள் பதினொரு மாதங்களாக இன்றும் அவர்களது போராட்டம் தொடர்ந்து முன்னெடுக்கப்பட்டு வருகின்றது.

இந்நிலையில் போராட்டத்தில் ஈடுபட்டு வரும் மக்கள் தாங்களுடைய போராட்டம் ஆரம்பிக்கப்பட்டதையடுத்து நிலங்களை விடுவிப்பதாக பல்வேறு நடவடிக்கைகள் எடுப்பது போன்று எமக்குக் காட்டப்பட்டது. ஆனால் இதுவரைக்கும் எங்களுடைய நிலங்கள் விடுவிக்கப்படவில்லை.

நாங்கள் எங்களுடைய மண்ணில் நிம்மதியாகவும் சுய கௌரவத்துடனும் வாழ்ந்ததுடன், எங்களது வாழ்விற்கு நாங்கள் யாரிடமும் கையேந்தவில்லை.

இப்போது, நாங்கள் வசித்து வருகின்ற இரணைமாதா நகர்ப்பகுதியில் சிறிய சிறிய துண்டுக்காணிகளில் எங்களுக்கு வீடுகள் தரப்பட்டிருக்கின்றது. நாற்பதிற்கும் மேற்பட்ட பெண்தலைமைத்துவக்குடும்பங்கள் இருக்கின்றன. எங்கள் ஊரில் ஆண்களும் பெண்களும் கடற்றொழில்களில் பரிட்சயமானவர்கள், கடற்றொழிலால் எங்கள் வாழ்வாதாரத்தை கட்டியெழுப்பினோம்.

இன்று நாங்கள் வாழ வழியின்றி பெரும் கஷ்டப்படுகின்றோம், குறிப்பாக, நுண்கடன் திட்டங்களில் அதிக வட்டிக்கு கடன்களைப் பெற்று அவற்றைக்கூட செலுத்த முடியாது இன்று எத்தனையோ குடும்பங்களுக்குள் பிரச்சினைகள் ஏற்படுகின்றன.

எங்களது நிலத்தை எங்களிடம் தாருங்கள் என்று தான் கேட்கின்றோம், வேறு எதனையும் நாங்கள் கேட்கவில்லை என போராட்டத்தில் ஈடுபட்டுள்ள மக்கள் தெரிவித்துள்ளனர். (2-315)



வெளிச்சம் அறக்கட்டளையினால் வவுனியா வேப்பங்குளம் இந்து அன்பகத்திலுள்ள சிறார்களுக்கு கற்றல் உபகரணங்கள் அண்மையில் வழங்கி வைக்கப்பட்டுள்ளன. வெளிச்சம் அறக்கட்டளையின் தலைவர் பா.லம்போதரன், செயலாளர் தி. கார்த்திக், வவுனியா மாவட்ட சமூக சேவை உத்தியோகத்தர் எஸ்.எஸ்.ஸ்ரீநிவாசன், இந்து அன்பகத்தின் செயலாளர் மற்றும் இந்து அன்பகத்திலுள்ள சிறார்கள் ஆகியோர் கலந்து சிறப்பித்தனர்.

### கடந்த மூன்று மாத காலப்பகுதிகளில்

# 841 மில்லியன் ரூபா நிதி அபிவிருத்திக்கு ஒதுக்கீடு

(கண்டாவளை)

கிளிநொச்சி மாவட்டத்தின் அபிவிருத்திகளுக்கு கடந்த மூன்று மாத காலப்பகுதிகளில் 18வரையான திணைக்களங்கள் அல்லது அமைச்சுக்கள் ஊடாக 841.2 மில்லியன் ரூபா நிதியொதுக்கீடுகள் கிடைக்கப்பெற்றுள்ளதாக மாவட்ட செயலக தகவல்களில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

இதனைவிட 2017 ஆம் ஆண்டில் முன்னெடுக்கப்பட்ட அபிவிருத்தி வேலைத் திட்டங்களுக்கு சிறைச்சாலைகள் மறுசீரமைப்பு மற்றும் புனர்வாழ்வு அமைச்சினூடாக ஆயிரத்து 267 மில்லியன ரூபா கிடைக்கப்பெற்று அதன்மூலம் அபிவிருத்திகள் முன்னெடுக்கப்பட்டுள்ளன.

தேசிய நல்லிணக்கத்துக்கும் ஒருமைப்பாட்டுக்குமான அமைச்சினூடாக 120 மில்லியன் ரூபாவும் அத்துடன் தேசிய ஒனோர் திட்டத்தின் மூலம் 104.8 மில்லியன் ரூபாவும் தேசிய கொள்கைகள் மற்றும் பொருளாதார விவகாரங்களுக்கான அமைச்சினூடாக 87.5மில்லியன் ரூபாவும் உள்நாட்டலுவல்கள் அமைச்சினூடாக 85 மில்லியன் ரூபா நிதியும் சுகாதாரத்துறையினூடாக உலக வங்கி சுகாதாரத் துறைக்கான அபிவிருத்திக்கான நிதியொதுக்கீடுகள் கிடைக்கப் பெற்று அபிவிருத்தி வேலைகள் முன்னெடுக்கப்பட்டுள்ளன.

இதேவேளை சுகாதார அபிவிருத்திக்கு மத்திய அரசினால் 46 மில்லியன் ரூபா ஒதுக்கீடு செய்யப்பட்டு 36 மில்லியனுக்கான வேலைகள் முன்னெடுக்கப்பட்டுள்ளன.

இதேபோல விவசாய அமைச்சினூடாக 17.88 மில்லியன் கிடைக்கப் பெற்றுள்ளதுடன் கடற்றொழில் அமைச்சு, அனர்த்த முகாமைத்துவ அமைச்சு, பன்முகப்படுத்தப்பட்ட வரவு செலவுத் திட்டம் சமநல அபிவிருத்தித் திணைக்களம், சமுர்த்தி அபிவிருத்தி திணைக்களம், ஜனாதிபதி செயலகம் கிராமிய உட்கட்டமைப்பு அபிவிருத்தி என பல்வேறு திட்டங்கள் ஊடாக பல்வேறு அபிவிருத்தி வேலைகள் முன்னெடுக்கப்பட்டுள்ளதாக மாவட்டச் செயலக புள்ளிவிபரத்தில் தெரிவிக்கப்பட்டுள்ளது. (2-315)

# வாரம் ஒரு யாழ்ப்பாணத்து மூலிகை

# உஷ்ண காலத்தில் மோரின் முக்கியத்துவம்





டாக்டர் (திருமதி) விவியன் சத்தியசீலன்
M.D(Siddha)India
சிரேஷ்ட விரிவுரையாளர்
சித்தமருத்துவத்துறை
யாழ்.பல்கலைக்கழகம்

நாம் ஆரோக்கியமாக வாழ வேண்டுமாயின் பருவ காலமான இளவேனில், முதுவேனில், கார், உதிர், முன்பனி, பின்பனி காலங்களை அனுசரித்து உட்கொள்ள வேண்டிய, தவிர்க்கவேண்டிய உணவு முறைகளை கையாண்டு ஆரோக்கியத்தை பேணி வருதல் அவசியமாகும். தற்போது பின்பனிக்காலத்தின் முடிவில் உள்ளோம். அதாவது பின்பனி கால முடிவு என மாரி பங்குனியை கொள்ளல் வேண்டும்.

சித்தமருத்துவ அடிப்படை தத்துவத்திற்கு அமைய இக் காலத்தில் வாத, பித்த, காப தாதுக்களில் காபம் ஆனது தன்நிலையில் விருத்தியடைவதால் நெய்ப்பு குளிர்ச்சியும் உள்ள இனிப்பு, புளிப்பு, கசப்பு, துவர்ப்பு சுவைகளிற்கு முக்கியத்துவம் கொடுக்க வேண்டும்.

எனவே இப் பருவகாலத்தில் ஆரோக்கியமான பானமாக அமைவதில் மோருக்கு சிறப்பு அம்சம் உண்டு. மோருக்கு துவர்ப்பு சுவை இருப்பது குறிப்பிடத்தக்கது.

**மோரின் பொதுக் குணம்**

"மோருண வளிமுதன்
மூன்றையு மடக்கி
யாருமெய் மினைத்
தின மாதரித்திடுமே"

(பொ-ரை): மோரானது வாத முதலிய முக்குற்றங்களையும் அதிகரிக்க வொட்டாமலடக்கி உடம்பை நாடோறும் காப்பாற்றும்.

**மோர் வகை**

**பசுவின் மோர்க்குணம்**

"வீக்க மகோதர முன்
வீறு குன்மம் பாண்டு பித்தந்
தாக்குமருந் திட்டததி
சாரமொடு-கூக்குரலே
மாறுத் திரிதோஷ மந்த
மனற் றுகம்போம்
வீறுவிங் மோருக்கு
மெய்"

**(பொ-ரை):** பசுவின் மோரினுள் வீக்கம், மகோதரம், வயிற்றுவலி, பாண்டுரோகம், பித்த கோபம், இருமருந்தால் வரும் நோய்கள், பேதி, திரிதோஷம், அக்கினிமந்தம், வெப்பம், நீர் வேட்கை இவைகள் போம்.

**எருமை மோர் குணம்**

"தாகங் கிராணி சலங்கழி
ச்சல் காமாலை ஆகும் குடைப்புழு
மற்றுப்போ-மோகமுவறுத்
தேவாமிருதமுமாக சீமாவிடா
தமக்கு மூவா மருந்தெருமை
மோர்" பாலும் பாற்பொருள்
களும்

**(பொ-ரை)** எருமைமோரினுல் தாகம், கிராணி ரோகம், சலக்கழிச்சல், காமாலை, கிருமி ஆகிய இவைகள் நீக்கும். போக விருப்பமாம் சிறந்த மானிடர்களுக்கு இது கெடாத அமுதமாகும்.

மோரிலுள்ள புரதம் இலகுவில் சமிக்கக்கூடியதாக இருக்கும். இதிலுள்ள இலற்றிக் அமிலம் Loctic-acid உணவுக் கால்வாயில் நோய் விளைவிக்கும் பற்றீரியாக்களை பெருக விடாது தடுக்கவல்லது. மோரை சிலர் சுட வைத்து பயன்படுத்துகிறார்கள். இது தவறு. சுட வைக்கும் போது அதிலுள்ள "இலற்றோபசிலஸ்" அழிந்து போகின்றன.

குளிர்ந்த மோர் போன்ற குளிர்ந்த பானங்களை அருந்துகின்றபோது அதிக நேரம் நாவினால் சுவைத்து நிதானமாக விழுங்க வேண்டும். ஏனென்றால் அதிகமாக குளிர்ந்துள்ள பானங்கள் நிதானமாக சுவைக்கப்படும்போது உமிழ் நீர் கலக்கப்பெற்று மிதமான வெப்பநிலைக்கு மாறுதல் அடைந்து வயிற்றினுள் செல்லும்.

"கரைத்துடன் வெண்
ணெய் தன்னைக் கவர்ந்திடு
மோர்க்குணம் கேள்
செரித்திடு மன்னந்தா
னுஞ் செவ்வையாய் மலமும்
போகும்
அருத்தியாய்ப் பசியுண்
டாகு மவ்வெண்ணெ யெடாத
மோராற்
சிரத்து நோய் கண்நோய்
காசஞ் செறிபிர மேகத்
தோடே"

பசுத் தயிரை மத்திட்டுக் கடைந்து வெண்ணெய் நீக்கி எடுத்த மோரால் உண்டசோறு சீரணமடையும். ஒழுங்காக மலம் கழியும். அருந்தினால் பசியுண்டாகும். வெண்ணெயெடாத மோரால் தலையைப் பற்றிய ரோகம், கண்நோய், காசம், அதிக பிரமேகம் இவை மாறும். மோருக்கு இரத்தத்தை கட்டிபடச் செய்யாத ஆற்றலும் உண்டு. உணவு முடிவில் மோர் உணவு உண்பது தமிழ்நாட்டில் பழக்கத்தில் இருக்கின்றது. இது மலசலக்கட்டு உண்டாகாமல் உடல் வெப்பத்தைத் தணிக்கும். "நீரை விட்டு மோரைப் பெருக்கு" என்னும் பழமொழிப்படி அன்று கடைந்த மோரை நீர்விட்டுப் பெருக்கித் தாராளமாய்ப் பயன்படுத்திக் கொண்டு வர கணுக்கால் வீக்கம், வலி முதலியன நீங்கும். நீர் இறங்கும்.

கரு தடையாளரும் கடும் பசியுள்ளோரும் அதிக வெப்படைந்தோரும் பசுவின் மோரையருந்த அழல், தாகம் முதலியன தீர்ந்து நன்மையடைவர்.

குட்டம் முதலிய நோய்களுக்கு மருந்தருந்தும் காலத்து நீர் பெருக்கிய மோரை அடிக்கடி உட்கொண்டுவர சிறுநீர் வாயிலாகத்துர்நீர் கழிந்து சுகம் கொடுக்கும்.

சுத்தியாரநாளத்தைலம் போன்ற தைலங்களில் மோரின் நீர் சேர்க்கப்பட்டிருக்கின்றது.

பசுவின் பாலிலும் அதன் பாற்பொருட்களிலும் இயற்கையின் ஐம்பூத தன்மைகளும் உள்ளன. அதாவது பால் ஆகாய உறவாகவும் தயிர் வளி உறவாகவும் நெய் தீயின் கூறாகவும் மோர் நீரின் கூறாகவும் வெண்ணெய் மண்ணின் கூறாகவும் அமைந்துள்ளது சிறப்பம்சம் ஆகும்.

**குறிப்பு:-**

வெள் ஆட்டு இனத்தின் தயிரை கடைந்து பெறப்படும் மோருக்கு நீரிழிவு ரோகத்தை போக்கும் தன்மை உண்டு.

மோருக்கு சின்ன வெங்காயம், பச்சைமிளகாய், தேவையான உப்பு சேர்த்து அருந்தும் போது இரத்த ஓட்டத்தை சீராக்கும் தன்மை அதிகம் கிடைக்கும்.

மோருடன் இஞ்சி, மிளகு, சீரகம் போன்றவற்றை சேர்த்து குடித்து வந்தால் ஜீரண சக்தி அதிகரிக்கும். வயிற்று உத்திரம் குறையும்.

கோடைகாலத்தில் மோரை அருந்தி வந்தால் உடல் வரட்சியைக் குறைக்கலாம்.

சிலருக்கு இலற்றேசின் சகிப்புத் தன்மை இருக்கும். அத்தகையவர்களால் பால் பொருள் எதையும் சாப்பிட முடியாது. அவர்கள் கல்சியம் சத்தை பால் பொருள் தவிர வேறு பொருட்களில் இருந்து பெறலாம். ஆனால் இலற்றேஸ் சகிப்புத்தன்மை உள்ளவர்கள் மோர் குடிக்கலாம்.

மோரின் விற்றமின்களான B Complex, பொட்டாசியம் அதிகம் உள்ளது. தினமும் ஒரு கப் மோர் குடித்து வந்தால் விற்றமின் குறைபாடு நோய் ஏற்படுவதை தடுக்கலாம். மோரானது வயிற்றை குளிர்ச்சியடையச்செய்து அமில படலத்தால் ஏற்படும் வயிற்று எரிச்சலை குறைத்து உடனடி நிவாரணத்தைத் தரும்.

**உடல் உஷ்ணத்திற்கு மோர்**

தேவையான பொருட்கள்

உடன் தயிர்-1/2 டம்ளர், குளிர்ந்த நீர்-1 டம்ளர், உப்பு- தேவையான அளவு, மிளகு-2, சீரகம்-1 டீஸ்பூன், இஞ்சி-1இன்ச், கறிவேப்பிலை-2,3 இலைகள், கொத்தமல்லி-சிறிது, பச்சைமிளகாய்-1(பொடியாக நறுக்கியது).

செய்முறை

மிக்ஸியில் மிளகு, சீரகம், கறிவேப்பிலை, கொத்தமல்லி, இஞ்சி ஆகியவற்றை போட்டு அரைத்துக் கொள்ள வேண்டும். பின்னர் ஒரு போத்தலில் தயிர் மற்றும் தண்ணீர் ஊற்றி அதனை மூடி நன்கு குலுக்க வேண்டும்.

பின் அதில் அரைத்துவைத்துள்ள பேஸ்ட் மற்றும் உப்பு சேர்த்து மீண்டும் ஒரு முறை குலுக்கினால் மோர் ரெடி.

அதி உயர் குருதியமுக்கம் உடையவர்கள் மோரை தாராளமாக அருந்தலாம்.

ஏனெனில் மோருக்கு அதிகரித்த பித்தத்தை கட்டுப்படுத்தும் தன்மை உண்டு.

## பெயர்ப் பலகை திரை நீக்கம்



(சங்கானை)

சங்கானை பட்டின அபிவிருத்தி சபையின் ஏற்பாட்டில் சங்கானை வர்த்தகச் சங்கம் விவசாய சம்மேளனம், பொது அமைப்புக்கள் இணைந்து சங்கானை மண்டிகைக் குளத்தினை உடற்பயிற்சியோடிணைந்த பொழுதுபோக்கு மையமாக்குவதற்கு 27 மில்லியன் ரூபா செலவில் தயாரித்த திட்டத்தினை நடைமுறைப்படுத்துவதற்குரிய முன்மொழிவு பத்திரத்தை பிரதேச செயலக ஆதரவுடன் முன்னாள் ஜனாதிபதியும் தேசிய நல்லிணக்க மற்றும் ஒருமைப்பாட்டிற்கான அமைச்சின் தலைவருமான சந்திரிகா பண்டாரநாயக்கவிடம் மண்டிகைக் குள பெயர்ப்பலகை திரை நீக்க நிகழ்வின்போது அபிவிருத்தி சபையின் தலைவர் கு.குணசிறியால் கையளிக்கப்பட்டது. இவ்வேளை மேற்படி செயற்திட்டத்தினைப் பரிசீலித்து சிறந்த முறையில் நடைமுறைப்படுத்துவதற்கான அனைத்து ஏற்பாடுகளையும் செய்து தருவதாக சந்திரிகா உறுதியளித்தார். (இ-7)

## விவசாய அமைச்சின் தண்ணீர் பவுசர்கள் முதலமைச்சர் அமைச்சிற்கு கையளித்தல்



(யாழ்ப்பாணம்)

வடக்கு மாகாண விவசாய அமைச்சினால் மேற்கொள்ளப்பட்டு வந்த நீர்வழங்கல் சேவையை தொடர்ந்து உரிய பிரதேச சபைகளிற்கு ஊடாக அந்தந்தப் பிரதேசங்களுக்கு வழங்கும் நோக்கத்திற்காக நான்கு தண்ணீர் பவுசர்கள் முதலமைச்சர் அமைச்சிற்கு வழங்க நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது. அதனடிப்படையில் கடந்த 28ஆம் திகதி முதலமைச்சர் நீதியரசர் சி. வி.விக்னேஸ்வரனிடம் வடமாகாண விவசாய அமைச்சர் கந்தையா சிவநேசன் இத் தண்ணீர் பவுசர்களை உத்தியோகபூர்வமாகக் கையளித்தார். அந்நிகழ்வில் முதலமைச்சர் அமைச்சின் செயலாளர் திருமதி ரூபினி வரதலிங்கம், வடமாகாண விவசாய அமைச்சின் செயலாளர் எஸ்.சத்தியசீலன், முதலமைச்சர் அமைச்சின் பிரதம கணக்காளர் பி.ஜெயராஜா, கணக்காளர் ஆ.கிரிதரன், வடமாகாண விவசாய அமைச்சின் நிர்வாகஉத்தியோகத்தர் மேசாந்தசீலன் மற்றும் அமைச்சுக்களின் அலுவலர்கள் ஆகியோர் கலந்து கொண்டிருந்தனர். இந் நிகழ்வு கைதடியில் அமைந்துள்ள வடமாகாண முதலமைச்சர் அலுவலகத்தில் நடைபெற்றது. (இ-7)

## இலங்கையை நிலக்கண்ணி வெடிகள் இல்லாத நாடாக மாற்ற பிரித்தானியா ஒத்துழைப்பு

(கொழும்பு)

2020 ஆம் ஆண்டு இலங்கையை நிலக்கண்ணி வெடிகள் இல்லாத நாடாக மாற்றுவதற்கான சகல ஒத்துழைப்பும் வழங்கப்படும் என்று பிரித்தானிய அரசாங்கம் தெரிவித்துள்ளது.

இலங்கைக்கான பிரித்தானியாவின் பிரதி உயர்ஸ்தானிகர் தொம் பேர்ன் இதனைத் தெரிவித்துள்ளார்.

2010 ஆம் ஆண்டு முதல் 2019 ஆம் ஆண்டு வரையான காலப்பகுதிக்குள் இலங்கையில் நிலக்கண்ணி வெடிகளை அகற்றுவதற்காக பிரித்தானிய அரசாங்கம் 1.2 பில்லியன் ரூபாவை வழங்கியுள்ளது.

அத்துடன் கடந்த ஆண்டு இலங்கை, ஒட்டாவா சாசனத்தை ஏற்றுக் கொண்டிருப்பதன் ஊடாக 2020 ஆம் ஆண்டுக்குள் நிலக்கண்ணி வெடிகள் இல்லாத நாடாக மாறும் இலக்காக இலகுபடுத்தியுள்ளது என்று அவர் மேலும் தெரிவித்தார். (இ-7)

# மண்முனை தென் எருவில்பற்றை கைப்பற்றியது த.தே.கூட்டமைப்பு




(ஏறாவூர்)

மட்டக்களப்பு மாவட்டத்தின் மண்முனை தென் எருவில் பற்று பிரதேசசபையின் ஆட்சியினை தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு கைப்பற்றியுள்ளது.

த.தே.கூட்டமைப்பின் களுதாவளை வட்டாரத்தில் போட்டியிட்டு வெற்றிபெற்ற ஞானமுத்து யோகநாதன் தவிசாளராகவும், பிரதித் தவிசாளராக த.தே.கூட்டமைப்பின் கோட்டைக்கல்லாறு வட்டாரத்தில் போட்டியிட்டு வெற்றிபெற்ற கனகராசா ரஞ்சினியும் தெரிவு செய்யப்பட்டுள்ளனர்.

மட்டக்களப்பு மாவட்டத்தில் உள்ளூராட்சி மன்றங்களை அமைக்கும் பணிகள் முதன்முதலாக மண்முனை தென் எருவில்பற்று பிரதேச சபையில் நேற்றுக் காலை நடைபெற்றது.

இந்த நிலையில் தவிசாளரை தெரிவு செய்யும் வகையில் திறந்த வாக்கெடுப்பு கோரியதற்கு இணங்க திறந்த வாக்கெடுப்பு நடத்தப்பட்டது குறிப்பிடத்தக்கது. (இ)




# போரால் பாதிக்கப்பட்டவர்களுக்கு நட்டஈடு பெற்றுத்தர வேண்டும்

## அமைச்சர் மங்களவிடம் பனை தென்னைவள அபிவிருத்திக் கூட்டுறவுச்சங்கம் கோரிக்கை





(யாழ்ப்பாணம்)

போரால் பாதிக்கப்பட்ட பனை அபிவிருத்திக் கூட்டுறவு சங்க உறுப்பினர்களுக்கு நட்டஈடு பெற்றுத்தர நடவடிக்கை எடுக்க வேண்டும் என பனை தென்னைவள அபிவிருத்திக் கூட்டுறவுச் சங்கங்களால் நிதி அமைச்சர் மங்கள சமரவீரவிடம் கோரிக்கை விடுக்கப்பட்டுள்ளது.

பனைசார் நிறுவனங்களின் அபிவிருத்திச் செயற்பாடுகள் தொடர்பாக நிதி அமைச்சர் மங்கள சமரவீரவுக்கும், பனை அபிவிருத்தி சபை முகாமையாளர்கள், வடமாகாண பனை தென்னை வள அபிவிருத்திக் கூட்டுறவுச் சங்கங்களின் தலைவர், பொது முகாமையாளர்களுக்கும் இடையிலான கலந்துரையாடல் ஒன்று கடந்த முதலாம் திகதி பனை அபிவிருத்திச் சபைத் தலைவர் வைத்தியர் இ.சிவசங்கர் தலைமையில், கைதடி பனை வள ஆராய்ச்சி நிறுவனத்தில் இடம்பெற்றது.

குறித்த கலந்துரையாடலின்போது, பனை தென்னை வள அபிவிருத்திக் கூட்டுறவுச் சங்கங்களால் பல்வேறு கோரிக்கைகள் அமைச்சரிடம் முன்வைக்கப்பட்டன.

யுத்தத்தினால் பனை அபிவிருத்தி சங்கங்களின் அங்கத்தவர்களின், உயிர் துறப்பு, உடைமைகள், சொத்துக்கள் பாதிப்புக்குள்ளாகி அழிவடைந்துள்ளன. பெண் தலைமைத்துவ குடும்பங்கள் நிர்க்கதியாகி உள்ளன. எனவே நட்டஈடு பெற்றுக்கொடுக்க ஆவன செய்ய வேண்டும்.

முல்லைத்தீவு மாவட்டத்தில் அமைந்துள்ள 8 பனை தென்னை வள அபிவிருத்திக் கூட்டுறவுச் சங்கங்களின் பணம் மக்கள் வங்கியில் வைப்பிலிடப்பட்டது. யுத்தத்தின்போது ஆவணங்கள் அழிந்து விட்டமையினால் இப் பணம் மீளப் பெறமுடியாமல் உள்ளது. இதனை பெற்றுத் தர வழிவகை செய்ய வேண்டும்.

சங்கங்களின் உற்பத்திகளுக்கு வெளிநாட்டுச் சந்தை வாய்ப்பினை ஏற்படுத்த வேண்டும். பனை சார் மது உற்பத்திக்கான வரிகள் குறைப்பதற்கான வழிவகைகளை மேற்கொள்ள வேண்டும் என்ற கோரிக்கைகளை முன்வைத்தனர்.

முன்வைக்கப்பட்ட கோரிக்கைகள் தொடர்பாக உரிய நடவடிக்கைகள் மேற்கொள்வதாகவும், இத்துறைசார்ந்த மக்களின் வாழ்வாதார மேம்பாட்டிற்கு கிராம சக்தித் திட்டத்தின் கீழ் ரூபா 1000 பில்லியன் ஒதுக்குவதோடு, சந்தை வாய்ப்பிற்கான வழிவகைகளையும் ஏற்படுத்துவதாகவும் அமைச்சர் தெரிவித்தார். (இ-9)

# சிறுவர் செந்தமிழ் பாடல்கள் நூல் அறிமுக விழா யாழில்

(யாழ்ப்பாணம்)

கருவி மாற்றுத்திறனாளிகளின் சமூக வள நிலைய அனுசரணையுடன் புலவர் மு.பாலசுப்பிரமணியத்தின் சிறுவர் செந்தமிழ் பாடல்கள் நூல் அறிமுக விழா எதிர்வரும் 7ஆம் திகதி சனிக்கிழமை பிற்பகல் 3 மணியளவில் இல. 345, கோவில் வீதி, நல்லூர் துர்க்காதேவி மணிமண்டபத்தில் கருவி நிறுவனத் தலைவர் க.தர்மசேகரம் தலைமையில் இடம்பெறும்.

இந்நிகழ்வில் ஆசியுரையினை நல்லை ஆதீன குரு முதல்வர் ஸ்ரீலஸ்ரீ சோமசுந்தர தேசிக ஞானசம்பந்த பரமாச்சாரிய சுவாமியும் சிறப்புரைகளை பயிற்றுநர் மொழித்திறன் காசிநாதர் விஜயராஜசிங்கம், யாழ்ப்பாண பல்கலைக்கழக முன்னாள் தமிழ்த்துறைத் தலைவர் பேராசிரியர் சி.சிவலிங்கராஜா, கருவி நிறுவன நலச்சேவை இணைப்பாளர் கிருஸ்ணசாமி ஐங்கரன், யாழ்ப்பாண வலயக் கல்வி அலுவலக முன்பள்ளி உதவிக் கல்விப் பணிப்பாளர் க.விமலநாதன், தென்மராட்சி வலய ஆரம்பகல்வி முதன்மை ஆசிரியர் சிவலிங்கம் சிவதர்சன் ஆகியோர் சிறப்புரையாற்றுவர். (இ)

# வாராஹி அம்மன் ஆலய வருடாந்த மஹோற்சவம்

(யாழ்ப்பாணம்)

கொக்குவில் மேற்கு வாராஹி அம்மன் ஆலய வருடாந்த மஹோற்சவம் நாளை வியாழக்கிழமை முற்பகல் 11 மணியளவில் கொடியேற்றத்துடன் ஆரம்பமாகி ஆரம்பமாகி தொடர்ந்து பன்னிரண்டு நாட்கள் இடம்பெறும். எதிர்வரும் 13ஆம் திகதி வெள்ளிக்கிழமை இரவு 7 மணியளவில் சப்பறத் திருவிழாவும் மறுநாள் சனிக்கிழமை சித்திரைப் புத்தாண்டன்று காலை 9.30 மணியளவில் தேர்த்திருவிழாவும் 15ஆம் திகதி ஞாயிற்றுக்கிழமை முற்பகல் 10 மணியளவில் தீர்த்தத்திருவிழாவும் இடம்பெறும். (இ-10)

# பிரதமரின் பொருளாதாரக்குழு இரத்து செய்யப்படவில்லை

## அமைச்சர் மங்கள தகவல்



(கொழும்பு)

பிரதமர் ரணில் விக்கிரமசிங்க தலைமையிலான பொருளாதார குழு இரத்து செய்யப்படவில்லை என நிதி மற்றும் ஊடகத்துறை அமைச்சர் மங்கள சமரவீர தெரிவித்துள்ளார்.

நிதியமைச்சில் நேற்று இடம்பெற்ற ஊடகவியலாளர் சந்திப்பில் கலந்து கொண்ட போதே அவர் இதனை தெரிவித்துள்ளார்.

பொருளாதார குழு இரத்துசெய்யப்படவில்லை. அது இன்னும் அவ்வாறே இருக்கின்றது. குறித்த குழு தொடர்பில் முன்வைக்கப்பட்ட அமைச்சரவை பத்திரம் இரண்டு வாரங்களுக்கு பிற்போடப்பட்டது.

பிரதமரின் பொருளாதார குழு அவ்வாறே இருக்கின்றது. ஜனாதிபதியின் பொருளாதார குழுவினால் கொள்கை ரீதியான முடிவுகள் எடுக்கப்படுகின்றன.

குறித்த தீர்மானங்களை நடைமுறைப்படுத்தும் போது ஏற்படும் சிக்கல்கள் தொடர்பில் பொருளாதார குழு தீர்மானம் மேற்கொள்கிறது. மீண்டும் அமைச்சரவைக்கு முன்வைக்கப்படுகின்றன என அமைச்சர் மங்கள சமரவீர மேலும் தெரிவித்துள்ளார். (இ-7)

# நிதி கோரி மனு கையளிப்பு



(யாழ்ப்பாணம்)

யாழ்ப்பாணமாவட்ட மாதர் கிராம அபிவிருத்திச் சங்கங்களின் இணையத்தினர் முன்னாள் ஜனாதிபதியும் தேசிய ஒருமைப்பாட்டிற்கும் நல்லிணக்கத்துக்குமான அலுவலகத்தின் தலைவியுமான சந்திரிகா பண்டாரநாயக்கா குமாரதுங்க நிதி அமைச்சர் மங்கள சமரவீரவுடன் அண்மையில் யாழில் சந்திப்பில் ஈடுபட்டனர்.

இதில் இணையச் செயலாளர் வரதராஜன் சசிரேகாவினால் அபிவிருத்திச் சங்கங்களின் இணையம் சார்பாக தமக்கு சுழற்சிமுறைக் கடன் திட்டம் வழங்குவதற்கான நிதியுதவி கோரி மனு ஒன்று கையளித்தனர். (இ)

# ஓட்டிசம் விழிப்புணர்வு தினம்

(யாழ்ப்பாணம்)

உலக ஓட்டிசம் விழிப்புணர்வு தினம் நாளை வியாழக்கிழமை காலை 9 மணியளவில் யாழ்.கல்வி வலய முகாமைத்துவ மண்டபத்தில் கல்வி அபிவிருத்தி பிரதிக்கல்விப் பணிப்பாளர் த.பால்ராஜ் தலைமையில் இடம்பெறும்

இந்நிகழ்வில் யாழ்ப்பாணம் போதனா வைத்தியசாலை குழந்தை வைத்திய நிபுணர் டாக்டர் கீதாஞ்சலி சத்தியதாஸ் சிறப்புரையாற்றுவார். (இ)

# பாரதம்

## விமான நிலையத்தில் முற்றுகைப் போராட்டம் அம்மா மக்கள் முன்னேற்றக் கழகத்தினர் கைது



(திருச்சி)

திருச்சி விமான நிலையத்தை முற்றுகையிட முயன்ற தினகரன், அய்யாக் கண்ணு, பி.ஆர்.பாண்டியன் உள்ளிட்ட 5000இற்கும் மேற்பட்டோர் கைது செய்யப்பட்டுள்ளார்.

உச்சநீதிமன்றம் தீர்ப்பிற்கு பிறகும் காவிரி மேலாண்மை வாரியம் அமைக்காத மத்திய அரசை கண்டித்து நேற்று திருச்சி விமான நிலையத்தை முற்றுகையிட்டு போராட்டமும் விமானத்தை மறிக்கும் போராட்டமும் நடைபெறும் என்று தேசிய தென்னிந்திய நதிகள் இணைப்பு விவசாயிகள் சங்க தலைவர் அய்யாக்கண்ணு அறிவித்தார்.

இந்த போராட்டத்தில் விவ சாயிகளுக்கு ஆதரவாக அம்மா மக்கள் முன்னேற்ற கழகம் பங்கேற்கும் என்று அதன் துணைப்பொதுச் செயலாளர் டி.டி.வி. தினகரன் அறிவித்து இருந் தார்.

அதன்படி நேற்றுக் காலை திருச்சி விமான நிலையம் முன்பு விவசாயிகள் சங்கத்தினர் மற்றும் அம்மா மக்கள் முன்னேற்ற கழகத்தினர் குவிந்தனர். சுமார் ஆயிரத்திற்கும் மேற்பட்டோர் ஒன்று திரண்டு அய்யாக் கண்ணுதலைமையில்விமான நிலைய பழைய முனையம் அருகே மத்திய அரசுக்கு எதிராக கோஷங்கள் எழுப்பினர்.

பின்னர் விவசாயிகள் திடீரென விமான நிலையம் எதிரே வீதியில் அமர்ந்தும், படுத்தும் மறியலில் ஈடுபட்டனர். இதனால் அந்த பகுதியில் போக்குவரத்து கடுமையாக பாதிக்கப்பட்டது.

திருச்சி விமான நிலையத்திற்கு கட்சி தொண்டர்கள் டி.டி.வி. தினகரன், தமிழக அனைத்து விவசாயிகள் கூட்டமைப்பு தலைவர் பி.ஆர். பாண்டியன், மன்னார்குடி ரெங்கநாதன் ஆகியோர் திருச்சி விமான நிலையத்தை முற்றுகையிட சென்றனர். அப்போது அங்கு பாதுகாப்புக்காக நின்ற பொலிஸார் அவர்களை தடுத்து நிறுத்தி கைது செய்தனர்.

தினகரன், அய்யாக் கண்ணு மற்றும் விவசாயிகள் சங்கம், அம்மா மக்கள் முன்னேற்ற கழக நிர்வாகிகள், தொண்டர்கள் உட்பட சுமார் 5 ஆயிரம் பேர் கைது செய்யப்பட்டு நேற்றைய தினம் பிற்பகலே விடுதலை செய்யப்பட்டனர். (10)

## மத்திய அரசைக் கண்டித்து தமிழகமெங்கும் உண்ணாவிரதம்



(சென்னை)

மத்திய அரசை கண்டித்து அ.தி.மு.க. உண்ணாவிரத போராட்டத்தில் ஈடுபட்டுள்ளது. சென்னையில் நடைபெறும் போராட்டத்தில் முதலமைச்சர் பங்கேற்றார்.

காவிரி மேலாண்மை வாரியம் அமைக்க உச்ச நீதிமன்றம் உத்தரவிட்டும், அதை நிறைவேற்றாமல் மத்திய அரசு காலம்தாழ்த்தி வருகிறது.

எனவே, மத்திய அரசை கண்டித்து சென்னை சேப்பாக்கம் விருந்தினர் மாளிகை அருகே நேற்று செவ்வாய்க் கிழமை அ.தி.மு.க. உண்ணாவிரத போராட்டம் நடைபெற்றது.

காலை 8 மணியில் இருந்து மாலை 5 மணி வரை இந்தப் போராட்டத்தில், முதலமைச்சர் பழனிசாமி, துணை முதலமைச்சர் ஓ பன்னீர் செல்வம் ஆகியோர் கலந்து கொண்டனர். (10)

## ஆப்கான் இராணுவத்தின் இ

## பாடசாலை

## பொதுமக்க

(காபூல்)

ஆப்கானிஸ்தானில் தலிபான்களை குறிவைத்து இராணுவம் நடத்திய குண்டு வீச்சில் பொதுமக்கள் 150 பேர் உயிரிழந்திருப்பதாக தலிபான் தீவிரவாதி செய்தி தொடர்பாளர் தெரிவித்துள்ளார்.

ஆப்கானிஸ்தானில் குண்டூஷ் மாகாணத்தில் தஷ்ட்-இ-ஆர்சி என்ற மாவட்டம் தலிபான் தீவிரவாதிகளின் கட்டுப்பாட்டில் உள்ளது. எனவே அதை தங்கள் கட்டுப்பாட்டில் கொண்டுவர ராணுவம் அதிரடி தாக்குதலை நடத்திவருகிறது.

இந்தநிலையில் நேற்று முன்தினம் தலிபான் கவுன்சில் அமைப்பின் உறுப்பினர்கள் குவெட்டாவில் இருந்து தஷ்ட்-இ-ஆர்சி பகுதியை பார்வையிட சென்றனர். அங்கு தலிபான் தீவிரவாதிகள் அனைவரும் ஒரு மசூதியில் ஒன்றாக கூடினர்.

அவர்களை குறிவைத்து இராணுவ ஹெலிகொப்டர்கள் குண்டுவீசி தாக்கின. அதில் குறி தவறி மசூதியையொட்டியுள்ள பாடசாலை மீது குண்டுகள் விழுந்ததில் பாடசாலைக் கட்டடமும், அதை ஒட்டியுள்ள மசூதியின் ஒரு பகுதியும் இடிந்தன. குண்டு வீச்சு நடந்த போது பாடசாலை மாணவர்களுக்கு பட்டமளிப்பு விழா நடந்தது. அதில் மாணவர்கள் மட்டுமின்றி பெற்றோரும் கலந்து கொண்டனர்.

இடிபாடுகளில் சிக்கி 150 பேர் பலியாகினர். இவர்க



## உக்கிரமடையும் தலித் போராட்டம் கலவரக்களத்தில் 10 பேர் உயிரிழப்பு



(டில்லி)

எஸ்.சி.எஸ்.டி.வன் கொடுமை தடுப்புச் சட்டத்தை தளர்த்தும் வகையில் உச்ச நீதிமன்ற உத்தரவை எதிர்த்து இந்தியா முழுவதும் நேற்று முன்தினம் நடைபெற்ற போராட்டங்களில் ம.பி, உ.பி, ராஜஸ்தான் மாநிலங்களில் 10 பேர் உயிரிழந்துள்ளனர்.

தாழ்த்தப்பட்ட மற்றும் பழங்குடியின மக்களுக்கு பாதுகாப்பளிக்கும் சட்டமாக இருக்கும் வன்கொடுமை தடுப்புச் சட்டத்தை தளர்த்தும் வகையில் உச்ச நீதிமன்றம் சில திருத்தங்கள் செய்து தீர்ப்பு வழங்கியது.

இதற்கு எதிராக இந்தியா முழுவதும் தலித் அமைப்புகள் நேற்று முன்தினம் போராட்டம் நடத் தின. வட மாநிலங்களில் நடந்த போராட்டங்கள் வன் முறையாக மாறின.



உத்தரப்பிரதேசத்தின் முசாபர் நகர் பகுதியில் பேருந்து, கார் உள்ளிட்டவை போராட்டக்காரர்களால் கொளு த்தப்பட்டன.

குஜராத், ராஜஸ் தான் மற்றும் அரியானா மாநிலங்களில் பொதுச் சொத் துக்கள் சேதப்படுத்தப்பட்டுள் ளன. பஞ்சாப் மாநிலத்தில் ரயில்கள் மறிக்கப்பட்டதால் போக்குவரத்து பாதிக்கப்பட்டுள்ளது.

கலவரம் நடந்து வரும் இடங்களில பொலிஸார் குவிக்கப்பட்டுள்ள னர்.

மத்தியப்பிரதேசம் மாநிலத்தின் குவாலியர், ப்ஹிந்த், மோரேனா மற்றும் சாகர் பகுதிகளில் நடந்த போராட்டம் கலவரமாக மாறிய நிலையில், அங்கு கண்மூடித்த னமாக துப்பாக்கிச்சூடு நடந் துள்ளது. இதில் 6 பேர் பலியாகியுள்ளனர்.

இதே போல, உத்தரப் பிரதேசத்தின் முசாபர் நகரில் இருவரும், ராஜஸ்தானின் அல்வார் பகுதியில் நடந்த வன்முறை நிகழ்வில் ஒருவர் பலியாகியுள்ளதாக பொலிஸ் உயரதிகாரிகள் தெரிவித்துள் ளனர்.

போராட்டக்காரர்கள் தாக்கியதில் 60-க்கும் மேற்பட்ட பொலிஸார் காயமடைந்துள்ளதாகவும், பொலிஸ் வாகனங்கள் தீக்கிரையாக்கப் பட்டுள்ளது.

இதற்கிடையே, அனைத்து மாநிலங்களிலும் சட்டம் - ஒழுங்கு கட்டுக்குள் இருக்க வேண்டும் என மத்திய உள்துறை அமைச்சகம் அறிவுறுத்தியுள்ளது.

மேலும், உச்ச நீதிமன்றம் தனது தீர்ப்பை மறு பரிசீலனை செய்ய வேண்டும் என மத்திய அரசு மனு தாக்கல் செய்துள்ளது குறிப்பிடத்தக்கது. (10)

## சர்



(வோஷி
அமெரி
வரியை அ
தேச சந்தை
அமெரிக்கா
உருக்கு
வரியை அ
டொனால்ட்
புன்றி இறை
பொருட்களு

## 1372

## புதி



(லண்ட
இத்தாலி
இடத்தில் ந
படைத்துள்ள



# வெளிநாடு

# இலக்கு தவறிய தாக்குதலால்

# ..தரைமட்டம்

# ..ள் 150 பேர் பலி!



ளில் தீவிரவாதிகளும் அடங்குவர்.

இந்த தகவலை தலிபான் தீவிரவாதிகளின் செய்தி தொடர்பாளர் தெரிவித்துள்ளார். ஆனால் 25 தீவிரவாதிகள் மட்டுமே பலி யாகினர் என அரசு தெரிவித்துள்ளது. காயம் அடைந்த 50 பேர் குண்டூஷ் வைத்திய சாலை யில் சேர்க்கப்பட்டு சிகிச்சை அளிக்கப்படுகின்றனர்.

டொனால்ட் ட்ரம்ப் ஜனாதிபதியாக பதவி ஏற்றதில் இருந்து ஆப்கானிஸ்தான் அரசு அமெரிக்க படைகளின் உதவியுடன் பல குண்டு வீச்சுகளை நடத்தியுள்ளது.

ஆனால் நேற்று முன்தினம் நடந்த குண்டு வீச்சில் அமெரிக்காவுக்கு தொடர்பில்லை என அங்கிருந்து வரும் செய்திகள் தெரிவிக்கின்றன. ஆப்கான் இராணுவத்தின் குண்டு வீச்சிற்கு சர்வதேச நாடுகள் கண்டனம் வெளியிட்டுள்ளன. (10)

## மண்டேலாவின் மனைவி வின்னி உடல் நலக்குறைவால் காலமானார்

(ஜோகன்னஸ்பர்க்)

தென்னாபிரிக்க முன்னாள் ஜனாதிபதி நெல்சன் மண்டேலாவின் மனைவி வின்னி மண்டேலா நேற்று முன்தினம் காலமானார்.

தென்னாபிரிக்காவில் நிற வெறிக்கு எதிராக போராடி சிறை சென்றவர் நெல்சன் மண்டேலா. இவரது மனைவி வின்னி மண்டேலா (வயது 81). நெல்சன் மண்டேலாவின் இனவெறிக்கு எதிரான போராட்டங்களில் அவருடன் இணைந்து செயற்பட்டவர். அதன் பின்னர் கடந்த 1996ஆம் ஆண்டில் நெல்சன் மண்டேலா வின்னியிடம் இருந்து விவாகரத்து பெற்றார்.


கடந்த பல வருடங்களாக அறுவை சிகிச்சையினால் வின்னிக்கு உடல்நலம் மோசமடைந்து வந்தது. இந்த நிலையில், கடந்த வாரம் வெள்ளி கிழமை வின்னிக்கு காய்ச்சல் ஏற்பட்டது. இதற்காக ஜோகன்னெஸ்பர்க் நகரில் உள்ள மில்பார்க் வைத்திய சாலையில் சிகிச்சைக்காக அவர் அனுமதிக்கப்பட்டார்.

இந்த நிலையில், சிகிச்சை பலனளிக்காமல் வின்னி மண்டேலா நேற்று முன்தினம் காலமானார்.

வின்னியின் இழப்பு கறுபினத்தவர்களிடையே பெரும் சோகத்தை ஏற்படுத்தியுள்ளது. (10)

## ஹபீஸ் சயித்தின் மில்லி முஸ்லிம் லீக் கட்சி

## சர்வதேச தீவிரவாதிகள் பட்டியலில் இணைப்பு



(வோஷிங்டன்)

ஹபீஸ் சயீத்தின் மில்லி முஸ்லிம் லீக் கட்சியை சர்வதேச தீவிரவாத இயக்கமாக அமெரிக்கா அறிவித்துள்ளது.

மும்பை தாக்குதலுக்கு மூளையாக செயற்பட்டவர் ஹபீஸ் சயீத். இவரை ஐ.நா., மற்றும் அமெரிக்கா சர்வதேச பயங்கரவாதி என்று ஏற்கெனவே அறிவித்துள்ளது. லஷ்கர் இ தொய்பா என்ற தீவிரவாத இயக்கத்தின் நிறுவனரான இவர், அந்த இயக்கத்துக்கு பாகிஸ்தானில் தடை விதிக்கப்பட்ட நிலையில், தற்போது ஜமாத் உத்தவா என்ற பெயரில் இயக்கத்தை நடத்தி வருகிறார்.

மில்லி முஸ்லிம் லீக் என்ற புதிய கட்சியையும் ஆரம்பித்தார். பாகிஸ்தான் பாராளுமன்றத்துக்கு அடுத்த ஆண்டு நடைபெறும் தேர்தலில் மில்லி முஸ்லிம் லீக் கட்சி போட்டியிடும் என ஹபீஸ் சயீத் அறிவித்துள்ளார்.

தேர்தல் கமிஷன் முதலில் மில்லி முஸ்லிம் கட்சியை அங்கீகரிக்க மறுத்த போதிலும், நீதிமன்ற உத்தரவு பெற்று மில்லி முஸ்லிம் லீக் கட்சியை பதிவு செய்ய ஹபீஸ் சயீத் அனுமதி பெற்றார். இந்த நிலையில், ஹபீஸ் சயீத்தின் மில்லி முஸ்லிம் கட்சியை தீவிரவாத இயக்கமாக அமெரிக்கா அறிவித்துள்ளது. பாகிஸ்தான் அரசியல் களத்தில் பரபரப்பை ஏற்படுத்தியுள்ளது. (10)

## சர்வதேச சந்தையை சீர்குலைக்கிறது சீனா

## அமெரிக்கா பகிரங்க குற்றச்சாட்டு



(வோஷிங்டன்)

அமெரிக்க இறக்குமதிகளுக்கு சுங்க வரியை அறிமுகப்படுத்தியதன் மூலம், சர்வதேச சந்தையை சீர்குலைப்பதாக சீனா மீது அமெரிக்கா குற்றம் சாட்டியுள்ளது.

உருக்கு மற்றும் அலுமினியத்துக்கு சுங்க வரியை அறவிடும் அமெரிக்க ஜனாதிபதி டொனால்ட் ட்ரம்பின் முடிவுக்கு பதிலடியாக பன்றி இறைச்சி மற்றும் வைன் உட்பட சில பொருட்களுக்கான இறக்குமதிக்கு சீனா வரி விதித்துள்ளது. அமெரிக்காவிலிருந்து இறக்குமதி செய்யப்படும் 128 பொருட்களுக்கு 25 சதவீதம் வரையான வரியை அறிமுகப்படுத்தியிருக்கிறது.

இது தொடர்பாக கருத்து வெளியிட்டுள்ள வெள்ளை மாளிகையின் செய்தித் தொடர்பாளர் லிண்ட்ஸே வார்டர்ஸ், சீனாவின் மானிய விலைகள் மற்றும் அதிக உற்பத்தியே உருக்கு நெருக்கடிக்கு மூல காரணம் என்று தெரிவித்துள்ளார். முறையாக நடைபெறும் அமெரிக்க இறக்குமதிகளில் கவனம் செலுத்துவதை விடுத்து, சர்வதேச சந்தையை சீர்குலைப்பதும், அமெரிக்க தேசிய பாதுகாப்புக்கு பாதிப்பை ஏற்படுத்துவதுமான முறையற்ற வர்த்தகத்தை சீனா நிறுத்த வேண்டும் எனவும் அவர் வலியுறுத்தியுள்ளார். அமெரிக்காவிலிருந்து, இறக்குமதி செய்யப்படும் பழங்கள் உள்ளிட்ட 120 பொருட்களின் விலையில் 15 சதவிகிதத்தை சுங்க வரிக்கு அறவிடவும், பன்றி இறைச்சி உள்ளிட்ட எட்டு பொருட்களுக்கு 25 சதவீதம் வரி அறவிடவும் சீனா தீர்மானித்தது. அமெரிக்காவின் புதிய வரி விதிப்புகளால் ஏற்படும் சமநிலை இழப்பையும் சீனாவின் நலன்களையும் பாதுகாக்கும் நோக்கில் இவ்வாறு வரி விதிப்பதாகவும் சீனா தெரிவித்தது. சீனாவின் இந்த அதிரடி நடவடிக்கையால் அமெரிக்க பங்குச் சந்தையில் சரிவு ஏற்பட்டுள்ளது. இவ்வாறு சீனா மற்றும் அமெரிக்காவுக்கு இடையில் ஏற்பட்டுள்ள வர்த்தக போட்டிகள் இரு நாடுகளுக்கும் இடையிலான உறவிலும் விரிசலை ஏற்படுத்தியுள்ளமையும் குறிப்பிடத்தக்கது. (10)

## 1372 ரோபோக்கள் ஒரே இடத்தில் நடனம்

## புதிய கின்னஸ் சாதனை



(லண்டன்)

இத்தாலியில் 1,372 ரோபோக்கள் ஒரே இடத்தில் நடனமாடி புதிய கின்னஸ் சாதனை படைத்துள்ளது.

இத்தாலியில் ரோபோக்கள் நடனமாடும் நிகழ்ச்சி அண்மையில் நடைபெற்றது.

இந்நிகழ்வில் 1,372 ஆல்பா 1 எஸ் ரக ரோபோக்கள் நடமாடின. இது புதிய உலக சாதனையாக பதிவு செய்யப்பட்டது.

இதற்கு முன் சீனாவில் 1069 ரோபோக்கள் நடனமாடியது சாதனையாக இருந்தது. அந்த சாதனையை இத்தாலி முறியடித்துள்ளது. இது குறித்த வீடியோ இணைய தளங்களில் வைரலாக பரவி வருகிறது.

40 செமீ உயரம் உள்ள இந்த ரோபோக்கள் அலுமினியத்தால் செய்யப்பட்டு பிளாஸ்டிக்கால் மூடப்பட்டுள்ளது. இந்த உலக சாதனை பார்வையாளர்களை வெகுவாக கவர்ந்துள்ளது. (10)

## இரண்டாகப் பிளவுபடும் ஆபிரிக்கக் கண்டம்

## புவியியல் வல்லுநர்கள் எச்சரிக்கை

(நைரோபி)

கென்யாவில் ஏற்பட்டுள்ள மிகப்பெரிய நிலப்பிளவு காரணமாக, பல மில்லியன் ஆண்டுகளுக்கு பிறகு ஆபிரிக்க கண்டம் இரண்டாக பிளவுபட வாய்ப்பு இருப்பதாக புவியியல் வல்லுநர்கள் தெரிவித்துள்ளனர்.

அண்மையில் ஆபிரிக்க கண்டத்தில், மிகப்பெரிய நிலப்பிளவு ஏற்பட்டது. இந்த பிளவால் கென்யாவில் உள்ள நைரோபி - நரோக் நெடுஞ்சாலை முழுவதும் சேதமடைந்ததோடு, அப்பகுதியில் நில அதிர்வுகளும் ஏற்பட்டது.

வடக்கே ஏடன் வளைகுடா தொடங்கி தெற்கே சிம்பாப்வே வரை சுமார் 3000 கிலோமீட்டர் தொலைவுக்கு இந்த பிளவு ஏற்பட்டுள்ளது. இந்த பிளவு ஆபிரிக்க கண்டத்தை சமமற்ற இரு தட்டுகளாக பிரித்துள்ளது. அவை சோமாலி மற்றும் நியூபியன் என கூறப்படுகின்றன.

பிளவு அதிகரித்துக் கொண்டே போகும் பட்சத்தில் ஆபிரிக்க கண்டம் இரண்டாக பிளவுபட வாய்ப்பு இருப்பதாக புவியியல் வல்லுநர்கள் தெரிவித்துள்ளனர்.

ஆபிரிக்க கண்டத்தின் அடிப்பகுதியில் உள்ள டெக்டானிக் எனப்படும் தட்டுக்கள் வேகமாக அரிக்கப்பட்டு வருகிறது. மேலும் பூமியின் மேற்புறம் அதிக நீரோட்டம் இருக்கிறது. இதனால் ஆபிரிக்க கண்டம் இரண்டாக பிளவுபட அதிக வாய்ப்பு இருப்பதாக புவியியல் வல்லுநர்கள் தெரிவிக்கின்றனர்.

இந்தப் பிளவின் காரணமாக எதியோப்பியா, ருவாண்டா, தான்சானியா, சாம்பியா உள்ளிட்ட 10க்கும் மேற்பட்ட நாடுகள் தனிக் கண்டமாக பிரிய வாய்ப்பு இருப்பதாக இத்தகைய மாற்றங்கள் ஏற்பட இன்னும் பல மில்லியன் ஆண்டுகள் எனவும் புவியியல் வல்லுநர்கள் எச்சரிக்கை விடுத்துள்ளனர். (10)

# பிரதமர் பதவி விலக வேண்டும் சு.க. நாடாளுமன்றக் குழு முடிவு



(கொழும்பு)

நம்பிக்கையில்லாப் பிரேரணை இன்று விவாதத்துக்கு எடுத்துக் கொள்ளப்படுவதற்கு முன்னதாக, பிரதமர் ரணில் விக்கிரமசிங்கவை பதவியில் இருந்து விலகுமாறு கோருவதென, ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சியின் நாடாளுமன்றக் குழு தீர்மானித்துள்ளது.

நேற்று முன்தினம் மாலை நடந்த ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சியின் நாடாளுமன்றக் குழுக் கூட்டத்தில், கட்சியின் 42 நாடாளுமன்ற உறுப்பினர்களும் கலந்து கொண்டனர் என்று, கட்சியின் பேச்சாளரான அமைச்சர் டிலான் பெரேரா தெரிவித்தார்.

3 மணித்தியாலங்கள் நடந்த இந்தக் கூட்டத்தில் எடுக்கப்பட்ட முடிவு, பின்னர் ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேனவுக்குத் தெரியப்படுத்தப்பட்டுள்ளதாகவும் அவர் கூறினார். நேற்றிரவு ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேனவை அவரது இல்லத்தில் சந்தித்த ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சியின் நாடாளுமன்ற உறுப்பினர்கள், இந்த முடிவை அவரிடம் தெரிவித்துள்ளனர்.

பிரதமர் ரணில் விக்கிரமசிங்க பதவி விலக மறுத்தால், அவருக்கு எதிரான நம்பிக்கையில்லாப் பிரேரணைக்கு ஆதரவு அளிப்பதென ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சியின் நாடாளுமன்றக் குழு ஏகமனதாக தீர்மானித்துள்ளது என்று அமைச்சர் லக்ஸ்மன் யாப்பா அபேவர்த்தன தெரிவித்தார். (இ-7)

## ஊடகவியலாளர் கீய்த் நொயார் கடத்தல் விவகாரம்

# மேஜர் ஜெனரல் அமல் கருணாசேகரவின் இந்தியப் பயணத்துக்கு நீதிமன்றம் தடை

(கொழும்பு)

இராணுவத்தின் முன்னாள் தலைமை அதிகாரியும், பாதுகாப்புச் சேவைகள் கட்டளை அதிகாரிகள் கல்லூரியின் தற்போதைய தளபதியுமான மேஜர் ஜெனரல் அமல் கருணாசேகர, இந்தியாவுக்குப் பயணம் மேற்கொள்ள வழங்கிய அனுமதியை இரத்துச் செய்துள்ள கல்கிஸை நீதிமன்றம், அவர் வெளிநாடு செல்வதற்கு தடை விதித்து உத்தரவிட்டுள்ளது.

ஊடகவியலாளர் கீய்த் நொயார் கடத்தப்பட்டு தாக்கப்பட்ட வழக்கில், மேஜர் ஜெனரல் அமல் கருணாசேகரவை சந்தேக நபராக உள்ளடக்க முடியும் என்று கல்கிஸை நீதிமன்றத்தில் குற்றப் புலனாய்வுப் பிரிவினர் சமர்ப்பித்த அறிக்கையை அடுத்தே அவரது வெளிநாட்டுப் பயணத்துக்கு நீதவான் தடை விதித்துள்ளார்.

முன்னதாக மேஜர் ஜெனரல் அமல் கருணாசேகர வெளிநாடு செல்வதற்கு நீதிமன்றம் தடை விதித்திருந்தது.

எனினும், பாதுகாப்புச் சேவைகள் கட்டளை அதிகாரிகள் கல்லூரியின் தளபதியாக நியமிக்கப்பட்ட பின்னர், அவர் ஏப்ரல் முதலாம் திகதி தொடக்கம் 7 ஆம் திகதி வரை இந்தியாவில் பயணம் மேற்கொள்வதற்கு திட்டமிட்டிருந்தார்.

இதற்காக அவர் நீதிமன்றத்தை அணுகி வெளிநாட்டுப் பயணத் தடையை நீக்குமாறு கோரியிருந்தார். அதற்கு நீதிமன்றம் அனுமதி அளித்தது.

இந்த நிலையில் மேஜர் ஜெனரல் அமல் கருணாசேகரவின் பயணத்துக்கு தடை விதிக்குமாறு குற்றப் புலனாய்வுப் பிரிவினர், கல்கிஸை நீதிமன்றத்தில் மனுவொன்றை தாக்கல் செய்தனர்.



இதுதொடர்பாக தாம் பாதுகாப்புச் செயலருடன் கலந்துரையாடியதாகவும் மேஜர் ஜெனரல் அமல் கருணாசேகரவின் பயணத்துக்கு நீதிமன்றம் தடைவிதித்திருக்கும் விடயத்தை தாம் அறியவில்லை என்று அவர் கூறினார் என்றும் குற்றப் புலனாய்வுப் பிரிவினர் நீதிமன்றத்தில் தெரிவித்தனர்.

அத்துடன் தாம் அவரை இந்தப் பயணத்துக்காக முன்மொழியவில்லை என்றும், அதனை இராணுவமே பரிந்துரைத்தது என்றும் பாதுகாப்புச் செயலர் தம்மிடம் கூறியதாகவும் தெரிவித்தார்.

இந்த நிலையில், நேற்று முன்தினம் இந்த வழக்கு மீண்டும் விசாரணைக்கு எடுத்துக் கொள்ளப்பட்டது.

இதன்போது, மேஜர் ஜெனரல் அமல் கருணாசேகரவின் இந்தியப் பயணம் இரத்துச் செய்யப்பட்டுள்ளதாக இராணுவத்தின் தரப்பில் நீதிமன்றத்துக்கு தெரியப்படுத்தப்பட்டது.

இதையடுத்து, மேஜர் ஜெனரல் அமல் கருணாசேகர வெளிநாடு செல்வதற்கு வழங்கப்பட்ட அனுமதியை இரத்துச் செய்த நீதிமன்றம் மீண்டும் அவருக்கான தடை உத்தரவைப் பிறப்பித்தது.

அதேவேளை, மேஜர் ஜெனரல் அமல் கருணாசேகர, வாக்குமூலம் அளிப்பதற்காக நாளை 5 ஆம் திகதி குற்றப் புலனாய்வுப் பிரிவிடம் முன்னிலையாக வேண்டும் என்றும் கல்கிஸை மேலதிக நீதவான் உத்தரவிட்டுள்ளார். (இ-7)

# பிரதமர் ரணில் விலகும் வரையில் தீர்மானத்தில் மாற்றம் இல்லை

## ரங்கே பண்டார உறுதி



(கொழும்பு)

ஐக்கிய தேசியக் கட்சியின் தலைவர் பதவியிலிருந்தும் பிரதமர் பதவியிலிருந்தும் ரணில் விக்கிரமசிங்க விலகும் வரையில் நம்பிக்கையில்லாப் பிரேரணைக்கு ஆதரவு வழங்கும் தீர்மானத்தை வாபஸ் பெறப் போவதில்லையென ஐக்கிய தேசியக் கட்சியின் இராஜாங்க அமைச்சர் பாலித ரங்கே பண்டார தெரிவித்துள்ளார்.

இந்தக் கருத்தில் ஐக்கிய தேசியக் கட்சியின் பாராளுமன்ற உறுப்பினர்கள் பலரும் உள்ளதாக தெரிவித்த அவர், கட்சிக்குள் மாற்றம் வரும் வரையில் எமது கருத்தில் உறுதியாக இருப்போம் எனவும் அவர் தெரிவித்தார்.

ஐக்கிய தேசியக் கட்சியில் மாற்றம் கொண்டு வருமாறு கூறினால் பதவியும் பணமும் வழங்கி பிரச்சினையை மூடிமறைக்க முயற்சிப்பதாகவும் ரங்கே பண்டார குற்றஞ்சாட்டியுள்ளார். (இ-7)

## இன்று ஒரு தகவல்

### பயணங்களின் போது ஒரு மனநிலை

ஒவ்வொரு புதிய சூழ்நிலைக்கும் ஏற்ப மனநிலையை மாற்றிக்கொள்ள வேண்டியிருக்கிறது. இந்த மனத் தயாரிப்பை நாம் மேற்கொள்ளாவிட்டால் சிரமங்கள் கடுமையாகத் தெரியும். அது மட்டுமல்ல நம் மகிழ்ச்சியும் நல்ல மனநிலையும் பறிக்கப்பட்டு விடும்.

வீட்டில் கிடைக்கும் சௌகரியங்கள் நமக்குப் பயணத்தின் போது கிடைக்கப் போவதில்லை. இது தெரிந்தும் சிலர் எனக்கு சௌகரியமாய் நீட்டி நிமிர்ந்து படுக்க வேண்டும் என்றும் இட்லி தான் வேண்டும், தோசைதான் வேண்டும் என்றும் கோதுமை பிடிக்காது; உப்புமாவா? நான் தொடவே போவதில்லை என்றும் வம்பு செய்து வயிற்றையும் காயப் போட்டுக் கொண்டு முகத்தையும் தூக்கி வைத்துக் கொள்வார்கள்.

பயணம் என்றால் பல அசௌகரியங்களும் தேடித் தேடி ஓடிவரும். அவற்றை எதிர்கொள்ளும் அளவுக்கு மனத்தை இலகுவாக வைத்துக்கொள்ள வேண்டும்.

அடுத்து, பயணங்களின் போது எதுவும் திட்டமிட்டபடி நடைபெறாது என்பதைத் தங்க வாக்கியமாக மனத்தில் பதித்துக் கொள்ள வேண்டும். எனவே சட்சட் என்று மாறும் சூழ்நிலைகளுக்கு ஏற்ப நாம் தயார் செய்து கொள்ள வேண்டும். மூட் அவுட் ஆகி சே! இப்படி ஆகி விட்டதே என்று குட்டை நீராய் ஓரிடத்தில் தேங்கி விடக் கூடாது. ஆற்று நீராய் ஓடிக் கொண்டே இருக்க வேண்டும்.

தாட்பூட் தஞ்சாவூர் என்று பணத்தை வீசுகிறவர்கள் பணங்களின் போது படு சிக்கனமாகி விட வேண்டும். எந்த நேரத்தில் எந்தச் செலவு வரும் என்று தெரியாது. போகிற இடத்தில் கடன் கேட்பது அசிங்கம்.

பயணங்களின் போது ஆற அமரச் சிந்தித்து முடிவெடுக்க நேரம் கிடைக்காது. உடனுக்குடன் முடிவெடுக்க வேண்டிவரும். இதற்கும் நாம் தயாராகிவிட வேண்டும். மனத்துக்குள் வட்ட மேசை மாநாடு நடத்திக் கொண்டிருக்கக் கூடாது. பயணங்களின் போது, உணவு, உட்காரும் இடம், சௌகரியங்கள், செலவினம் போன்றவற்றில் மிக அதிகமான அளவில் நம் சுயநலம் வெளிப்படும். இதை நம்முடன் வருகிறவர்களிடமோ சக பயணியிடமோ இந்தச் சுயநலத்தை அப்படியே வெளிப்படுத்தி விடக் கூடாது. நாகரிகமாகப் புலப்படுத்த வேண்டும்.

பயணங்களின் போது பொறுமையிழக்கும்படியான சம்பவங்கள் பலவும் நடக்கும். கோபப்பட்டுவிடக் கூடாது. நம்முடன் வருகிறவர்களைப் பொது இடங்களில் கோபித்துக் கொள்ளக் கூடாது என்பதில் குறிப்பாக இருக்க வேண்டும். பயணங்களின் போது எச்சரிக்கை உணர்வு மிக அதிகமாக இருக்க வேண்டும். வீட்டில் பூட்டிய அறைக்குள் இருக்கும் போது உள்ள மனநிலையா பொது இடத்தில் இருப்பது? கவனம்.

பயணங்களை மேற்கொண்டால் அவை இனிக்கும். இல்லாவிட்டால் ஏன்டா போனோம் என்றாகிவிடும்.

இன்னும் ஒன்றே ஒன்று. மேற்கூறிய வாக்கியம் அடுத்த ஊர்ப் பயணத்திற்கு மட்டுமல்ல; வாழ்க்கைப் பயணத்திற்கும் பொருந்தும்.

**லேனா தமிழ்வாணன்**

- பின்வரும் வாக்கியங்களிற்குப் பொருத்தமான இடங்களில் நிறுத்தக் குறிகளை இடுக.

1. அறஞ் செய்ய விரும்பு என்றார் ஔவைப்பாட்டி
2. தலைவா வருக வருக

- பின்வரும் சொற்களை ஒழுங்குபடுத்தி கருத்துள்ள வாக்கியமாக எழுதுக.

1. தேயிலைக் / அரும்பும் / தேயிலைச் / கொண்ட / ஈரிலையும் / பறிக்கப்படும் / செடியில் / கொழுந்துகள்
 ..............................................................................
2. கிராமத்தில் / மகாத்மாகாந்தி / பிறந்தார் / போர்பந்தர் / என்னும் / குஜராத் மாநிலத்தில் / வட இந்தியாவிலுள்ள
 ..............................................................................

- சரியான விடையினைத் தெரிவு செய்க.

1. தமிழ்மொழியிலுள்ள முதல் எழுத்துக்களின் எண்ணிக்கை?
 1. 18 2. 30 3. 12
2. 'மை' எனும் உயிர்மெய் எழுத்தை உருவாக்குவது?
 1. ம் + ஈ 2. ம் + உ 3. ம் + ஐ
3. சரியாக எழுதப்பட்டுள்ள வடிவம்?
 1. பாகற்காய் 2. பாவக்காய் 3.பாகைக்காய்
4. பல் என்பதன் பன்மை வடிவம்
 1. பல்லுகள் 2. பல்கள் 3.பற்கள்


- பின்வரும் சொற்களுக்கான ஆங்கிலப் பதத்தை எழுத்துக்களில் எழுதுக.

1. காலை வணக்கம் ..............................................
2. திருகோணமலை ..............................................

- தரப்பட்டுள்ள ஆங்கிலச் சொற்களின் தமிழ்க் கருத்தை எழுதுக.

1. Worship ..............................................
2. Beautiful ..............................................
3. Mind ..............................................

- தரப்பட்டுள்ள படங்களின் சிங்களப் பெயரை தமிழ் எழுத்துக்களில் எழுதுக.





.............................................. ..............................................

- தரப்பட்டுள்ள சிங்களச் சொற்களுக்கான தமிழ்க் கருத்தை எழுதுக.

1. அஸ்பியா கன்ன ..............................................
2. வாடி வென்ன ..............................................
3. ஹாவா ..............................................

- தரப்பட்டுள்ள வினாக்களுக்கான சரியான விடைகளைக் கணித்துப் புள்ளிக் கோட்டில் எழுதுக.

1. இவ்விலக்கங்களைக் கொண்டு ஆக்கக் கூடிய மிகப் பெரிய எண்ணை எழுதுக.

| | |
|---|---|
| 9 | 2 |
| 7 | 3 |

 ..............................................
2. முந்திய பிந்திய எண்ணை எழுதுக.
 .............................. 10 000 ..............................
3. எண்கோலத்தில் அடுத்து வரும் இரு எண்களையும் எழுதுக.
 9950, 9960, 9970, 9980 .................. , ..................
4. முப்பத்தாறாயிரத்துத் தொள்ளாயிரத்து எட்டு என்பதை இலக்கங்களில் எழுதுக? ..............................
5. நகரமொன்றில் 22057 ஆண்களும் 17460 பெண்களும் உள்ளனர். அங்குள்ள மொத்தக் குடித்தொகை யாது? ..................
6. 14 ஐ உரோமன் எண்ணில் தருக? ..............................
7. மூன்று தீக்குச்சிகளைப் பயன்படுத்தி ஆக்கக் கூடிய உரோமன் எண்களை எழுதுக? ..............................
8. குழியொன்றில் 4 நிலக்கடலைகள் வீதம் 25 குழிகளில் நடுவதற்கு தேவையான நிலக்கடலைகள் எத்தனை? ..............................
9. மண்டபமொன்றில் நிரையொன்றில் 5 கதிரைகள் வீதம் உள்ள 18 நிரைகளும் 6 கதிரைகள் வீதம் உள்ள 9 நிரைகளும் அடுக்கி வைக்கப்பட்டிருந்தன. மண்டபத்திலுள்ள கதிரைகளின் எண்ணிக்கையாது?
10. 8297 எனும் எண்ணை விரித்தெழுதுக? ..............................
11. பெட்டியொன்றில் 345 சவர்க்காரக் கட்டிகளை அடக்க முடியும். அவ்வாறான 6 பெட்டிகளில் அடுக்கக் கூடிய சவர்க்காரக் கட்டிகள் எத்தனை? ..............................
12. 6024 புத்தகங்களில் 650 புத்தகங்கள் விற்கப்பட்டன, மீதியாக உள்ள புத்தகங்கள் எத்தனை? ..............................

- சில நகரங்களுக்கிடையேயான தூரங்கள் கிலோமீற்றில் கீழுள்ள படத்தில் காட்டப்பட்டுள்ளன.

| | | | | புத்தளம் |
|---|---|---|---|---|
| | | | கொழும்பு | 142 |
| | | காலி | 116 | 258 |
| | மாத்தறை | 45 | 161 | 303 |
| அம்பாந்தோட்டை | 77 | 122 | ...... | ...... |

13. அம்பாந்தோட்டையிலிருந்து மாத்தறை காலி ஊடாக கொழும்புக்குள்ள தூரம் யாது? ..............................
14. அம்பாந்தோட்டையிலிருந்து காலிக்கான தூரம் எவ்வளவு? ..............................
15. 150ml குளிர்பானச்சாறு 850ml நீருடன் கலக்கப்பட்டு குளிர்பானமாக்கி 8 பேருக்கு சமமாக வழங்கப்பட்டது. எனின் ஒருவருக்கு வழங்கிய குளிர்பானத்தின் அளவு யாது? ..............................
16. ஒரு பென்சிலின் விலை ரூபாய் 15.00 எனின் ஒரு டசின் பென்சிலின் மொத்தப் பெறுமானம் யாது? ..............................

- தரப்பட்டுள்ள ஒவ்வொரு வினாவிற்கும் சரியான விடையினைத் தெரிவு செய்து கோடிடுக.

1. மனிதனுக்கு நோயைப் பரப்பும் பிராணி?
 1. அணில் 2. எலி 3.ஓணான் 4. கீரி
2. எல்லாச் சமயத்தினருக்கும் வணங்கித் துதிக்கும் மலை?
 1. பேதுருதாலகாலமலை 2. நமுனகுலகந்த
 3. அப்புத்தளை 4. சிவனொளிபாதம்
3. உக்கக் கூடிய பொருள் எது?
 1. யோகட் 2. பிளாஸ்டிக் 3.பொலித்தீன் 4. கடதாசி
4. காந்தத்தினால் கவரப்படும் பொருள்?
 1. இரும்பாணி 2. பென்சில் 3. அடிமட்டம் 4. கடதாசி
5. கடமைகளை நிறைவேற்ற எனது மனதில் தோன்றிய ஆர்வம் எனது நண்பர்களின் மனதிலும் தோன்றட்டும். இக் கூற்றானது காணப்படுவது மனதை ஒரு நிலைப்படுத்தும் படிகளில் எதைக் காட்டுகிறது?
 1. மலர்வு 2. மனவுறுதி
 3. பிரார்த்தனை 4. மனதைத் தளர்த்தல்
6. காலை வேளை சூரிய ஒளியின் மூலம் எமக்குக் கிடைக்கும் உயிர்ச்சத்து எது?
 1. உயிர்ச்சத்து A 2. உயிர்ச்சத்து C
 3. உயிர்ச்சத்து B 4. உயிர்ச்சத்து D
7. பின்வருவனவற்றுள் நத்தை நடமாடும் நேரம்?
 1. பகல் 2. மதியம் 3.விடியற்காலை 4.இரவு
8. விலங்குகள் சரணாலயத்தைக் குறிக்கும் நிறம்?
 1. பச்சை 2. நீலம் 3. மஞ்சள் 4. கறுப்பு
9. தேனை உணவாக உட்கொள்ளாத பிராணி?
 1. வௌவால் 2. கிளி 3. தேனீ 4. குளவி
10. வாழைப்பூவை நாடிவரும் பிராணி எது?
 1. அணில் 2. காகம் 3. தும்பி 4. எலி
11. பின்வருவனவற்றுள் கால்கள் அற்ற பிராணி?
 1. அறணை 2. நுளம்பு 3.பல்லி 4. மண்புழு
12. சோடியாக நடமாடும் பிராணியாக அமைவது?
 1. நாகணவாய் 2. காகம் 3. பாம்பு 4. பல்லி
13. இலங்கைக்கே உரித்தான முலையூட்டி விலங்கு எது?
 1. நீலப்புள் 2. புள்ளிக் கோட்டி 3.கருங்குரங்கு 4. மலைப்பாம்பு
14. நீரில் மாத்திரம் வாழும் பிராணியாக அமைவது?
 1. ஆமை 2. இறால் 3. தவளை 4. வாத்து
15. பின்வருவனவற்றுள் எப்பிராணி பொருளாதார ரீதியில் பயன் தரும் ஓர் உற்பத்திப் பொருளை ஆக்குகின்றது.
 1. தேனீ 2. வெட்டுக்கிளி 3. வண்ணாத்துப்பூச்சி 4. குளவி
16. இறைச்சியை மாத்திரம் உணவாக உட்கொள்ளும் விலங்கு?
 1. நாய் 2. பூனை 3. பல்லி 4.சிங்கம்
17. மாணவர்களாகிய உங்களின் கடமைகளில் ஒன்று?
 1. சுயநலத்துடன் வாழுதல்
 2. காடுகளை அழித்தல்
 3. பாடசாலைச் சொத்தைப் பாதுகாத்தல்
 4. சுயதொழில் செய்தல்

18. ஒரு வேலையைச் செய்வதற்கு சிறந்த வழிமுறையாக அமைவது?
1. தனியே ஒருவர் சிரமத்துடன் செய்தல்
2. ஒழுங்குபடுத்தல் இல்லாது ஒரே குழுவினர் செய்தல்
3. சரியான திட்டமிடலும் குழுவாகச் சேர்ந்து செய்தலும்
4. நேரம்வரும்போது காலம் தாழ்த்திச் செய்தல்

19. காற்று மூலம் பரம்பலடையாத வித்து?
1. முருங்கை 2. புலிநகம் 3. பொன்நொச்சி 4. பருத்தி

20. பழ உண்ணி விலங்கு எது?
1. கிளி 2. எலி 3. அணில் 4. வண்ணத்துப்பூச்சி

21. மின்னேரியாக் குளத்தைக் கட்டுவித்த மன்னன்?
1. தேவநம்பியதீசன் 2. வசபன்
3. மகாசேனன் 4. எல்லாளன்

22. SLS இக் குறியீடு உணர்த்துவது?
1. உலகச் சான்றிதழ்
2. இலங்கைத் தரச் சான்றிதழ்
3. பற்பசை தரச் சான்றிதழ்
4. சர்வதேச புத்தக தரச் சான்றிதழ்

23. "ஆகாயத்தோட்டி" என அழைக்கப்படுவது?
1. ஒட்டகம் 2.பருந்து 3.புறா 4.காகம்

24. ஆட்பதிவுத் திணைக்களத்தால் பெறப்படும் சேவை.
1. கடவுச்சீட்டு பெறல்
2. காசோலை மாற்றல்
3. அடையாள அட்டை பெறல்
4. நன்னடத்தைச் சான்றிதழ்!! பெறல்

25. சுயசுத்தம் பேணும் பிராணி எது?
1. பன்றி 2. நாய் 3. பூனை 4. கோழி

26. நாக்கை நீட்டி உணவை பிடிக்கும் விலங்கு அல்லாதது?
1. பல்லி 2. தவளை 3. உடும்பு 4.கோழி

27. வித்துக்களைப் பயன்படுத்திச் செய்யும் ஆக்கம்?
1. கொலாஜ் 2. ஒரிகாமி 3. அல்பனா 4. பரவுருபச்சித்திரம்

28. நாருருவேர் அல்லாத தாவரம்?
1. கரும்பு 2. நெல் 3. பனை 4.குப்பை மேனி

29. சூழல்நேயப் போக்குவரத்துச் சாதனம்?
1. ஆட்டோ 2. கப்பல் 3. புகைவண்டி 4. ஈருருளி

30. "அரிவி வெட்டப்போறேன் பெண்ணே" என்ற பாடலைப் பாடுபவர்கள்?
1. மீனவர்கள் 2. மாலுமிகள்
3. உழவர்கள் 3. தையல்வேலை செய்பவர்




# குணசேகரன்

(நேற்றைய தொடர்ச்சி)

படையெடுத்து, வெற்றிகண்டு, அதை குணசேகரனுக்கு உரிமையாக்கி விடலாம் என்று கருதினார்.

அப்போது, விசால இராச்சியத்து இளவரசி சந்திரகலாவின் சுயம்வரம் அறிவிக்கப்பட்டு, அதற்கு பல நாட்டு இளவரசர்கள் அழைக்கப்பட்டு இருந்தனர். உடனே, மன்னர் மூத்தவன் குலசேகரனுக்கு பதிலாக குணசேகரனையே சுயம்வரத்திற்கு அனுப்ப எண்ணினார்.

சந்திரகலா விசால ராஜாவிற்கு ஒரே பெண்! அதனால், அவளை மணம் புரிந்தால், குணசேகரன் எதிர் காலத்தில் விசாலராஜ மன்னன் ஆகிவிடுவான் என்ற நப்பாசைதான்காரணம்! அதைப் பற்றி மன்னர் சந்திரவர்மர் குணசேகரனிடம்கூறியபோது, அவனும் முதலில் சுயம்வரத்திற்குச் செல்லவே விரும்பினான். ஆனால் குலசேகரன் சந்திரகலாவை விரும்புவதையறிந்த அவன், உடனே தன் விருப்பத்தை கைவிட்டு விட்டாள். அதனால் குலசேகரன் மட்டும் சுயம்வரத்திற்குச் சென்றான்.

பல இராச்சியங்களில் இருந்து மன்னர்களும், இளவரசர்களும் சந்திரகலாவின் கரம் பற்ற விரும்பி சுயம்வரத்தில் கூடியிருந்தனர். சந்திரகலா தன் கையில் மாலையுடன் சுயம்வர மண்டபத்திற்குள் நுழைந்த போது, திடீரென ஒருவன் முன்னே வந்து அவளுடைய கையைப் பற்றிக் கொண்டு, "என் பெயர் மித்ரபிந்தன்! நான் சந்திரகலாவை



மிகவும்நேசிக்கிறேன். அவள் எனக்குத்தான் உரியவள்! அதனால் நான் இவளை என்னுடைய மகாபர்வத இராச்சியத்திற்கு அழைத்துச் செல்கிறேன். உங்களுக்கு வீரம் இருந்தால், போரில் என்னைத் தோற்கடித்த பிறகு, சந்திரகலாவை அழைத்துச் செல்லுங்கள்!" என்று சவால் விட்டு விட்டு, அங்கு தயாராக இருந்த தன் குதிரைமீது அவளை பலவந்தமாக ஏற்றிக் கொண்டு, விரைந்து வெளியேறி னான்.

சந்திரகலாவின் தந்தை வீரகுப்தர், தன் மகளை கயவன் மித்ரபிந்தனிடம்இருந்து மீட்டு வரும் இளவரசனுக்குத் தன் பெண்ணை மணமுடித்துத் தருவதுடன், தன் ராஜ்யத்தையும் அளிப்பதாக அறிவித்தார். உடனே சில நாள்களிலேயே, பல மன்னர்கள் மகா பர்வதத்தின்மீது படையெடுத்து, சந்திரகலாவை மீட்க முயன்றனர்.

ஆனால், மலைப்பிரதேசமான மகாபர்வத இராச்சியத்தோடு போரிடுவது மிகக் கடினமாக இருந்தது. படையெடுத்துச் சென்ற மன்னர்கள் அனைவரும் போரில் கொல்லப்பட்டனர். அவ்வாறு, போர்க்களத்தில் உயிர் நீத்தவர்களில் குலசேகரனும் ஒருவன்!

தன் சகோதரன் கொல்லப்பட்டதையறிந்த குணசேகரன் மித்ரபிந்தன் மீது தானே போர் தொடுக்க முடிவு செய்தான். ஆனால், மற்றவர்களைப் போல் உடனே படையெடுத்துச் செல்லாமல், முதலில் மித்ரபிந்தனைப் பற்றிய தகவல்களை சேகரிக்க முற்பட்டான்.

மித்ரபிந்தன் மகாபர்வதக் கோயிலின் அம்மன் ருத்ர பைரவியை சிறு வயது முதல் ஆராதனை செய்து, அம்மனிடமிருந்து பல விசேட சக்திகளைப் பெற்றிருந்ததாகத் தெரிந்து கொண்டான். ஒரு முறை ருத்ரபைரவி அவனுடைய கனவில் தோன்றி தனக்கு இரத்த தாகம் ஏற்பட்டுள்ளதாகவும், நூறு மன்னர்களை அவளுக்குப் பலியிட்டால், அவன் மகா பலம் பொருந்தியவனாகத் திகழ வரம் தருவதாகவும் கூறினாளாம்! ருத்ரபைரவியின் சூலாயுதத்தைக் கொண்டு மித்ரபிந்தனை யாராவது தாக்கினால் மட்டுமே அவன் இறப்பான் என்றும் கூறினாள்.

மேற்கூறிய தகவல்களை அறிந்த பிறகு, குணசேகரன் பல முன்னேற்பாடு நடவடிக்கைகளை மேற்கொண்டபின், அவன் தனியாக மாறுவேடத்தில் மகாபர்வதம் சென்றான். ஒருநாள் நள்ளிரவில், மித்ரபிந்தன் சந்திரகலாவுடன் ருத்ர பைரவியின் கோயிலுக்குச் சென்றபோது, அவர்கள் அறியாமல் பின் தொடர்ந்தான். அம்மனின் சந்நிதிக்கு மித்ரபிந்தன் சென்றதும் குணசேகரன், விரைந்து கருவறைக்குள் புகுந்தான். அம்மனின் கையிலிருந்த சூலத்தை எடுத்து, அவள் முன்னிலையில் மித்ரபிந்தன் மார்பில் சூலத்தைப் பாய்ச்சி, அவனைக் கொன்றான். உடனே குணசேகரன் முன் தோன்றிய அம்மன், "இத்துடன் நூறு இளவரசர்கள் பலியாகி விட்டனர். இறுதியாக நூறாவது இளவரசனை பலிகொடுத்த உனக்கு நான் வரம் தர விரும்புகிறேன். என்ன வேண்டுமோ, கேள்!" என்று சொல்ல, மித்ரபிந்தனைத் தவிர அனைவரையும் உயிர்ப்பிக்க வேண்டும் என வரம் கேட்க, அம்மனும் அவ்வாறே வரம் தந்தாள்.

உயிர் பெற்று எழுந்த மற்ற மன்னர்களையும் இளவரசர்களையும் நோக்கி "உங்களுக்கு உயிர் கொடுத்த குணசேகரனை உங்கள் சக்கரவர்த்தியாகக் கருதுங்கள்!" என்று கூறி மறைந்தாள்.


கதையை இந்த இடத்தில் நிறுத்திய வேதாளம் விக்கிரமனை நோக்கி, "மன்னா! குணசேகரனின் செயலைப் பார்த்தால் வியப்பாக இல்லையா? அரசாள்வதில்ஆசையே இல்லை என்று ஆரம்ப முதல் சொல்லி வந்தவன் இறுதியில் எப்படி மாறி விட்டான் பார்த்தாயா? தவிர, மித்ரபிந்தனை சாதாரண மனிதர்களினால் கொல்ல முடியாது என்று அம்மன்கூறியிருக்க, அவனை குணசேகரனால் எவ்வாறு கொல்ல முடிந்தது? என்னுடைய கேள்விகளுக்கு விடை தெரிந்தும் நீ மௌனமாக இருந்தால், உன் தலை வெடித்து சுக்கு நூறாகும்" என்றது.

அதற்கு விக்கிரமன், "இராச்சியம் ஆளும் ஆசையினால் குணசேகரன் மித்ரபிந்தனைக் கொல்லவில்லை. தன் சகோதரனைக்கொன்றவனைப் பழி தீர்க்க எண்ணியே அவன் மித்ரபிந்தனைக் கொன்றான். தன் சகோதரன் மட்டுமன்றி, மற்றும் பல மன்னர்களை அநியாயமாகக் கொன்று பலியிட்ட மித்ரபிந்தனை பழிவாங்கவே அவன் அவ்வாறு செய்தான்.


சாதாரண மனிதர்களினால் மித்ரபிந்தனைக் கொல்ல முடியாது என்று ருத்ரபைரவி கூறியிருந்தது உண்மையே! ஆனால் குணசேகரன் மற்றவர்களைப் போல் சராசரி மனிதன் அல்ல! நற்குணங்கள் பொருந்திய உத்தம புருஷன்! ஆகவே, சராசரி மனிதர்களிலிருந்து அப்பாற்பட்ட குணசேகரனால் மித்ரபிந்தனைக் கொல்ல முடிந்ததில் வியப்பில்லை!" என்றான்.

விக்கிரமனது சரியான பதிலினால் அவன் மௌனம் கலையவே, வேதாளம் மீண்டும் பறந்து சென்று முருங்கை மரத்தில் ஏறிக் கொண்டது.

# துப்பாக்கி உற்பத்தி நிலையம் சுற்றிவளைப்பு







(கொழும்பு)

மஹியங்கனை-தம்பான பிரதேசத்தில் சட்டவிரோத மாக நடத்திச் செல்லப்பட்ட துப்பாக்கி உற்பத்தி நிலையம் சுற்றிவளைக்கப்பட்டுள் ளது.


இதன்போது அங்கிருந்த சந்தேக நபரொருவரும் பொலிஸாரால் கைது செய்யப்பட்டுள்ளார்.

பதுளை ஒழுங்கமைக் கப்பட்ட குற்றத்தடுப்பு பிரிவால் நேற்று முன்தினம் மாலை இந்த சுற்றிவளைப்பு இடம்பெற்றுள்ளது.

குறித்த இடத்தில் இருந்து துப்பாக்கியொன்றும் துப்பாக்கி உற்பத்திக்கு பயன்படுத்தப்படும் பொருட்களும் கைப்பற்றப்பட்டுள்ளன.

சந்தேக நபர் மஹியங்கனை நீதவான் நீதிமன்றத்தில் முன்னிலைப்படுத்தப்படவுள்ளார். (இ-7)

# வரலாற்றில் முதல் தடவையாக கல்முனை மாநகர சபையின் பிரதி மேயராக தமிழர் தெரிவு



(கொழும்பு)

கல்முனை மாநகர சபையின் பிரதி மேயராக தமிழர் விடுதலைக் கூட்டணியின் உறுப்பினர்காத்தமுத்துகணேஷ் தெரிவு செய்யப்பட்டுள்ளார்.

ஸ்ரீலங்கா முஸ்லிம் காங்கிரஸ் கட்சியின் ஆதரவுடன் அவர்தெரிவுசெய்யப்பட்டுள்ளார்.

41 ஆசனங்கள் உள்ள கல்முனை மாநகர சபையில் மூன்று உறுப்பினர்களைக் கொண்டுள்ள தமிழர் விடுதலைக் கூட்டணி பிரதி மேயர் பதவியினைப் பெற்றுள்ளது.

மேயர் பதவிக்கு போட்டியிட்ட முஸ்லிம் காங்கிரஸ் உறுப்பினருக்கு தமிழர் விடுதலைக் கூட்டணி ஆதரவு வழங்கியமையால், பிரதி மேயர் பதவிக்குப் போட்டியிட்ட தமிழர் விடுதலைக் கூட்டணி உறுப்பினர் காத்தமுத்து கணேஷ் என்பவருக்கு மு.காங்கிரஸ் உறுப்பினர்கள் ஆதரவளித்தனர்.

அகில இலங்கை மக்கள் காங்கிரஸ் கட்சியின் சார்பில் பிரதி மேயர் பதவிக்குப் பிரேரிக்கப்பட்ட உறுப்பினருக்கே மு.கா. உறுப்பினர்கள் ஆதரவளிப்பார்கள் என அதிகம் எதிர்பார்க்கப்பட்ட போதும் அவர்கள் தமிழர் விடுதலைக் கூட்டணியைச் சேர்ந்த காத்தமுத்து கணேஷ் என்பவருக்கு வாக்களித்துள்ளமை குறிப்பிடத்தக்கது. (இ-7)

# இலத்திரனியல் பதிவு அறிமுகம்

புதிய நிறுவனங்களை பதிவு செய்வதற்கான இலத்திரனியல் நிறுவன பதிவு திட்டம் அறிமுகப்படுத்தப்பட்டுள்ளது. இது குறித்து 3 தொடக்கம் 6 மாதங்களில் இறைவரித்திணைக்களம் மற்றும் தொழிலாளர் சேமலாப நிதியங்களின் ஒருங்கிணைப்பு நடவடிக்கைகளில் மேற்கொள்ளப்படவுள்ளது. இருப்பினும் நிறுவனப்பதிவு இலத்திரனியல்மயமாக்கல் தொடர்பான பின்னூட்டல் காப்பு முறைமையின் செயற்பாடு மந்த நிலையில் காணப்படுகின்றமை முழு செயற்பாட்டினையும்பாதிப்பதாக அமையும்.

இலத்திரனியல் நிறுவன பதிவுகள் தொடர்பாக நேற்று கொழும்பில் இடம்பெற்ற இலத்திரனியல் மயப்படுத்தப்பட்ட நிறுவன பதிவுத்திட்டத்தின் உத்தியோகபூர்வ வெளியீட்டுநிகழ்விலேதொலைத் தொடர்பு மற்றும் டிஜிட்டல் கட்டமைப்பு அமைச்சின் செயலாளர் வசந்த தேசப்பிரிய மேற்கண்டவாறு தெரிவித்தார். (இ-7)

# தேயிலை மலையிலிருந்து சிறுத்தை குட்டியொன்று மீட்பு





(கொழும்பு)

நோர்வூட் பொலிஸ் பிரிவிற்குட்பட்ட கவரவல பெரிய சோலங்கந்த தோட்டத்தில் சிறுத்தை குட்டியொன்று பிடிகப்பட்டுள்ளது.

சோலங்கந்த தோட்ட தொழிலாளர்களே நேற்றுக் காலை தேயிலை மலையிலிருந்து சிறுத்தை குட்டியை மீட்டுள்ளனர்.

தாய் சிறுத்தையுடன் மேற்படி குட்டி சிறுத்தை தேயிலை மலையில் உலாவித் திரிந்துள்ளது.

தொழிலாளர்களை கண்டவுடன் தாய் சிறுத்தை குட்டியை விட்டுச் சென்றுள்ளதாகவும் இதனையடுத்து தொழிலாளர்கள் அநாதரவாக நின்ற சிறுத்தைக் குட்டியை மீட்டு பொலிஸாரிடம் ஒப்படைத்துள்ளனர்.

மேலும் சிறுத்தை குட்டியை நல்லதண்ணி வன ஜீவராசிகள் திணைக்கள அதிகாரிகளிடம் பொலிஸார் ஒப்படைத்துள்ளனர். (இ-7)

## facebook (f) ஃபேஸ்புக் பார்த்ததில் பிடித்தவை... Like 1376

Search for people, places and things   Nagendram   Home

### துஷ்யந்தி

நம் வாழ்வில் ஏற்படும் அர்த்தம் இல்லாத சில சண்டைகளினால்



அர்த்தமுள்ள ஆயிரம் சந்தோஷங்கள் தொலைந்து போகின்றன

### துஷா

சிலர் 100 ரூபாய் செலவழித்து கடவுளைப் பார்க்கின்றனர்



சிலர் 100 ரூபாயைக் கடவுளாகப் பார்க்கின்றனர்

### துளசி

கோவிலுக்குச் சென்றபின் சாம்பல் திருநீறு ஆகின்றது... பழம் பிரசாதமாகின்றது...



மனிதன் மட்டும் இன்னும் மாறாமல் திரும்பி வருகின்றான்....!

### சந்துரு

பூமியில் முதல் தோன்றிய இன்ஜினியர்



தூக்கணாங்குருவிகள்

### சரவணன்

நாம் சிறு வயதில் விமானத்தைப் பார்த்த அதே பிரமிப்புடன்



இன்று என் மகன் மாட்டுவண்டியைப் பார்க்கின்றான்...!

### சதீஷ்

உன்னை நேசிக்கும் இதயத்தை இறக்கும் வரை மறக்காதே



உன்னை மறந்த இதயத்தை வாழும் வரை நினைக்காதே...!

நீங்கள் பார்த்த ஃபேஸ்புக்கில் உங்களுக்குப் பிடித்தவை இருந்தால் www.facebook.com/valampurii எனும் தளத்தில் பதிவு செய்யுங்கள். அவை உங்கள் பெயர்களுடன் facebook பார்த்ததில் பிடித்தவை பகுதியில் பிரசுரமாகும்.

# உள்ளூராட்சித் தேர்தல்-2018 ஒரு பார்வை



பேராசிரியர் பொ.பாலசுந்தரம்பிள்ளை
வாழ்நாள் பேராசிரியர்
முன்னாள் துணைவேந்தர்

இப்புதிய கலப்பு முறைத் தேர்தலில் தமிழர், முஸ்லிம்கள் தங்கள் பிரதிநிதித்துவத்தை இருவழிகளிலும் பெறமுடிந்துள்ளது. உள்ளூராட்சிச் சபை பிரதேசங்களில் குறித்த குறித்த இடங்களில் சிறுபான்மையினர் செறிந்து வாழும் இடங்களைத் தனிவட்டாரமாகவோ இரட்டை அங்கத்தவர் வட்டாரமாகவோ உருவாக்கி சிறுபான்மையினரின் பிரதிநிதித்துவத்தை உறுதி செய்ய முடியும். குறிப்பாக இக்கலப்பு தேர்தல் முறையில் மாத்தளை, களுத்துறை, இரத்தினபுரி, கேகாலை, புத்தளம், கம்பஹா, கொழும்பு, பதுளை, கண்டி, மொனராகலை ஆகிய மாவட்டங்களிலிருந்து தமிழர்கள் வட்டார முறையில் தெரிவு செய்யப்பட்டுள்ளனர். குருநாகலை மாநகர சபைக்கும் அநுராதபுர மாவட்டம் கெக்கிராவை பிரதேச சபைக்கும் தமிழர் விகிதாசாரப் பட்டியலில் தெரிவு செய்யப்பட்டுள்ளனர்.

மாத்தறை மாவட்டம் கொட்டப்பொல பிரதேச சபைக்கு தனி வட்டாரத்திலிருந்தும் தெனிப்பிட்டி இரட்டை அங்கத்தவர் வட்டாரத்திலிருந்தும் இன்னொருவரும் விகிதாசாரப் பட்டியலில் இருந்து இன்னொருவருமாக மூன்று தமிழர்கள் தெரிவு செய்யப்பட்டுள்ளது இப்புதிய கலப்பு தேர்தல் முறையாலாகும். மேலும் ஒருவர் ஐக்கிய தேசிய கட்சியிலும் மற்றவர் பொதுஜன மக்கள் முன்னணியைச் சேர்ந்தவர் என்பதும் குறிப்பிடத்தக்கது. முதல் முறையாக மாத்தறை மாவட்டத்தில் தமிழர் பிரதிநிதித்துவம் கிட்டியுள்ளது.

கொழும்பு மாநகர சபையில் மட்டக்குளி, வளத்த முல்ல மூன்று அங்கத்தவர்கள் வட்டாரங்களிலும் சம்மாந்துறை வீரமுனை வட்டாரத்திலும் தமிழர் தங்கள் பிரதிநிதித்துவத்தை உறுதி செய்துள்ளார்கள்.

வட்டார விகிதாசார கலப்பு முறை மூலம் சிறுபான்மை சமுகங்கள் குறிப்பாக இலங்கைத் தமிழர், இந்தியத் தமிழர், முஸ்லிம்கள், மாத்திரமல்ல . மிகச்சிறிய சமூகங்களான மலாய, கொழும்புச் செட்டி, கபீர்கள், வேடுவர் போன்றோர்களும் தங்கள் பிரதிநிதித்துவத்தை பெறக்கூடியதாக இருந்தது. இதுபோல பௌத்த, இந்து, கத்தோலிக்க, கிறிஸ்தவ, இஸ்லாமியர்களும் வட்டார ரீதியிலோ விகிதாசார ரீதியில் தங்கள் பிரதிநிதித்துவத்தைப் பெற்றுள்ளனர். மேலும் சமூக-சமுதாய ரீதியில் வட்டாரங்கள் அமைந்ததால் வெவ்வேறு சமூக-சமுதாய மக்கள் தங்கள் பிரதிநிதித்துவத்தை பெற முடிந்துள்ளதைக் காணலாம். நாடுதழுவிய நிலையில் நுண்மட்டத்தில் ஒவ்வொரு சமூகப் பிரிவும் இக் கலப்பு முறைத் தேர்தலால் தங்கள் பிரதிநிதித்துவத்தை பெற்றுள்ளனர்.

கலப்புத் தேர்தல் முறையில் சிறுபான்மை சமூகங்களுக்கு அவர்களுக்குரிய பிரதிநிதித்துவத்தைப் பெற சந்தர்ப்பம் இருந்த பொழுதும் குறித்த சமூகம் பயன்படுத்துவதில் தங்கியுள்ளது. தெஹிவல, கல்கிஸை மாநகர சபையில் மொத்த மக்களில் தமிழர்கள் 15 வீதமாக இருந்த பொழுதும் 48 அங்கத்தவர் கொண்ட சபையில் ஒரு தமிழரும் பிரதிநிதிகளாகத் தெரிவு செய்யப்படவில்லை. இச்சபையில் தமிழ்ப்பெரும்பான்மையாக இருக்கும், வட்டாரம் ஒன்றும் உருவாக்கப்பட்டது. இங்கு வாழும் தமிழ்மக்கள் மத்திய வகுப்பினர். தமிழ்ப் பிரதிநிதித்துவத்தைப் பற்றி அக்கறையற்றவர்களாக நாமுண்டு நம் தொழில் என்ற மனோ பாவத்தால் தங்கள் அரசியல் பிரதிநிதித்துவத்தை இழந்துள்ளனர். எந்தவொரு சமூகமும் அரசியல் பிரதிநிதித்துவம் இல்லாதுவிடின் குறிப்பாக இலங்கை போன்ற நாடுகளில் முன்னேற முடியாது. அரசியல் சமூக உணர்வு இருப்பின் பிரதிநிதித்துவத்தைப் பெற முடியும்.

பரவலாக வாழும் சிறுபான்மையினரது சிறு சமூகக் குழுக்களின் பிரதிநிதித்துவம் பெரிய கட்சிகளின் சமூகப் பொறுப்பிலேயே தங்கியுள்ளது. முக்கியமான அரசியல் கட்சிகள், சிறுபான்மையினர் பிரதிநிதித்துவம் தொடர்பாக நியாயமாக நடந்துகொள்ளவில்லை என்பதற்கு நிறையச் சான்றுகள் உள்ளன. இரட்டை அங்கத்தவர் வட்டாரங்கள் உருவாக்கப்பட்டது இரு சமூகங்களுக்குப் பிரதிநிதித்துவம் கொடுப்பதற்கு. ஆனால் பல இரட்டை அங்கத்தவர்கள் வட்டாரங்களில் கட்சிகள் ஒரேயினத்தைச் சேர்ந்த இருவரை நிறுத்தி இருவரையும் வெற்றிபெற வைத்து மற்ற சமூகத்திற்கு தீங்கிழைத்துள்ளனர். உ+ம்: வவுனியா நகர சபை பட்டானிச்சூர் புளியங்குளம் வட்டாரம் இரட்டை அங்கத்தவர்கள் வட்டாரமாகும். இதில் முஸ்லிம் ஒருவரும் தமிழர் ஒருவரும் தெரிவாவார்கள் என எதிர்பார்க்கப்பட்டது. குறித்த ஒரு அரசியல் கட்சி இரண்டு முஸ்லிம் வேட்பாளர்களை நியமித்து இரண்டு அங்கத்தவர்களையும் பெற்றுள்ளது.

Local Authority - Colombo Municipal Council

Polling District - Colombo

Local Authority Final Result

| | | Members |
|---|---|---|
| UNP United National Party | 131353 (46.09%) | 60 |
| SLPP Sri Lanka Podujana Peramuna | 60087 (21.08%) | 23 |
| UPFA United People's Freedom Alliance | 31421 (11.03%) | 12 |
| UPA United Progressive Alliance | 27168 (9.53%) | 10 |
| JVP People's Liberation Front | 14234 (4.59%) | 06 |
| IG2 Independent Group 2 | 4833 (1.7%) | 02 |
| UPA United Peace Alliance | 4700 (1.65%) | 02 |
| SLNF Sri Lanka National Force | 3251 (1.14%) | 01 |
| CWC Ceylon Worker's Congress (P.Wing) | 2853 (1%) | 01 |
| NFGG National Front for Good Governance | 2771 (0.97%) | 01 |
| UNFF United National Freedom Front | 1380 (0.48%) | 01 |
| IG1 Independent Group 1 | 929 (0.33%) | 00 |
| Total Members | | 119 (Over hang members 09) |
| Valid | 284980 (0%) | |
| Rejected | 70230 (0%) | |
| Polled | 292003 (0%) | |
| Electors | 394044 (0%) | |

குறிப்பாக தமிழ்மக்கள் தங்களுக்குரிய பிரதிநிதித்துவத்தை பல இடங்களில் தவறவிட்டுள்ளார்கள். தமிழ் மக்கள் மத்தியில் தொகுதி அரசியல் பற்றிய அறிவு சகோதர இனங்களிலும் பார்க்க குறைவாகும். மேலும் இவர்கள் வாக்குகளை இலக்கு நோக்கிப் பயன்படுத் தாது சிதறவிடுகின்ற பண்புகளைக் கொண்டவர்களாக இருக்கின்றனர். மேலும் கட்சிகளாலும் தமிழ்மக்களுக்குரிய இடம் கொடுக்கப் படவில்லை. தமிழ் மக்களின் வாக்குகளைப் பெற்றுவிட்டு அவற்றுக்குரிய இடங்களை சகோதர இனங்களுக்கு கொடுக்கும் நிலை காணப்படுகின்றது. இதற் குக் காரணம் தமிழ்மக்கள் ஒற்றுமையில்லாது இருப்பதும் தீர்க்கதரிசனமற்று இருப்பதுவே. இது காலா்காலமாக நடந்து வருகின்ற பொழுதும் இதனைத் தமிழர்கள் அறியாதிருப்பது ஏன்? கொழும்பு மாநகர சபையின் மொத்தக் குடித்தொகையில் 30 வீதம் இருக்கும் தமிழ்மக்களுக்கு ஐக்கிய தேசியக் கட்சி எத்தனை பேரை விகிதா சாரப் பட்டியலில் சேர்த்துள்ளது.

25 வீத பெண்கள் பிரதிநிதித்துவம் உறுதி செய்யப் பட்டிருப்பினும் தேர்தல் சட்டத்தில் இதற்கான தெளிவான சட்டங்கள் இல்லாததால் 15 இற்கு மேற்பட்ட உள்ளூராட்சி சபைகளில் பெண் பிரதிநிதித்துவம் 25 வீதமாக இல்லாது குறைவாக இருக்கின்றது.

பல உள்ளூராட்சி சபைகளில் மிகக்கூடிய அங்கத்தவர்களைப் பெற்ற ஐக்கிய தேசியக் கட்சி ஆட்சியமைக்க முடியவில்லை. ஸ்ரீலங்கா பொதுஜன பெரமுன (SLPP) ஏனைய கட்சிகளின் ஆதரவைப் பெற்று குருநாகல், நீர்கொழும்பு, காலி, இரத்தினபுரி, தெஹிவல, கல்கிஸை நகரங்களில் ஆட்சியமைத்துள்ளனர். ஐக்கிய தேசியக் கட்சி குறிப்பாக பெரிய நகரங்களில் முதன்மை யாக வந்தபோதும்கூட ஆட்சியமைக்க முடியவில்லை. கொழும்பு மாநக ரத்தின் இன்றைய அங்கத்த வர்களின் எண்ணிக்கை 119 ஆகும்.

9 அங்கத்தவர்கள் தொங்கு நிலை ஆசனங்களாகும். ஐக்கிய தேசியக் கட்சி இச்சபையில் 60 ஆசனங்களைப் பெற்று ஒரு அங்கத்தவரையே பெரும்பான்மை யாகக் கொண்டுள்ளது.

உள்ளூராட்சி சபைகளின் மொத்த எண்ணிக்கையில் பெரும்பாலான சபைகளில் கூட்டு ஆட்சியே இடம்பெற்றுள்ளது. வருடாந்த வரவு-செலவுத் திட்டம் நிறைவேற்றுவது மிகவும் கடினமாக செயற்பாடாக இருக்கும்.

இம்முறை உள்ளூராட்சி சபைகளில் பெண் பிரதிநிதிகள் 25 வீதமாக இருப்பதால் கடந்த காலங்களைப் போல் உள்ளூராட்சி சபைக் கூட்டங்கள், சண்டை,சச்சரவு, அடிதடி, இல்லாமல் மென்போக்காக இருக்கும் என எதிர்பார்க்கப்படுகின்றது. மேலும் அபிவிருத்தித் திட்டங்களில் பெண் சார்பான திட்டங்கள் முன்னெடுக்கக் கூடிய நிலைமைகளும் காணப் படுகின்றன.

உள்ளூராட்சித் தேர்தல் சட்டங்கள் மற்றும் உள்ளூராட்சி சபைகளின் செயற்பாடுகள் மற்றும் உள்ளூராட்சிக் கட்டமைப்புக்களை வலுப்படுத்த பல்வேறு சீர்திருத்தங்கள் மேற் கொள்ளவேண்டியுள்ளது.

உள்ளூராட்சி சபைகளின் பெண் பிரதிநிதித்துவம் கொடுப்பதில் பல சிக்கல்கள் காணப்படுகின்றன. பெண் பிரதிநிதித்துவத்தை இலகுவான வழிகளில் உறுதி செய்யப்படவேண்டும்.

உள்ளூராட்சிசபைகளின் ஸ்திரத்தன்மையை உறுதிப் படுத்த நம்பிக்கையில்லாப் பிரேரணை கொர்ண்டுவரும் பொழுது த்ற்போதைய தலைவர் வேண்டாம் என்று சொல்வது மாத்திரமல்ல இவருக்கு மாற்றாக மாற்றுத் தலைவர் பெயர் நம்பிக்கையில்லாப் பிரேரணையில் இடம்பெறவேண்டும்.

நம்பிக்கையில்லாப் பிரேரணை நிறைவேறும் இடத்து மாற்று ஒழுங்கும் உடன் தீர்மானிக் கப்பட்டு விடும். இம்முறை ஜேர்மனியில் நடைமுறை யில் இருக்கின்றது. இம் முறை மூலம் உள்ளூராட்சிச் சபைகள் ஸ்திரத்தன்மை பெறும்.

நாட்டில் பல பகுதிகளில் இருந்து புதிய உள்ளூராட்சி சபைகளுக்கு கோரிக்கை முன்வைக்கப்பட்டன. எனினும் நுவரெலியா மாவட்டத்தில் புதிதாக நான்கு பிரதேச சபைகளும் பொலநறுவை மாநகரசபை மாத்திரமே அரசு ஏற்படுத்தியது.

இதனால் நாட்டின் பல்வேறு பகுதிகளில் புதிய உள்ளூராட்சி சபைகளுக்கான கோரிக்கைகளை அரசு காலதாமதமில்லாமல் பரிசீலிக்க வேண்டும்.

சாய்ந்த மருது நக்ர சபை, வெலிஓயா பிரதேச சபை, கிளிநொச்சி நகர சபை போன்ற முக்கிய கோரிக்கைகள் காலதாமதமில்லால் ஆராயப்பட்டு முடிவுகள் எட்டப்படவேண்டும். இதன் மூலம் உள்ளூராட்சி சபைகளில் காணப்படும் பிரச்சினைகளைத் தீர்க்க முடியும். இன்றைய கலப்புத் தேர்தல் முறை சகலரையும் உள்வாங்கிய ஜனநாயக முறையாக இருப்பதால் (Inclusive democracy) மக்கள் யாவரும் உள்ளூராட்சி சபைகளை சிறப்பாக இயங்க வைக்க ஒத்துழைக்க வேண்டும்.

# ரணில் அரசின் இறுதி நாள் இன்று

## விமல் வீரவன்ச உறுதி

(கொழும்பு)



பிரதமர் ரணில் விக்கிரமசிங்கவிற்கு எதிரான நம்பிக்கையில்லாப் பிரேரணைக்கு கூட்டு எதிர்க்கட்சி, ஸ்ரீலங்கா சுதந்திரக்கட்சி மற்றும் ஐக்கிய தேசியக் கட்சியிலுள்ள தரப்பொன்றும் ஆதரவு வழங்கவுள்ளன. பிரதமரும் அவருடன் இருப்பவர்களும் நம்பிக்கையில்லாப் பிரேரணையைத் தோற்கடிப்பதற்கு எவ்வகையிலான நடவடிக்கைகளை முன்னெடுத்தாலும் அது வெற்றியளிக்கப் போவதில்லை. எனவே பிரதமர் ரணில் விக்கிரமசிங்க தலைமையிலான அரசாங்கத்தின் இறுதித் தினம் இன்றாகும் என்று கூட்டு எதிர்க்கட்சி தெரிவித்துள்ளது.

கூட்டு எதிர்க்கட்சி ஏற்பாடு செய்த ஊடகவியலாளர் சந்திப்பு பொரளை என்.எம். பெரேரா நிலையத்தில் நேற்று முன்தினம் மாலை நடைபெற்றது. அதில்கலந்து கொண்ட தேசிய சுதந்திர முன்னணியின் தலைவரும் பாராளுமன்ற உறுப்பினருமான விமல் வீரவன்ச இதனைத் தெரிவித்தார்.

நாட்டு மக்கள் கடந்த பெப்ரவரி மாதம் 10 ஆம் திகதி நல்லாட்சி அரசாங்கத்திற்கு எதிராக தமது ஆணையை வழங்கினர். அதனை அடிப்படையாகக் கொண்டு பிரதமர் ரணில் விக்கிரமசிங்கவிற்கு எதிராக கூட்டு எதிர்க்கட்சியும் ஸ்ரீல ங்கா சுதந்திரக் கட்சியும் இணைந்து நம்பிக்கையில்லாப் பிரேரணையைமுன்வைத்துள்ளது. எனவே இன்று சூரியன் மறைவதும் ஐந்தாம் திகதி சூரியன் உதிப்பதும் பிரதமர் ரணில் விக்கிரமசிங்க தலைமையிலான அரசாங்கத்தின் தோல்வியை பறைசாற்றிக் கொண்டாகும் என்பதை உறுதியாகக் கூறிக் கொள்கிறேன்.

தற்போது பல்கலைக்கழகங்கள் மூடப்பட்டுள்ளன. பொருளாதாரம் நாளுக்கு நாள் வீழ்ச்சியடைகிறது. வடக்கு, தெற்கு என சகல பிரதேசங்களிலும் சட்டம் செயலிழந்து போயுள்ளது. எப்போதுமில்லாதவாறு பாதாள உலகக் குழுக்களின் செயற்பாடுகள் அதிகரித்துள்ளன. ஆகவே நாட்டில் உரிய நிர்வாகம் இல்லை. உரிய நிர்வாகம் இல்லாத நிலையில் அரசாங்கத்தை முன்னெடுத்துச் செல்ல முடியாது.

எனவே பிரதமருக்கு எதிரான நம்பிக்கையில்லாப் பிரேரணைக்கு கூட்டு எதிர்க் கட்சி, ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சி மற்றும் ஐக்கிய தேசியக் கட்சியிலுள்ள தரப்பொன்றும் ஆதரவு வழங்கவுள்ளது. ஆகவே பிரதமர் ரணில் விக்கிரமசிங்க தனது பதவியிலிருந்து செல்லும் காலம் வந்துள்ளது. அதிலிருந்து தப்பிக்க முடியாது எனவும் அவர் மேலும் தெரிவித்தார்.(இ-7)

## வீடு ஒன்றின் மீது மண்திட்டுடன் சரிந்து விழுந்துள்ள கட்டடம்



(ஹற்றன்)

ஹற்றன் - வில்பிரட்புரம் பகுதியில் அமைந்துள்ள வீடு ஒன்றின் மீது நேற்று முன்தினம் இரவு மண்திட்டுடன் கட்டடம் ஒன்று சரிந்து விழுந்துள்ளது.

இதனால் குறித்த வீடு பகுதியளவில் சேதமடைந்துள்ளதாக பொலிஸார் தெரிவித்துள்ளனர். இந்தக் கட்டடம் இடிந்து விழும் போது வீட்டில் 4 பேர் உறங்கிக் கொண்டிருந்துள்ள போதும் தெய்வாதீனமாக எவருக்கும் பாதிப்பு ஏற்படவில்லை எனத் தெரிவிக்கப்படுகிறது. மண்திட்டு சரிந்ததன் காரணமாக வீட்டின் இரண்டு அறைகள் பகுதியளவில் சேதமாகியு ள்ளன.

சம்பவம் தொடர்பாக ஹற்றன் பொலிஸாருக்கும், கிராமஉத்தியோகத்தரும் அறிவிக்கப்பட்டுள்ளதாக வீட்டு உரிமையாளர் தெரிவித்துள்ளார்.

சம்பவம் இடம்பெற்ற பகுதியில் மாலை வேளைகளில் மழை பெய்து வருவதனாலேயே இந்த மண்திட்டு சரிந்து விழுந்துள்ளமை குறிப்பிடத்தக்கது. (இ-7)

## புதிய வரிச்சட்டத்தின் மூலம் சிறந்த பலனைப் பெறலாம்



(கொழும்பு)

சர்வதேச நாணய நிதியத்தின் ஆலோசனையின்படி நடவடிக்கை மேற்கொள்ள தாம் தயாரில்லை என நிதியமைச்சர் மங்கள சமரவீர தெரிவித்துள்ளார்.

நிதியமைச்சில் நேற்று முன்தினம் இடம்பெற்ற ஊடக சந்திப்பில் வைத்து அவர் இதனைத் தெரிவித்தார்.

புதிய வரிச்சட்டத்தின் மூலம் இந்த வருடத்தில் சிறந்த பலனை பெறலாம் என எதிர்பார்க்கின்றோம்.

2020 ஆம் ஆண்டளவில் 40 சதவீதமாக அதிகரிக்கப்பதே எமது நோக்கம்.

இதன் மூலம் வட் வரியை இல்லாமல் செய்ய முடியும்.

இதனிடையே, சர்வதேச நாணய நிதியம் எமக்கு பொறுத்தமில்லாதவற்றை செய்யுமாறு வலியுறுத்தாது.

அவ்வாறு நாணய நிதியம் கூறினாலும் இதனை மேற்கொள்ள அரசாங்கம் தயாரில்லை எனவும் நிதியமைச்சர் மங்கள சமரவீர தெரிவித்தார். (இ-7)

## தொழில் முயற்சியாளர்களை வலுவூட்டும் விசேட வேலைத்திட்டம் நடைமுறைக்கு

(கொழும்பு)



சிறிய மற்றும் நடுத்தர அளவிலான தொழில் முயற்சியாளர்களை வலுவூட்டும் விசேட வேலைத் திட்டமொன்று நடைமுறைப்படுத்தப்படும் என்று பிரதமர் ரணில் விக்கிர மசிங்க தெரிவித்துள்ளார்.

உலகை வெற்றிக் கொள்ளக்கூடிய உள்நாட்டு தொழில் முயற்சியாளர்களை உருவாக்குவது தற்போதைய அரசாங்கத்தின் நோக்கமாகும் என்று கொழும்பு பண்டார நாயக்க ஞாபகார்த்த சர்வதேச மாநாட்டு மண்ட பத்தில் நேற்று முன்தினம் நடைபெற்ற 2018 சந்தை ப்படுத்தல் மற்றும் கல்வி கண்காட்சி நிகழ்வில் கலந்து கொண்டு பிரதமர் இவ்வாறு தெரிவித்தார். (இ-7)

## நிபந்தனைகளை மீறியதால் மீண்டும் சிறைக்குச் சென்ற அரசியல்வாதிகள்



(கொழும்பு)

பிணைமுறி நிபந்தனைகளை மீறிய குற்றச்சாட்டில் விளக்கமறியலில் வைக்கப்பட்டுள்ள நாடாளுமன்ற உறுப்பினர் நிசாந்த மற்றும் அவரது சகோதரர்களால் முன்வைக்கப்பட்ட பிணை கோரிக்கை நிராகரிக்கப்பட்டுள்ளது.

இந்த கோரிக்கை நேற்று சிலாபம் மேல்நீதிமன்றினால் நிராகரிக்கப்பட்டுள்ளது.

ஆராச்சிக்கட்டு பிரதேச சபையின் செயலாளரை தாக்கிய குற்றச்சாட்டிற்காக நாடாளுமன்ற உறுப்பினர் நிசாந்த மற்றும் அவரது சகோதரரான ஆராச்சிகட்டு பிரதேச சபையின் முன்னாள் தலைவர் சமந்த பெரேரா ஆகியோர் எதிர்வரும் 25 ஆம் திகதி வரை விளக்கமறியலில் வைக்கப்பட்டுள்ளனர்.

குறித்த சம்பவம் தொடர்பில் இருவரும் ஏற்கனவே கைது செய்யப்பட்டு நீதிமன்றில் முன்னிலைப்படுத்திய போது அவர்களுக்கு நிபந்தனையுடனான பிணையுடன் விடுதலை கொடுக்கப்பட்டது.

பொலிஸ் நிலையத்திற்கு வருகை தந்து கையொப்பம் இடுதல் உள்ளிட்ட நிபந்தனைகள் விதிக்கப்பட்டிருந்தன. எனினும் அவர்கள் நிபந்தனைக்கு அமைவாக செயற்படாமையினால் மீண்டும் கைது செய்யப்பட்டு நீதிமன்றில் முன்னிலைப்படுத்தப்பட்டதன் பின்னர் விளக்கமறியலில் வைக்கப்பட்டுள்ளனர் என்பது குறிப்பிடத்தக்கது. (இ-7)

## கல்முனை மாநகர சபையை மு.காங்கிரஸ் கைப்பற்றியது

(கொழும்பு)



கல்முனை மாநகர சபையின் ஆட்சியை யானைச் சின்னத்தில் போட்டியிட்ட முஸ்லிம் காங்கிரஸ் கைப்பற்றியுள்ளமையைத் தொடர்ந்து, ஏ.எம். றக்கீப் சபையின் தவிசாளராக நேற்று முன்தினம் திங்கட்கிழமை தெரிவு செய்யப்பட்டார்.

அகில இலங்கை மக்கள் காங்கிரஸின் 05 உறுப்பினர்களும், தமிழர் விடுதலைக் கூட்டணியின் மூன்று தமிழ் உறுப்பினர்களும் ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சியின் ஒரு உறுப்பினரும் சட்டத்தரணியான றக்கீபுக்கு சார்பாக வாக்களித்திருந்தனர்.

குறித்த மாநகர சபை 41 ஆசனங்களைக் கொண்டிருந்த போதும், 31 உறுப்பினர்களே வருகைதந்திருந்ததுடன், அவர்களில் சிலர் வாக்களிக்கவில்லை. இந்நிலையில் தவிசாளராகத் தெரிவு செய்யப்பட்ட சட்டத்தரணி றக்கீப் 22 வாக்குகளை ஆதரவாகப் பெற்றுக் கொண்டார்.

இதன்போது ஐக்கிய தேசியக் கட்சி (மு.கா) 12 ஆசனங்கள், சுயேட்சைக் குழு (இலக்கம் 4) 9 ஆசனங்கள், தமிழரசுக் கட்சி (த.தே.கூ) 7 ஆசனங்கள், அ.இ.மு.கா 5 ஆசனங்கள், தமிழர் விடுதலைக் கூட்டணி 3 ஆசனங்கள், தேசிய காங்கிரஸ் 1 ஆசனம், நல்லாட்சிக்கான தேசிய முன்னணி 1 ஆசனம், ஸ்ரீ.ல.சு.கட்சி 1 ஆசனம், சுயேட்சைக் குழு (இலக்கம் 2) 1 ஆசனம், சுயேட்சைக்குழு (இலக்கம் 2) 1 ஆசனம் என்ற வகையில் ஆசனங்கள்அமைந்தன.(இ-7)

# கயிலாச யாத்திரை

## ஓர் அனுபவப் பகிர்வு 13

பரமசாமி பஞ்சாட்சரம்

இராவணனின் அன்புக்கு கட்டுப்பட்ட சிவன் எல்லா வரங்களையும் வழங்கினார். இத்துடன் சந்திரகாசம் என்னும் வாள், சிவதனு என்னும் வலிமை பொருந்திய வில், அம்புகள் மற்றும் வசம் ஆகியவற்றையும் சேர்த்து வழங்கினார் என்று புராணங்கள் கூறுகின்றன.

**அர்ச்சுனனின் தவம்**

அர்ச்சுனன் ஓர் சிவ பக்தன் என்றும் இவர் தினம்தோறும் சிவனை பூவினாலே அர்ச்சித்து வந்தார் எனவும் பாரதப் போர் ஆரம்பமாவதற்கு முன்னதாக கயிலை வந்து கயிலாயத்திற்குத் தெற்கே உள்ள வெந்நீர் ஊற்றுக்கு அருகாமையில் அமர்ந்து தவம் செய்து பாசுபதாஸ்திரம் என்னும் ஆயுதத்தை சிவபெருமானிடம் இருந்து பெற்றதாகவும் மகாபாரதம் கூறுகின்றது.

**ஸ்ரீ ஆதி சங்கரரின் தவம்**

ஸ்ரீ ஆதி சங்கரர் கயிலாய புண்ணிய யாத்திரையை மேற்கொண்டு கயிலையிலே தவமிருந்து திருக்கயிலாயத்தில் சிவனினதும் பார்வதி அம்மனினதும் தரிசனம் கிடைக்கப் பெற்றவர். பெருமானை வணங்கி அவரிடமிருந்து பூரண அருளையும் உலக நன்மைக்காக ஐந்து படிக இலிங்கங்களையும் பெற்றார். அவர் பெற்ற ஐந்து இலிங்கங்களை கீழே கொடுக்கப்பட்டிருக்கும் ஐந்து புனித சேஷ்திரங்களில்,

- முத்தி இலிங்கத்தை பதரி காசி ஆச்சிரமத்திலும்
- வரலிங்கத்தை நேபாளிலுள்ள நீலகண்ட சேஷ்திரத்திலும்
- மோட்சலிங்கத்தைச் சிதம்பரத்திலும்
- போகலிங்கத்தை சிருங்கேரியிலும்
- யோகலிங்கத்தை காஞ்சிபுரத்திலும் பிரதிஷ்டை செய்தார்.

**புனித யாத்திரை**

புனித யாத்திரை செய்வது பன்னெடுங்காலமாக நிகழ்ந்து வரும் ஒரு மரபாக கருதப்படுகின்றது. ஏதேனும் ஒரு ஆன்மீக பயணக் கட்டுரையை



வாசிக்கும் பொழுது மெய் சிலிர்க்கலாம் அல்லது திகைப்பூட்டும் அனுபவத்தைப் பெறலாம். ஆனால் புனித யாத்திரை செய்வதன் மூலம் இதையும் தாண்டிய ஒரு தெய்வீக உணர்வை ஒருவர் உணரலாம். உயர்ந்த சிந்தனைகளையும் தெய்வீகமான மனோநிலையையும் தருவது புனித யாத்திரை ஆகும்.

புனித யாத்திரைக்கு செல்வதற்கு முன் ஒருவர் யாத்திரை பற்றியும் கடவுளின் தெய்வீக தன்மைகள் பற்றியும் (Divinity) அறிவதுடன் தியானமும் செய்து வர வேண்டும். அப்போது தான் எல்லாம்வல்ல இறைவனின் சகவல்லமை பொருந்திய அருளை உணர முடியும் என்று ஈஸ்வரானந்தகிரி எழுதியுள்ளார். யாத்திரை செய்ய விரும்புவோர் உடலில் ஆரோக்கியமும் வலிமையும் இருக்கும் போதே அதை மேற்கொண்டு அனுபவிக்க வேண்டும். கயிலாச யாத்திரை என்பது ஏனைய யாத்திரைகளை விட மேன்மையானது (உயர்ந்தது, புனிதமானது). இந்த புனித யாத்திரை இம்மையிலும் மறுமையிலும் நன்மை செய்ய வல்லது.

கயிலாசயாத்திரையை மேற்கொள்பவர்கள் மான சரோவர் ஏரியில் நீராடிய பின் மானசரோவர் ஏரியை வலம் வருவார்கள்.

அதன் பின் கயிலை சென்று கயிலாச மலையையும் வலம் வருவார்கள். இப்படி வலம் வருவதை கிரி வலம் என்றும் ''பரிக்கிரமா'' என்றும் ''கொறா'' என்றும் அழைப்பார்கள்.

(தொடரும்)

# பேருந்து விபத்தில் 36 பெண்கள் காயம்



(கொழும்பு)

ஆடைத் தொழிற்சாலை பணியாளர்களுடன் பயணித்த பேருந்து ஒன்று நிறுத்தி வைக்கப்பட்டிருந்த லொறியுடன் மோதியதில், 37 பேர் காயமடைந்து சிலாபம் வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளனர்.

புத்தளம் - சிலாபம் வீதியில் ஆராச்சிக்கட்டுவ, எலம்பவட்டுவன பிரதேசத்தில் நேற்றுக் காலை இந்த விபத்து இடம்பெற்றது.

காயமடைந்தவர்களுள் 36 பெண்களும் பேருந்தின் சாரதியும் வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளதாகப் பொலிஸார் தெரிவித்துள்ளனர். (இ-7)

# பயணித்துக் கொண்டிருந்த ஆட்டோ தீப்பற்றியது



நாவலப்பிட்டி தலவாக்கலை பிரதான வீதியில் நேற்று முன்தினம் மாலை சென்று கொண்டிருந்த ஆட்டோ ஒன்று கெட்டபுலா சந்தியில் திடீரென தீப் பிடித்து எரிந்துள்ளதாக நாவலப்பிட்டி பொலிஸார் தெரிவித்தனர்.

பயணத்தின் போது ஆட்டோவில் திடீரென தீப்பிடித்துள்ள நிலையில், சாரதியும் பயணியும் ஆட்டோவை விட்டு பாய்ந்துள்ளமையால் அவர்கள் இருவரும் எவ்வித தீக்காயங்களுமின்றி உயிர் தப்பியுள்ளனர். எவ்வாறாயினும் தீயினை அணைக்க பிரதேசவாசிகள் முயற்சித்துள்ள போதிலும் ஆட்டோ முற்றிலும் எரிந்து சேதமாகியுள்ளது. (இ-7)

# மாணவிக்கு துவிச்சக்கரவண்டி வழங்கல்

(யாழ்ப்பாணம்)

வடக்கு மாகாணசபை உறுப்பினர் என்.கனகரட்ணம் விந்தன் தனது 2018 ஆம் ஆண்டுக்கான நிதி ஒதுக்கீட்டின் மூலம் அரியாலையில் இருந்து வந்து யாழ். திருக்குடும்பக் கன்னியர்மட தேசியப் பாடசாலையில் கல்வி பயிலும் மாணவி ஒருவருக்கு 14 ஆயிரம் ரூபா பெறுமதியான துவிச்சக்கரவண்டி ஒன்றினை நேற்று பாடசாலையில் வைத்து அதிபர் அருட்சகோதரி அன்ரனிற்றா மார்க் மற்றும் உப அதிபர் திருமதி சும்பந்தன் ஆகியோரின் முன்னிலையில் வழங்கினார். (இ-7)



# ரணில் தலைமையிலான அரசு இன்று பதவியிழக்கும்

# தினேஷ் நம்பிக்கை

(கொழும்பு)

பிரதமருக்கு எதிரான நம்பிக்கையில்லாப் பிரேரணை வெற்றி பெற்ற பின்னர், அரசாங்கம் வீட்டுக்கு அனுப்பப்படும் எனவும், மகிந்த ராஜபக்ஷ தலைமையிலான கூட்டு எதிரணியினர் ஆட்சியமைக்கும் சந்தர்ப்பம் வந்தால், ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சி உள்ளிட்ட எந்தவொரு கட்சியுடனும் இணைந்து ஆட்சியமைக்கப் போவதில்லை எனவும் ஒன்றிணைந்த எதிரணி எடுத்துரைத்துள்ளது.



கூட்டு எதிரணியின் ஊடக சந்திப்பு, பொரளையில் உள்ள என்.எம். பெரேரா மத்திய நிலையத்தில் நேற்று முன்தினம் இடம்பெற்ற போது, அவ்வணியின் தலைவரும், நாடாளுமன்ற உறுப்பினருமான தினேஷ் குணவர்த்தன இதனை தெரிவித்தார்.

இன்று பிரதமர் ரணில் விக்கிரமசிங்க தலைமையிலான அரசாங்கம் தோற்கடிக்கப்படும் என அவர் தெரிவித்தார். (இ-7)

# சந்தைகளில் நேற்றைய விலை

| மரக்கறி வகைகள் | திருநெல்வேலி | நெல்லியடி | கொடிகாமம் | சுன்னாகம் | கிளிநொச்சி | மருதனார்மடம் |
|---|---|---|---|---|---|---|
| | ரூபா | ரூபா | ரூபா | ரூபா | ரூபா | ரூபா |
| கத்தரிக்காய் | 70 | 50 | 30 | 50 | 80 | 60 |
| உருளைக்கிழங்கு | 80 | 100 | 70 | 90 | 100 | 70 |
| பச்சைமிளகாய் | 50 | 40 | 45 | 50 | 80 | 50 |
| தக்காளி | 20 | 30 | 20 | 20 | 40 | 40 |
| மரவள்ளிக்கிழங்கு | 30 | 30 | 25 | 40 | 40 | 40 |
| கோவா | 20 | 30 | 30 | 40 | 40 | 30 |
| கரட் | 80 | 100 | 80 | 80 | 150 | 70 |
| பூசணி | 40 | 30 | 25 | 40 | 40 | 50 |
| புடோல் | 60 | 60 | 30 | 80 | 80 | 60 |
| வாழைக்காய் | 40 | 40 | 30 | 60 | 80 | 70 |
| சின்னவெங்காயம் | 150 | 160 | 110 | 120 | 130 | 120 |
| பெரிய வெங்காயம் | 70 | 50 | 55 | 80 | 80 | 100 |
| பாகற்காய் | 100 | 100 | 90 | 120 | 120 | 100 |
| வெண்டிக்காய் | 80 | 50 | 40 | 60 | 120 | 80 |
| கருணைக் கிழங்கு | 80 | 100 | 55 | 50 | 80 | 100 |
| பயற்றங்காய் | 50 | 100 | 25 | 50 | 80 | 100 |
| லீக்ஸ் | 140 | 160 | 110 | 80 | 200 | 120 |
| பீற்றூட் | 20 | 30 | 30 | 30 | 80 | 40 |
| கறிமிளகாய் | 70 | 60 | 35 | 80 | 80 | 120 |
| முருங்கைக்காய் | 200 | 250 | 200 | 240 | 400 | 500 |
| போஞ்சி | 100 | 150 | 40 | 160 | 120 | 120 |
| கத்தரித்தப்புளி | 60 | 30 | — | 50 | 60 | 30 |
| கீரை-1பிடி | 30 | 20 | 20 | 40 | 30 | 30 |
| தேசிக்காய் | 180 | 160 | 110 | 200 | 80 | 130 |
| தேங்காய் (ஒன்று) | 90 | 100 | 80-90 | 100 | 75 | 90 |
| இராசவள்ளி | 180 | 120 | 120 | 160 | 180 | 150 |
| வெங்காயப்பூ | 120 | — | — | — | 160 | 100 |
| முள்ளங்கி | 40 | — | 30 | 40 | 60 | 30 |
| பொன்னாங்காணி | 40 | 40 | 10 | 40 | 30 | 30 |
| வல்லாரை | 15 | 20 | 10 | 20 | 20 | 30 |
| ஈரப்பலா | — | 40 | — | — | 80 | 70 |

துணிச்சலாக நேர்வழியில் வாழ்ந்தால் பிரச்சினைகளும் கவலைகளும் மட்டுமல்ல, எதிரிகளும் அமைதியாகிவிடுவார்கள். ~ நேருஜி

வலம்புரி
T.P : 021 567 1530
website : www.valampurii.lk

## தேர்தல் விஞ்ஞாபனத்தின் முன்மொழிவை அழித்தால்...

பிரதமர் ரணில் விக்கிரமசிங்கவுக்கு எதிரான நம்பிக்கையில்லாப் பிரேரணை இன்று பாராளுமன்றத்தில் கொண்டு வரப்படுகிறது.

நம்பிக்கையில்லாப் பிரேரணை மீது பன்ரெண்டு மணித்தியாலங்கள் விவாதம் நடத்துவதற்காக நேரம் ஒதுக்கப்பட்டுள்ளது.

விவாதத்தின் இறுதியில் நம்பிக்கையில்லாப் பிரேரணை மீதான வாக்கெடுப்பு இடம்பெறும்.

பிரதமர் ரணில் விக்கிரமசிங்க தப்பிப் பிழைப்பாரா? என்பது அதில் முடிவு செய்யப்படும்.

இது ஒருபுறம் இருக்க, நம்பிக்கையில்லாப் பிரேரணை மீதான விவாதத்தின்போது, பிரதமர் ரணில் விக்கிரமசிங்க மீது ஏகப்பட்ட குற்றச்சாட்டுக்களை கூட்டு எதிரணி முன்வைக்கும்.

இதனை முறியடிப்பதாக ஐக்கிய தேசியக் கட்சி மறுத்துரைக்கும். இவை இன்றைய பாராளுமன்ற நிகழ்வில் நடைபெற இருப்பவை.

பிரதமருக்கு எதிராகக் கொண்டு வரப்படும் நம்பிக்கையில்லாப் பிரேரணையை ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன தலைமையிலான ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சி ஆதரிக்குமா? அல்லது எதிர்க்குமா? என்பதை பொறுத்திருந்து பார்க்க வேண்டும் என்பதற்கு அப்பால்,

ஜனாதிபதி மைத்திரி தலைமையிலான ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சி பிரதமர் ரணில் விக்கிரமசிங்கவுக்கு எதிரான நம்பிக்கையில்லாப் பிரேரணையை ஆதரிக்கும் நிலையில், பிரதமர் ரணில் விக்கிரமசிங்க தோற்க வேண்டி ஏற்பட்டால் அது ஒரு வகையான சிக்கலை உருவாக்கும்.

மாறாக, ரணில் விக்கிரமசிங்க வென்றுவிட்டால், ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேனவினதும் பிரதமர் ரணில் விக்கிரமசிங்கவினதும் எதிர்கால ஆட்சிக்காலம் மிகப்பெரும் குழப்பங்களையும் சச்சரவுகளையும் உண்டு பண்ணும்.

சிலவேளை ஜனாதிபதி மைத்திரி அதிரடியான சில முடிவுகளை அரசியல்புலத்தில் எடுக்க வேண்டிய தேவையும் ஏற்படலாம்.

எது எவ்வாறாயினும் பிரதமர் ரணில் விக்கிரமசிங்கவை தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு ஆதரிக்கப்போவது நிறுதிட்டமான உண்மை.

இந்த உண்மையை கூட்டமைப்பு இரகசியமாக வைத்திருக்கிறதேயன்றி பிரதமர் ரணில் விக்கிரமசிங்கவை ஆதரிப்பது என்ற முடிவில் எந்த மாற்றமும் இல்லை.

இவ்வாறு பிரதமர் ரணிலை கூட்டமைப்பு ஆதரிக்கும்போது, உள்ளூராட்சி சபைத் தேர்தலின்போது ஐக்கிய தேசியக் கட்சி விடுத்த தேர்தல் விஞ்ஞாபனத்தையும் கூட்டமைப்பு ஆதரிப்பதாகப் பொருள்படும்.

அதிலும் குறிப்பாக வடக்கு கிழக்கில் இரண்டாயிரம் விகாரைகளை அமைப்பது என்ற ஐக்கிய தேசியக் கட்சியின் தேர்தல் விஞ்ஞாபனத்துக்கு கூட்டமைப்பு தனது ஆதரவைத் தெரிவிப்பதாகவும் நிலைமை மாறும்.

ஆக, தேர்தல் விஞ்ஞாபனத்தில் விதந்துரைத்த இரண்டாயிரம் விகாரைகள் அமைத்தல் என்ற விடயத்தை நீக்க வேண்டும் என்ற நிபந்தனையை கூட்டமைப்பு முன்வைக்காவிட்டால், பிரதமருக்கு எய்த நாகாஸ்திரத்தை கூட்டமைப்பு தன் தலையில் வாங்கிக் கொள்வதாக நிலைமை முடியும்.

# நீதிக் கட்டமைப்பு திருத்தச் சட்டமூலத்திற்கு மூன்றில் இரண்டு பெரும்பான்மை வேண்டும்

(கொழும்பு)

பாராளுமன்றத்தில் சமர்ப்பிக்கப்பட்டுள்ள நீதிக்கட்டமைப்பு திருத்த சட்டமூலம் மூன்றில் இரண்டு பெரும்பான்மையுடன் நிறைவேற்றப்பட வேண்டும் என்று உச்ச நீதிமன்றம் பாராளுமன்றத்துக்கு அறிவித்துள்ளது.

கூட்டு எதிர்க்கட்சியின் பாராளுமன்ற உறுப்பினர் தினேஷ் குணவர்த்தன மற்றும் ஸ்ரீலங்கா பொதுஜன பெரமுனவின் தலைவர் பேராசிரியர் ஜி.எல்.பீரிஸ் உள்ளிட்டவர்கள் இணைந்து இந்த நீதிக்கட்டமைப்பு திருத்த சட்டமூலத்துக்கு எதிராக உச்ச நீதிமன்றத்தில் மனுத்தாக்கல் செய்தனர்.

அந்த சட்டமூலத்தில் அடங்கியுள்ள சில விதிமுறைகள், நீதித்துறைக்கு இருக்கின்ற அதிகாரங்கள் அரசாங்கத்தால் பறிக்கப்படுவதாக அமைந்துள்ளது என்று மனுவில் கூறப்பட்டது.

இதேவேளை நீதிக் கட்டமைப்பு திருத்த சட்டமூலத்திற்கு ஆதரவாகவும் வேறு சில தரப்பினரால் உச்ச நீதிமன்றத்தில் மனுத்தாக்கல் செய்யப்பட்டிருந்தது.

எவ்வாறாயினும் சட்டமூலத்துக்கு ஆதரவாக்வும் எதிராகவும் தாக்கல் செய்யப்பட்டிருந்த மனுக்கள் தொடர்பாக இடம்பெற்று வந்த விசாரணையின் முடிவு பாராளுமன்ற சபாநாயகருக்கு அறிவிக்கப்பட்டுள்ளது.

அந்த சட்டமூலம் அரசியலமைப்பின் சில விதிமுறைகளை மீறுவதால், அந்த சட்டமூலத்தை நிறைவேற்ற வேண்டுமானால் பாராளுமன்றத்தில் மூன்றில் இரண்டு பெரும்பான்மை வாக்குகள் அவசியம் என்று உச்ச நீதிமன்றத்தின் தீர்ப்பில் கூறப்பட்டுள்ளது. (இ-7)

# பொருட்களின் விலையேற்றங்கள் எமது மக்களின் வாழ்க்கைக்கு பாரிய அச்சுறுத்தல் விடுத்துள்ளது

## டக்ளஸ் தேவானந்தா சுட்டிக்காட்டு

(கொழும்பு)

நாட்டில் தற்போது ஏற்பட்டுள்ள அரசியல் நெருக்கடி நிலைமைகள், இந்த அரசாங்கத்தின் இருப்பு மீதான மக்களின் நம்பிக்கைக்கு சவால் விடுகின்ற அரசியல் செயற்பாடுகள், அது சார்ந்த கருத்து வாதங்கள் யாவும் மேல் எழுந்துள்ள நிலையில், எமது மக்களின் நாளாந்த வாழ்க்கையின் மீது பாரிய அச்சுறுத்தலை செலுத்தி வருகின்ற பொருட்களின் விலையேற்றங்கள் குறித்து அரச தரப்புகளால் கண்டு கொள்ளாமல் விடப்படுவதாகவே பொதுமக்கள் குற்றஞ்சாட்டி வருகின்றனர் என ஈழ மக்கள் ஜனநாயகக் கட்சியின் செயலாளர் நாயகம் டக்ளஸ் தேவானந்தா தெரிவித்துள்ளார்.

நாடாளுமன்றில் நேற்று நடைபெற்ற விசேட வியாபாரப் பண்டங்கள் அறவீட்டுச் சட்டத்தின் கீழான விவாதம் தொடர்பில் கருத்துத் தெரிவிக்கையிலேயே அவர் இவ்வாறு தெரிவித்துள்ளார்.

மேலும் அவர் தெரிவிக்கையில்,

கடந்த உள்ளூராட்சி சபைகளுக்கான தேர்தலுக்கு முனபாக அத்தியாவசியப் பொருட்களான அரிசி, பருப்பு, சீனி போன்ற பொருட்களின் விலைகளை ஓரளவு குறைந்த மட்டத்தில் தக்கவைத்துக் கொளவதற்கு அரச தரப்பில் நடவடிக்கைகள் எடுக்கப்பட்டிருந்த போதிலும், தற்போதைய நிலையில் அத்தகைய விலைக கட்டுப்பாடுகள் நிலவுவதாகத் தெரியவரவில்லை. சதொச விற்பனை நிலையம், கூட்டுறவுச் சங்கங்கள் போன்ற அரச விற்பனை நிலையங்களில் கூட தற்போது அரிசியின் விலைகள் அதிகரித்தே காணப்படுகின்றன. அதேபோன்று தான் ஏனைய அத்தியாவசியப் பொருட்களினது விலைகளும் அதிகரித்தே உள்ளன.

இத்தகையதொரு நிலையில் விசேட வியாபாரப் பண்டங்கள் அறவீட்டுச் சட்டம் தொடர்பில் இங்கு வாதப் பிரதிவாதங்களை மேற்கொண்டிருக்கின்றோம்.

மறைமுக வரிகளை குறைத்தும் நேரடி வரிகளை அதிகரித்தும் வரிகளின் மூலமான வருமானமே குறிக்கோளாகக் கொள்ளப்படுகின்றதே அன்றி, எமது மக்களுக்கு இவை எத்தகைய சுமைகளைக் கொண்டு தருகின்றன என்பது பற்றி நீங்கள் சிந்தித்து, அதற்குரிய - அதாவது எமது மக்களின் வாழ்க்கைச் சுமையினைத் தணிக்கக்கூடிய வழிவகைகளை மேற்கொள்வதாக இல்லை என அவர் மேலும் தெரிவித்தார். (இ-7)

### ஒரு இலட்சத்துக்கு அதிகம்

## வருமானம் பெறுவோருக்கு இனி வரி அறவிடப்படும்

(கொழும்பு)

ஒரு இலட்சத்துக்கும் அதிகமாக வருமானம் பெறும் ஊழியர்களிடம் இருந்து வருமான வரியாக 4,000 ரூபாய் அறவிடப்பட உள்ளது.

ஏப்ரல் முதலாம் திகதியிலிருந்து நடைமுறைப்படுத்தப்பட்டுள்ள புதிய தேசிய வருமான வரிச் சட்டத்தின் கீழ் ஊழியர்களின் சம்பளத்துக்கான வருமான வரி அறவிடபடும் முறையிலும் திருததங்கள் செய்யப்பட்டுள்ளதாக நிதி அமைச்சு தெரிவித்துள்ளது.

இதில் மாதம் ஒரு இலட்சத்துக்கும் குறைவாக வருமானம் பெறும் ஊழியர்களிடம் இருந்து வருமானவரி அறவிடப்படமாட்டாது என்றும் குறிப்பிடப்படுகின்றது. (ம)

## ஆரம்ப சுகாதார நிலைய திறப்புவிழா

சுதந்திர சுகாதார சேவையினை வலுப்படுத்தும் நோக்கத்தை முன்மாதிரியாகக் கொண்டு PSDG மூலத்தில் புதிதாக அமைக்கப்பட்டுள்ள ஆரம்ப சுகாதார நிலையம் கட்டைப்பிராயில் வடக்கு மாகாண சுகாதார அமைச்சர் வைத்திய கலாநிதி ஞானசீலன் குணசீலனின் அழைப்பின்பேரில் வடக்கு மாகாணக் கல்வியமைச்சர் கலாநிதி கந்தையா சர்வேஸ்வரனின் பிரசன்னத்தில் வடக்கு மாகாண முதலமைச்சர் நீதியரசர் சி.வி.விக்னேஸ்வரனால் இன்று 4ஆம் திகதி பிற்பகல் 4.30 மணிக்கு வைபவ ரீதியாக திறந்து வைக்கப்படும். (இ)

## பகவான் ஸ்ரீ ராமகிருஷ்ணரின் சிந்தனைச் செல்வம்

### கடவுளுக்கு அர்ப்பணிப்போம்



✦ மனிதர்கள் பெண்ணாசையும், பணத்தாசையும் கொண்டவர்களாக இருக்கிறார்கள். இந்த எண்ணமே தீராத நோயாக அவர்களைப் பீடித்திருக்கிறது. இதிலிருந்து விடுபட நல்லவர்களோடு பழகுவது தான் சரியான தீர்வு.

✦ சிலருடைய உள்ளம் கல்சுவர் போல உறுதியாக இருக்கும். அதில் ஆணி அடித்தால் அது வளைந்து போகும். அதுபோல, எவ்வளவு முயன்றாலும் அவர்களுக்குள் ஆன்மிக விடயம் எதுவும் உள்ளே போகாது.

✦ மக்களுள் பெரும்பாலோர் புகழுக்காகவோ, புண்ணியத்தைத் தேடுதல் பொருட்டோ பரோபகாரம் செய்கின்றனர். அத்தகைய சேவைகள் யாவும் சுயநலத்தை அடிப்படையாகக் கொண்டவை.

✦ பணம் அளவுக்கு அதிகமாக வைத்திருப்பவர்கள் தங்களுடைய செல்வத்தை சுயநலத்தால் தனக்காகவே வைத்துக் கொண்டிருக்கக் கூடாது. கஷ்டப்படுகிற ஜனங்களுக்கு உதவி புரிய வேண்டும்.

✦ மீன்கொத்திப்பறவை போன்று உலகத்தில் வாழ்ந்திருங்கள். அது நீருக்குள் மூழ்குகின்ற போது, சிறகுகளில் கொஞ்சம் நீர் ஒட்டிக் கொண்டிருக்கும். வெளியில் வந்து சிறகுகளைக் குலுக்கியதும் அந்த நீரும் அகன்று விடும். அதுபோல உலகியலில் ஈடுபட்டாலும் பற்றற்று இருக்கக் கற்றுக்கொள்ளுங்கள்.

## அன்றாட வாழ்வில் ஐஸ்வர்யம் அதிகரிப்பதற்கான ஆசாரங்கள்




**புதுமனை புகுவிழாவிற்கு ஏற்ற நாட்கள் எவை?**

நட்சத்திரம்: ரோகினி, மிருகசீரிடம், புனர்பூசம், உத்தரம், அத்தம், சுவாதி, அனுசம், மூலம், உத்தராடம், திருவோணம், அவிட்டம், சதயம், உத்தரட்டாதி, ரேவதி.

திதி: துதியை, திருதியை, பஞ்சமி, சப்தமி, தசமி, ஏகாதசி, திரயோதசி

லக்கினம்: இடபம், மிதுனம், சிம்மம், கன்னி, விருச்சிகம், தனுசு, கும்பம், மீனம்

மாதம்: தை, சித்திரை, வைகாசி, ஆவணி, ஐப்பசி, கார்த்திகை

நாள்: திங்கள், புதன், வியாழன், வெள்ளி (தொடரும்)

# மின்சாரம் தடைப்படும்

உயர் அழுத்த மற்றும் தாழ் அழுத்த மின் விநியோக மார்க்கங்களின் கட்டமைப்பு மற்றும் பராமரிப்பு வேலைகளுக்காக நாளை வியாழக்கிழமை காலை 8 மணியிலிருந்து மாலை 5 மணிவரை யாழ்.பிரதேசத்தில கோவில்வயல், கோததாண்டார்குளம், இயக்கச்சி, விநாயகபுரம், இயக்கச்சி இராணுவ முகாம் ஆகிய இடங்களிலும் வவுனியா பிரதேசத்தில அட்டம்பஸ்கட கிராமம், தவசிக்குளம் கிராமம், பண்டாரிக்குளம் கிராமம், கொக்கெலியவிலிருந்து ஓமந்தை வரை, ஓமந்தை வீட்டுத் திட்டம், ICT கல்லூரி, Union Alliance Ltd, AMP ஓமந்தை, ஓமந்தை மீன்பிடி வலைத் தொழிற்சாலை, பரநட்டாங்கல், நொச்சிமோட்டை, புதியசின்ன குளம், கொக்கிளாய், சாந்தசோலை ஆகிய இடங்களிலும் மன்னார் பிரதேசத்தில் தலைமன்னார் பிரதேசம் ஒரு பகுதி, கட்டையடம்பன், மளவராயா கட்டையடம்பன் ஆகிய பிரதேசங்களிலும், மின் தடைப்படும். (இ-9)

# கொலின்ஸ் உதைபந்தாட்டத் தொடர் அடுத்த சுற்றிற்கு முன்னேறிய அணிகள்




கொலின்ஸ் விளையாட்டுக் கழகம் நடத்தும் மாபெரும் உதைபந்தாட்டச் சுற்றுப் போட்டி King of Jaffna -2018 கடந்த மாதம் ஆரம்பமாகி விறுவிறுப்பாக நடைபெற்றுக் கொண்டிருக்கின்றது.

அந்த வகையில் கடந்த திங்கட்கிழமை நடைபெற்ற முதலாவது போட்டியில் தொண்டைமானாறு ஒற்றுமை விளையாட்டுக் கழகத்தினை எதிர்த்து யூத் விளையாட்டுக் கழகம் மோதியது.

மிகவும் உத்வேகத்துடன் ஆடிய ஒற்றுமை விளையாட்டுக் கழகம் 4:1 என்ற கோல்கணக்கில் வெற்றி பெற்றது.

இப் போட்டியின் ஆட்டநாயகனாக தொண்டைமானாறு ஒற்றுமை விளையாட்டுக் கழகத்தின் நட்சத்திர வீரர் சுகந்தன் தெரிவு செய்யப்பட்டார்.

நடைபெற்ற இரண்டாவது போட்டியில் வல்வெட்டித்துறை ஒற்றுமை விளையாட்டுக் கழகத்தினை எதிர்த்து கருணாகரனின் விளையாட்டுக் கழகம் மோதியது.

விறுவிறுப்பாக நடைபெற்ற போட்டியில் 1:0 என்ற கோல் கணக்கில் கருணாகரன் விளையாட்டுக் கழகம் வெற்றி பெற்றது.

இப் போட்டியின் ஆட்டநாயகனாக வல்வெட்டித்துறையின் ஒற்றுமை விளையாட்டுக்கழக அணி வீரர் யோகானந் தெரிவு செய்யப்பட்டார். (கு)

வலம்புரி SPORTS விளையாட்டுச் செய்திகள்

## கிரிசாந்தின் ஹற்றிக் சாதனையுடன்

# ஜொலிஸ்ராரை வீழ்த்தியது யாழ்.சென்றல் அணி



விஜியரட்ணம் ஞாபகார்த்த வெற்றிக் கிண்ணத் தொடரின் 4 ஆவது போட்டி கடந்த ஞாயிற்றுக் கிழமை காலை 9 மணிக்கு யாழ். இந்துக் கல்லூரி மைதானத்தில் நடைபெற்றது.

இப் போட்டியில் யாழ். சென்றல் அணி ஜொலிஸ்ரார் அணியை 6 இலக்குகளால் வெற்றி பெற்றது.

முதலில் துடுப்பெடுத்தா டிய ஜொலிஸ்ரார் அணி 17.3 ஓவர்களில் சகல இலக்குகளையும் இழந்து 119 ஓட்டங்களைப் பெற்றது.

உமாதரன்-24, சஜீகன்-15, கஜாநாத்-31, சந்தோஸ்-13 ஓட்டங்களைப் பெற்றனர்.

பந்து வீச்சில் யாழ்.சென்றல் அணியை சார்ந்த மதூசன்-2, கிரிசாந்-3 (ஹற்றிக் சாதனை), சுபாதீஸ்-2, றஜீவ்குமார்-3 இலக்குகளைக் கைப்பற்றினர்.

120 ஓட்டங்களை வெற்றி இலக்காகக் கொண்டு களமிறங்கிய யாழ். சென்றல் அணி 17.5 ஓவர்களில் 4 இலக்குகளை இழந்து 121 ஓட்டங் களைப் பெற்றனர். றஜீவ்குமார்-16, மதூஸன்-43, மில்லர் ஆட்டமிழக் காது 13, சலிஸ்ரன் ஆட்டமிழக்காது 31 ஓட்டங்களைப் பெற்றனர்.

பந்து வீச்சில் ஜொலிஸ்ரார் அணியை சார்ந்த வாமணன்-1, உமாதரன்-3 இலக்குகளைக் கைப்பற்றினர்.

இப் போட்டியில் வெற்றி பெற்ற யாழ். சென்றல் அணி எதிர்வரும் சனிக் கிழமை காலை 9 மணிக்கு யாழ். இந்துக் கல்லூரி மைதானத்தில் கே.சி.சி.சி அணியை எதிர் கொள்ள உள்ளது. (கு)

# மதுசாந் சிறப்பாட்டம் சம்பியனாகியது இளங்கதிர்









வல்வை உதயசூரியன் விளையாட்டுக்கழகம் நடத்திய வல்வைக் குட்பட்ட கழகங்களுக்கிடையே அணிக்கு 7 நபர் கொண்ட உதைபந்தாட்ட சுற்றுப்போட்டியினை நடத்தி வந்தது.

அவ்வகையில் கடந்த திங்கட்கிழமை இடம்பெற்ற இரண்டாவது இறுதி ஆட்டத்தில் வல்வை சைனிங்ஸ் விளையாட்டுக் கழகத்தை எதிர்த்து வல்வை இளங்கதிர் விளையாட்டுக்கழகம் மோதியது.

ஆட்டநேர முடிவில் இரு அணிகளும் எவ்வித கோல்களையும் பெறாத காரணத்தினால் வெற்றியாளரை தீர்மானிப்பதற்காக நடுவரால் வழங்கப்பட்ட சமனிலை தவிர்ப்பு உதையில் 5-4 என்ற கோல்கணக்கில் இளங்கதிர் விளையாட்டுக்கழகம் வெற்றி பெற்று சம்பியனாகியது.

இப்போட்டியின் ஆட்ட நாயகனாக இளங்கதிர் அணியைச் சேர்ந்த மதுசாந்தும் சுற்றுத் தொடரின் சிறந்த கோல் காப்பாளராக அதே அணியைச் சேர்ந்த விஜிகரன் மற்றும் தொடராட்ட நாயகனாக சைனிங்ஸ் அணியின் தீபனும் தெரிவு செய்யப்பட்டனர்.

இவ்வெற்றிக்கிண்ணமானது நடப்பாண்டில் இளங்கதிர் அணி பெற்றுக்கொண்ட முதலாவது வெற்றிக்கிண்ணம் என்பது குறிப்பிடத்தக்க விடயமாகும். (கு)

# கண்ணிமைக்காமல் கணவனை ரசித்த

## சாக்ஷி



இந்தியாவில் ஆண்டு தோறும் மத்திய அரசு சார்பில் பத்ம விருதுகள் வழங்கப்பட்டு வருகின்றன.

இந்த ஆண்டு, 3 பத்ம விபூஷன் விருதுகள், 9 பத்ம பூஷண் விருதுகள், 72 பத்மஶ்ரீ விருதுகள் அறிவிக்கப்பட்டன.

இதில் இரண்டாம் கட்டமாக 42 பேருக்கு குடியரசு தலைவர் மாளிகையில் வைத்து பத்மஶ்ரீ விருதுகள் வழங்கப்பட்டன.

இதில் இந்திய அணியின் முன்னாள் கிரிக்கெட் அணித் தலைவர் டோனியும் ஒருவர்.

டோனிக்கு பத்மபூஷண் விருதை குடியரசு தலைவர் ராம் நாத் கோவிந்த் வழங்கினார்.

இதை பெறுவதற்கு முன் டோனி இராணுவ உடையில் கம்பீரமாக நடந்து வந்து விருதினை பெற்றுக் கொண்டார்.

டோனிக்கு நெட்டிசன்கள் வாழ்த்து தெரிவித்துக் கொண்டிருக்க, அவரது மனைவி



சாக்ஷி தனது கணவரை ரசித்த காட்சியும் வைரலாகி வருகிறது.

தனது கணவர் இராணுவ உடையில் கம்பீரமாக நடந்து செல்வதை, வரிசையில் அமர்ந்து அவரது மனைவி சாக்ஷி கண் இமைக்காமல் உதட்டோரப் புன்னைகையுடன் ரசித்துப் பார்த்தார்.

மஞ்சள் நிற புடவையில் வந்திருந்த அவரது புகைப்படம் சமூக வலைத்தளங்களில் வைரலாகி வருகிறது. (கு)

## வட மாகாணத்தின்...

நேற்று செவ்வாய்க்கிழமை யாழ்ப்பாண த்திற்கு விஜயம் செய்துள்ளார்.

வட மாகாணத்திற்கு நேற்று விஜயம் மேற்கொண்டிருந்த கடற்படைக் கட்டளைத் தளபதி, வடமாகாண ஆளுநர் றெஜினோல்ட் கூரேயைச் சந்தித்துக் கலந்துரையாடினார்.

இச்சந்திப்பு முற்பகல் 10.30 மணியள வில் யாழ்.சுண்டுக்குளியில் அமைந்துள்ள ஆளுநர் செயலகத்தில் இடம்பெற்றதுடன், ஆளுநர் றெஜினோல்ட் கூரேயிற்கு கடற் படைக் கட்டளைத் தளபதி நினைவுப் பரிசொ ன்றையும் வழங்கி வைத்தார்.

சிநேகபூர்வமான இந்தச் சந்திப்பின்போது வடமாகாணத்திற்குள் கொண்டுவரப்படும் போதைப் பொருட்களை தடுப்பதற்குரிய செயற்பாடுகள் தொடர்பாகவும், எதிர்கால த்தில் மேலதிக நடவடிக்கைகள் மூலம் குறி த்த நடவடிக்கைகளைக் கட்டுப்படுத்துவது தொடர்பாகவும் கலந்துரையாடினர்.

மேலும் கடற்கரையோரப் பிரதேசங்களின் பாதுகாப்பு மற்றும் இந்திய மீனவர்களின் சட்டவிரோத ஊடுருவல்கள் தொடர்பாகவும் இதன்போது விரிவாகக் கலந்துரையாடப்பட்டி ருந்தமையும் குறிப்பிடத்தக்கது. (மு-60)

## இறுதிவரை போராடப்...

விசேட அமைச்சரவை கூட்டம் இடம் பெற்றது. இதனை தொடர்ந்து சுதந்திரக் கட்சியின் கோரிக்கையை அதன் சார்பாக அமைச்சர் நிமால் சிறிபால டி சில்வா வெளி யிட்டார்.

அதற்கு பதிலளிக்கும் வகையில், ரணில் விக்கிரமசிங்க பிரதமர் பதவியில் தொடர்ந்து நீடிக்க வேண்டும் என அமைச்சர் ஹரின் பெர்னாண்டோ தெரிவித்துள்ளார். (ம)

## ரணிலை காப்பாற்று...

உறுப்பினர்களுக்கிடையிலான கலந்து ரையாடல் ஒன்று நேற்று கொழும்பில் இடம் பெற்றது. அதன் போதே மேற்குறித்த முடிவு எடுக்கப்பட்டுள்ளதாக தெரிய வருகிறது.

நேற்று காலை இடம்பெற்ற குறித்த கூட்ட த்தில் கூட்டமைப்பில் உள்ள பல பாராளு மன்ற உறுப்பினர்கள் மேற்குறித்த விடயம் தொடர்பாக காரசாரமான விவாதங்களை முன்வைத்திருந்தனர். நம்பிக்கையில்லா பிரேரணைக்கு எதிர்ப்பு தெரிவிப்பதற்கு ரணி லிடம் உத்தரவாதங்களை பெறவேண்டும் என சிலர் தமது கருத்துக்களை முன்வைத் தனர். இதனால் பல குழப்பம் ஏற்பட்டது. பின் னர் குறித்த கலந்துரையாடல் ஒத்திவைக்க ப்பட்டது.

மீண்டும் பிற்பகல் கூட்டமைப்பின் பாரா ளுமன்ற உறுப்பினர்கள் பிரதமர் ரணில் விக்கிரமசிங்கவுடன் சந்திப்பை ஏற்படுத்தி யிருந்தனர்.

அதில் பல கோரிக்கைகளை முன்வைத் திருந்தனர். அதாவது தமிழ் மக்களுக்கு சார் பான அரசியல் தீர்வு காணாமல் ஆக்கப்பட் டோர் தொடர்பான பொறுப்புக்கூறல், தமிழ் அரசியல் கைதிகளின் விடுதலை, ஐ.நா தீர் மானத்தை நடைமுறைப்படுத்தல், காணிவிடு விப்பு உட்பட்ட பல கோரிக்கைகளை முன் வைத்து பிரதமருடன் கலந்துரையாடியிருந்த னர்.

குறித்த கோரிக்கைகளை நிறைவேற்று வதாக உத்தரவாதம் அளிப்பின் நம்பிக்கை யில்லா பிரேரணையை தோற்கடிப்பதற்கு உதவுவதாக கூட்டமைப்பினர் தெரிவித்த னர். எழுத்து மூல உத்தரவாதம் தர வேண் டும் எனவும் கோரியிருந்தனர்.

பிரதமர், அவர்களின் கோரிக்கைகளுக்கு இணங்கியதுடன் எழுத்துமூல உத்தரவாத த்தையும் தருவதாக உறுதியளித்திருந்தார்.

அதன் அடிப்படையில் கூட்டமைப்பை சேர்ந்த 16 பாராளுமன்ற உறுப்பினர்களும், மேற்குறித்த பிரதமருக்கு எதிரான நம்பிக் கையில்லா பிரேரணைக்கு எதிர்ப்பு தெரிவி த்து வாக்களிப்பதற்கு உடன்பட்டுள்ளனர். இருப்பினும் தமது உத்தியோகபூர்வ முடி வினை இன்று காலை அறிவிப்பதாகவும் தெரிவித்துள்ளனர்.

பிரதமர் ரணில் விக்கிரமசிங்கவிற்கு எதி ராக கூட்டு எதிர்க்கட்சியினர் பாராளுமன்ற த்தில் கொண்டுவந்துள்ள நம்பிக்கையில்லா பிரேரணையை தோற்கடிக்க பிரதமர் தலை

# நம்பிக்கையில்லா பிரேரணையில் பிரதமர் ரணில் வெற்றி பெறுவார்

## கொழும்பு அரசியல் வட்டாரங்கள் தகவல்

(கொழும்பு)

பிரதமர் ரணில் விக்கிரமசிங்க நம்பிக் கையில்லா பிரேரணையில் வெற்றி பெற் றால் புதிய பிரதமரை ஜனாதிபதி மைத்திரி பால சிறிசேன நியமிப்பார் என ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சித் தகவல்கள் தெரிவிக்கின்றன.

19ஆவது திருத்தச் சட்டத்தின் பிரகாரம் பிரதமரின் அதிகாரங்களில் ஜனாதிபதி தலையிட முடியும் என்றும், பிரதமரை பதவி விலக்கிவிட்டு புதிய பிரதமரை நியமிக்க லாம் எனவும் நாடாளுமன்ற உறுப்பினரும் சட்டத்தரணியுமான கலாநிதி ஜயம்பதி விக் கிரமரட்ண ஜனாதிபதி மைத்திரிபால சிறி சேனவுக்கு ஆலோசனை வழங்கியுள்ளதாக கட்சித் தகவல்கள் தெரிவிக்கின்றன.

ஐக்கியதேசியக் கட்சிக்கும், ஸ்ரீலங்கா சுத ந்திரக் கட்சிக்கும் இடையே நேற்று செவ்வா ய்க்கிழமை வரை இணக்கம் ஏற்படாத நிலையில், ஜயம்பதி விக்கிரமட்ணவின் யோசனைக்கு அமைவாக ஜனாதிபதி மைத் திரிபால சிறிசேன செயற்பட முடிவு செய்துள் ளதாகவும் கட்சித் தகவல்கள் கூறுகின்றன.

நல்லாட்சி அரசாங்கம் தொடர வேண்டு மானால், சபாநாயகர் கருஜெயசூரியவை அல் லது பிரதித் தலைவர் சஜித் பிரேமதாசாவை புதிய பிரதமராக நியமிப்பதற்கு முன்மொழி யுமாறு ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன, ஐக்கிய தேசியக் கட்சியிடம் கேட்டதாகவும் ஆனால் அதற்கு மூத்த உறுப்பினர்கள் மறு ப்பு வெளியிட்டதாகவும் கட்சித் தகவல்கள் கூறுகின்றன.

ஐக்கியதேசியக் கட்சி அந்த யோசனைக்கு இணங்கவில்லையானால், ஸ்ரீலங்கா சுதந் திரக் கட்சியின் மூத்த உறுப்பினர் நிமல் சிறி பால டி சில்வாவை புதிய பிரதமராக நியமி க்கவுள்ளதாகவும் ஜனாதிபதி கூறியதாக கட் சித் தகவல்கள் கூறுகின்றன.

அதேவேளை தமிழ்த்தேசியக் கூட்டமை ப்பின் ஆதரவைப் பெற்று பிரேரணையில் வெற்றிபெறுவதை சிங்கள இனவாதிகள் விரும்பவில்லை என ஜனாதிபதி மைத்திரி பால சிறிசேன ஐக்கிய தேசிய கட்சி உறுப்பி னர்களுடனான சந்திப்பில் கூறியுள்ளார்.

ஆனால் அதற்கு பதிலளித்த அமைச்சர் மங்கள சமரவீர, ஜனாதிபதி தேர்தலில் தமிழ் மக்களின் ஆதரவுடன் வெற்றிபெற்றதை ஞாபகமூட்டினார். அப்போது அந்த இனவாதி கள் எங்கே இருந்தனர் என்றும் அமைச்சர் மங்கள சமரவீர கேள்வி எழுப்பினார் என்று கட்சித் தகவல்கள் தெரிவித்தன.

எவ்வாறாயினும் நம்பிக்கையில்லா பிரேரணையில் பிரதமர் ரணில் விக்கிரம சிங்க வெற்றி பெறுவார் என கொழும்பு அரசி யல் வட்டாரங்கள் தெரிவிக்கின்றன. (ம)

# ரணிலுக்கு ஆதரவாக வாக்களிக்க வேண்டாம்

## கூட்டமைப்புக்கு மகிந்த தரப்பு எச்சரிக்கை

(கொழும்பு)

ஐக்கிய தேசியக் கட்சியின் தலைவரை பாதுகாப்பதற்கு தமிழ் மக்களின் பிரதிநிதிகள் முயற்சி செய்தால் எதிர்காலத்தில் ஆட்சிய மைக்கப் போகும் மகிந்த அரசாங்கத்திடம் இருந்து தீர்வுகளைப் பெற்றுக்கொள்வது கடி னமாகும் என்று தமிழ்த் தேசியக் கூட்ட மைப்புக்கு எச்சரிக்கை விடுத்துள்ளது கூட்டு எதிரணி.

கொழும்பில் நேற்று நடைபெற்ற ஊடகவி யலாளர் சந்திப்பில் கருத்து வெளியிட்ட ஸ்ரீலங்கா பொதுஜன முன்னணியின் தலை வரான பேராசிரியர் ஜி.எல்.பீரிஸ், தமிழ் தேசியக் கூட்டமைப்பின் நிலைப்பாடு தொட ர்பில் விமர்சித்தார். "எதிர்கட்சித் தலைவரது பதவியில் மாற்றம் ஏற்படுத்தப்பட வேண்டும். ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சியிலுள்ள உறுப்பி னர்கள் எதிர்க்கட்சிக்கு வந்தால் அதிக உறு ப்பினர்களைக் கொண்ட அடுத்தகட்சி எதிர்க்கட்சியாக மாறிவிடும். இவ்வகையாக மாற்றங்களை ஏற்படுத்தும் தினமே இன் றைய தினமாகும். இந்த நெருக்கடியை சமா ளிப்பதற்காக பிரதமர் ரணில் விக்கிரமசிங்க எந்தவொரு வாக்குறுதியையும் அளிப்பதற்கு தயாராகுவார். ஐக்கிய தேசியக் கட்சி தனி யாட்சியை அமைக்க தமிழ்த் தேசியக் கூட்ட மைப்பின் உதவி கிடைத்தால் எவ்வகை யான கொள்கை அந்த அரசிற்குள் அமுல்படு த்தப்படும் என்பதை விளங்கிக்கொள்ள முடியும் என்றார்.

இதேவேளை இந்த ஊடகவியலாளர் சந்திப்பில் கலந்துகொண்டு உரையாற்றிய நாடாளுமன்ற உறுப்பினர் பந்துல குணவர்த் தன, தமிழ் மக்களின் பிரதிநிதிகள் பிரதமர் ரணில் விக்கிரமசிங்கவை பாதுகாத்தால் அடுத்துவரும் அரசாங்கத்துடன் கொடுக்கல் வாங்கலை செய்யமுடியாத நிலைமையே ஏற்படும் என்று எச்சரித்தார்.

தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு ஐக்கிய தேசியக் கட்சியின் தலைவரை பாதுகாப்பத ற்கு முடிவெடுத்தால் எதிர்காலத்தில் மஹிந்த ராஜபக்ஷவின் அரசாங்கத்துடன் பேச்சு நட த்தி தமது பகுதிகளிலுள்ள பிரச்சினைகளு க்கு தீர்வுபெற்றுக் கொடுப்பது எவ்வாறு என்ற பிரச்சினை ஏற்படும். அதேபோல இந்த நம்பி க்கையில்லா தீர்மானத்தில் ஒரு குற்றச்சாட்டு உள்ளது. அதாவது கண்டி பகுதியில் ஏற்பட்ட பிரச்சினையில் அரசாங்கம் வாய்ப்புக்களை அளித்துள்ளதாக சுட்டிக்காட்டப்பட்டுள்ளது. எனவே முஸ்லிம் மக்களைப் பிரதிநிதித்து வப்படுத்துகின்ற உறுப்பினர்கள், தங்களது மக்களது சொத்துக்களை அழிப்பதற்கு அனு மதியளித்த அரசாங்கம் மீது நம்பிக்கை தெரி வித்து எவ்வாறு அவர்கள் மக்களுடன் கொடு க்கல் வாங்கலை செய்வார்கள் என்ற பிரச்சி னையும் எழும் என்றார். (ம)

# நம்பிக்கையில்லா பிரேரணையை தோற்கடிப்போம் ஹர்ஷ சூளுரை

(கொழும்பு)

பிரதமர் ரணில் விக்கிரமசிங்கவுக்கு எதி ராக முன்வைக்கப்பட்டுள்ள நம்பிக்கையி ல்லா தீர்மானத்தை இன்றைய தினம் தோற் கடிப்பதாக ஐக்கிய தேசியக் கட்சி அறிவித்து ள்ளது.

நாடாளுமன்றத்தில் நேற்று செவ்வாய்க் கிழமை உரையாற்றிய அக்கட்சியின் மூத்த உறுப்பினரும், அமைச்சருமான ஹர்ஷ டி சில்வா இதனைத் தெரிவித்தார்.

உலகில் எந்தவொரு நாட்டிலும் அரசா ங்கத்திற்கு எதிராகவே அரசாங்கத்தில் உள் ளவர்கள் நம்பிக்கையில்லா தீர்மான மொன்று இதுவரை கொண்டுவந்ததாக வரலாற்றில் பதிவாகியிருக்கவில்லை என்று கூறினார்.

எனினும் இலங்கையில்தான் ஆட்சியிலு ள்ள அரசாங்கத்திற்கு எதிராகவே அரச தரப் பிலிருந்து ஒரு நம்பிக்கையில்லா தீர்மானம் முன்வைக்கப்படுகிறது என்று குறிப்பிட்ட அவர், அதுதொடர்பில் சபையில் நகைப்புடன் கிண்டலடித்துக் காட்டினார்.

இதேவேளை ஐக்கிய தேசியக் கட்சியில் பாரிய மறுசீரமைப்பு ஒன்றை விரைவில் கொண்டுவருவதற்கான இணக்கப்பாடு எட் டப்பட்டிருப்பதாகவும் அவர் சபையில் நேற்று தெரிவித்தார். (ம)

## இந்திய துணைத்...

தினம் மாலை வட மாகாண ஆளுநர் றெஜினோல்ட் கூரே அவர்களை சந்தித்து கலந்துரையாடினார்.

யாழ்.இந்திய துணைத்தூதுவராக இரு ந்த ஆ. நடராஜன் அண்மையில் இடமாற்றம் பெற்று சென்றதன் பின்னர் புதிதாக எஸ். பாலச்சந்திரன் நியமிக்கப்பட்டுள்ளார். இவர் புதிதாக பதவியேற்றபின்னர் முதலாவதாக ஆளு நரை சந்தித்து கலந்துரையாடியுள்ளார்.

குறித்த சந்திப்பின்போது,

இந்திய அரசாங்கத்தினால் வடபகுதியில் முன்னெடுக்கப்பட்டுவரும் அபிவிருத்தி திட்ட ங்கள் தொடர்பிலும் எதிர்காலத்தில் முன்னே ற்றத்தினை நோக்கி பயணிப்பதற்கு வேண் டிய வழிமுறைகள் தொடர்பிலும் கலந்துரை யாடப்பட்டது. (மு-3,60)

## முஸ்லிம் காங்கிரஸ்....

மையிலான ஐக்கிய தேசியக் கட்சியினர் கடு மையான முயற்சிகளை முன்னெடுத்து வரு கின்றமை குறிப்பிடத்தக்கது. (மு-9)

ஸ்ரீலங்கா முஸ்லிம் காங்கிரஸ், ஐக்கிய தேசிய முன்னணியுடன் இணைந்து பொதுத் தேர்தலில் 9 நாடாளுமன்ற உறுப்பினர்க ளைப் பெற்றுக்கொண்டது. (ம)

# நாட்டை நிர்வகிக்கும் தலைவர்கள் அதிகரித்துள்ளார்கள் -மகிந்த தெரிவிப்பு

(கொழும்பு)

நாட்டை நிர்வகிக்கும் தலைவர்கள் அதி கரித்தால் தீர்மானங்கள் மேற்கொள்வதில் சிக்கல் ஏற்படும் என்றும் நாட்டின் தற்போ தைய நிலை உக்கிரமடைவதற்கும் அதுவே காரணம் என்றும் முன்னாள் ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷ கூறியுள்ளார்.

கட்டான பிரதேசத்தில் உள்ள விகாரை ஒன்றில் இடம்பெற்ற நிகழ்வில் உரையாற் றும் போது அவர் இவ்வாறு கூறியுள்ளார்.

நாட்டின் சில பிரதேசங்களில் ஏற்படுகி ன்ற சில சம்பவங்கள் நல்லிணக்கம் நம் மிடம் இருந்து தூரமாகின்றதாகவும், ஒரு வகையில் இவற்றுக்கு அரசாங்கமே பொறு ப்புக் கூற வேண்டும் என்றும் அவர் கூறி னார்.

இவ்வாறான நிலைமைகள் ஏற்படுவத ற்கு காரணம் தீர்மானம் எடுக்க முடியாத நிலையே அல்லது தீர்மானம் எடுப்பதற்கு அளவுக்கு அதிகமானவர்கள் இருப்பதே என்று அவர் கூறியுள்ளார்.

அதேவேளை நம்பிக்கையில்லாப் பிரேர ணைக்கு என்ன நடக்கும் என்பது தொடர்பில் அனைவரும் தெளிவாக உள்ளதாகவும், இன்று இரவு 9.30 மணிக்கு அதன் பெறு பேறு வெளியாகும் என்றும் முன்னாள் ஜனா திபதி மகிந்த ராஜபக்ஷ கூறியுள்ளார். (ம)

## கரவெட்டி பிர...

கரவெட்டிப் பிரதேச சபையினை தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு கைப்பற்றியுள்ளது. தவிசாளராக தங்கவேலாயுதம் ஐங்கரனும், பிரதித் தவிசாளராக கந்தர் பொன்னையாவும் தெரிவாகியுள்ளனர்.

கரவெட்டிப் பிரதேசசபையின் முதலாவது அமர்வு நேற்றைய தினம் உள்ளூராட்சி ஆணையாளர் பற்றிக் டிறஞ்சன் தலைமையில் கூடியது. அதன் போது தவிசாளராக தமிழ்த் தேசிய கூட்டமைப்பு தங்கவேலாயுதம் ஐங்கரனை பிரேரித்தது. சிறிலங்கா சுதந்திரக் கட்சி சதாசிவம் இராமநாதனைப் பிரேரித்தது.

இரகசிய வாக்கெடுப்பு நடத்துவதா பகிரங்க வாக்கெடுப்பு நடத்துவதா என கோரப்பட்ட போது பகிரங்க வாக்கெடுப்பினை 11 உறுப்பினர்களும் இரகசிய வாக்கெடுப்பினை 10 உறுப்பினர்களும் கோரினர்.

அதனை அடுத்து பகிரங்க வாக்கெடுப்பு நடத்தப்பட்ட போது தமிழ்த் தேசிய கூட்டமைப்பின் 9 உறுப்பினர்களும் ஐக்கிய தேசியக் கட்சியின் 2 உறுப்பினர்களும் தங்கவேலாயுதம் ஐங்கரனுக்கு வாக்களித்தனர்.

ஈழமக்கள் ஜனநாய கட்சியின் மூன்று உறுப்பினர்களும் சிறிலங்கா சுதந்திரக் கட்சியின் ஏழு உறுப்பினர்களும் சதாசிவம் இராமநாதனுக்கு வாக்களித்தனர்.

தமிழ்த் தேசிய மக்கள் முன்னணியின் ஏழு உறுப்பினர்களும் தமிழர் விடுதலைக் கூட்டணியின் மூன்று உறுப்பினரும் நடுநிலைமை வகித்தனர்.

இதனையடுத்து உபதவிசாளர் தெரிவின் போது தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் கந்தர் பொன்னையாவை கூட்டமைப்பினர் பிரேரித்தனர். வேறு யாரும் உபதவிசாளராக பிரேரிக்கப்படாத நிலையில் போட்டியின்றி தெரிவானார். (ம-4)

## பார்க்காது சென்...

உறவுகளை சந்திப்பதாக தெரிவித்திருந்த முன்னாள் ஜனாதிபதி, இறுதி நேரத்தில் அவர்களை சந்திக்காது புறப்பட்டு சென்றுள்ளார்.

காணாமல் ஆக்கப்பட்ட தமது உறவுகளின் நிலை குறித்து வெளிப்படுத்துமாறு கோரி கிளிநொச்சி கந்தசுவாமி ஆலய முன்றலில் உறவுகள் ஓராண்டை கடந்த நிலையில் தொடர்ந்து போராடி வருகின்றனர்.

தங்களது போராட்டத்திற்கு உரிய பதில் கிடைக்காது சோர்ந்து போயுள்ள மக்கள் அரசாங்க தரப்பினரால் தொடர்ந்து புறக்கணிக்கப்பட்டுவரும் நிலையில், அவர்களை மேலும் வேதனைக்கு உட்படுத்தும் வகையில் முன்னாள் ஜனாதிபதியின் செயற்பாடு அமைந்துள்ளது. (ம)

## நம்பிக்கையில்...

வரும் 30ஆம் திகதிக்கு முன்னர் கட்சி செயற்குழுவினால் நியமிக்கப்படுவார்கள். அதற்கு முன்னர் சிரேஷ்ட உறுப்பினர்களுடன்பேச்சு வார்த்தை நடத்தப்பட்டு ஆலோசனைகள் பெறப்படும்.

அதற்கமைய எதிர்வரும் 7 மற்றும் 8 ஆகிய இரு தினங்களில் விசேட ஆலோசனை கூட்டங்களை நடத்த தீர்மானித்துள்ளோம் என தெரிவித்தார்.(ம)

## ஜனா...

டையே கலந்துரையாடி தீர்மானத்தை வெளியிடுவோம் எனத் தெரிவித்துள்ளார். (ம)


நிரு ரீயூசன் சென்ரர்

கோண்டாவில்

O/L DAY CLASS

ஆரம்பம்: 10.04.2018

செவ்வாய்க்கிழமை 8மணி

அனுமதிகள் வழங்கப்படுகின்றது (C-2101)

ஆசிரியர் தேவை

வடமராட்சியில் இயங்கும் கல்வி நிலையத்திற்கு கணிதம், தமிழ், சுகாதாரம், வரலாறு, புவியியல், சைவசமயம், கிறிஸ்தவம் (தரம் 1-11 வரை) கற்பிக்க கூடியவர்கள் தேவை. (சி-2106)

தொடர்பு:
0770872903, 0217917791

வட மாகாண முன்பள்ளி ஆசிரியர் தெரிவு பரீட்சைகளுக்கான வழிகாட்டல் வகுப்புக்கள்

பொது உளச்சார்பு

05, 06ஆம் திகதிகளில்

வியாழன், வெள்ளி 3 - 5pm

கோலாசிற்றி

234, நாவலர் வீதி, யாழ்ப்பாணம்.

077 843 5224 (3496)

வேலைவாய்ப்புக்கள்

| | | |
|---|---|---|
| துபாய் | | 150,000/- 192,000/- |
| | | 46,200/- +OT |
| கட்டார் | Nissan | 49,200/- 82,000/- |
| சவுதி அல்மராய் | | 46,200/- 73,800/- |
| குவைத் | Dish Washer/Steward | 46,350/- |

குறிப்பு

0777 324 004

SIKARAM ACADEMY

TGL Trans Gulf (Pvt) Ltd.,

தொ.பே.: 021 - 222 00 11

90, First Floor, Chatham Street, Colombo 1

(சி-2109)

பதவி வெற்றிடம்

பின்வரும் பதவிகளுக்கு இருபாலார்களிடமிருந்தும் விண்ணப்பங்கள் கோரப்படுகின்றன.

★ கணனி தமிழ் ரைப்பிங்
★ கணனி பக்க வடிவமைப்பு
★ விளம்பர வடிவமைப்பு

முன் அனுபவம் உள்ளவர்களும் பயிலுநர்களும் தேவை.
பெண்கள் (பகல் கடமை), ஆண்கள் (இரவுக்கடமை) தகைமை உள்ளவர்களும் பயிற்சி பெற விரும்புபவர்களும் 06.04.2018 வெள்ளிக்கிழமை பிற்பகல் 3.30 மணிக்கு சுயவிபரம் அடங்கிய விண்ணப்பத்துடன் வலம்புரி அலுவலகத்துக்கு நேரில் வரவும். - பொது முகாமையாளர்

வலம்புரி
இல.03, 02-ம் ஒழுங்கை,
பிறவுண் வீதி, யாழ்ப்பாணம்.

Techno World

(வெலிங்டன் சந்தி, லிங்கன் கூல்பார் அருகாமை - யாழ்.)

A/L தொழில்நுட்பப் பிரிவு

A/L 2019 மாணவர்களின் வட, கிழக்கு மாகாணங்களில் பாடசாலையில் நடைபெற்ற பரீட்சையில் முதலிடம் வகிக்கும் எமது மாணவர்களின்

(இதுவரை கிடைக்கப்பெற்ற பெறுபேறுகள்)

| பாடம் | பெயர் | புள்ளிகள் |
|---|---|---|
| SFT | S.லாவண்யா | 97 |
| | J.ஜெனுசன் | 91 |
| | N.கௌதமன் | 86 |
| | பவதாரணி | 82 |
| | ஜெனார்த்தனி | 77 |
| | தனஞ்செயன் | 70 |
| Bio-Tec | சந்துஜா | 91 |

(C-2107)

A/L 2020
புதிய பிரிவு - 07.04.2018
தொடர்பு: 077 017 5346
கிளைகள்: புத்தூர் (புத்தூர் சோமஸ்கந்தா)

CNR எக்ஸ்பிறஸ் பொதி விநியோக சேவை



உலகின் முதல் தர கூரியர் நிறுவனத்தின் ஊடாக உங்கள் வீட்டில் இருந்தவாறே உள்நாட்டு, வெளிநாட்டு முக்கிய ஆவணங்கள் பொதிகளை துரித கதியில் அனுப்பிட நாடுங்கள். (சி-2090)

CNR World Wide Express
இல.401, மணிக்கூண்டு கோபுர வீதி, (பெருமாள் கோவில் அருகாமை) யாழ்ப்பாணம்.
தொடர்புகளுக்கு: 021 5674145, 077 2931062
follow us: cnrworldwideexpress

வேலைவாய்ப்பு

O/L சித்தியடையவில்லையா?
எமது நிறுவனத்தின் வலையமைப்பின் கீழ் பல்வேறுபட்ட பதவி வெற்றிடங்கள்
● பயிற்சி அளிக்கப்பட்டு நிரந்தர வேலைவாய்ப்பு
● ஆரம்பம் 15,000/= - பின் 40,000/=
● வயதெல்லை 18 - 30
உடன் அழையுங்கள் 076 676 7620, 077 157 1699
முல்லைத்தீவு, கிளிநொச்சி, மன்னார், வவுனியா ஆகிய மாவட்டத்தினருக்கு முன்னுரிமை
யாழ் மாவட்டத்தினருக்கும் சந்தர்ப்பம் வழங்கப்படும். (3507)

உடனடி வேலை

எங்கள் ஸ்தாபனத்துக்கு உடனடியாக Auto Parts விற்பனையில் தேர்ச்சி பெற்ற அனுபவம் உள்ள ஒரு ஆண் விற்பனையாளர் தேவை.
விண்ணப்பிக்க வேண்டிய முகவரி:
VIJAYALANKA AUTO PARTS
No.8,Maniam Building,
Point Pedro Road, Puttur East, Puttur.
Tel: 021 722 3228
Email: vijayalankaexport@gmail.com (3502)

விரைவு பொதிகள் சேவை
விசேட விலை குறைப்பு



UK - 550*/=Kg
கனடா - 1050*/=Kg
DELIVERY IN 3-5 DAYS
தொடர்புகளுக்கு 0768226240
● மானிப்பாய் ● யாழ்ப்பாணம் ● கிளிநொச்சி ● சாவகச்சேரி ● நெல்லியடி ● பருத்தித்துறை ● வல்வெட்டித்துறை
V2 TRAVELS (C-1982)

அண்ணா பொதிகள் சேவை
976,கே.கே.எஸ் வீதி, யாழ்ப்பாணம்
லண்டன், ஜேர்மனி, கனடா மற்றும் சில நாடுகளுக்கு விலை குறைக்கப்பட்டுள்ளது
வெளிநாடு,உள்நாடுகளுக்கான விரைவுப் பொதிகள் சேவை
021 221 5656 070 330 5500
பொதிகள் மற்றும் கடிதங்களை துரிதமாகவும், நம்பிக்கையுடனும், குறைந்த கட்டணங்களுடனும் அனைத்து நாடுகளுக்கும் மிகக் குறுகிய நாட்களுக்குள் அனுப்பிட எம்மை நாடுங்கள்.
யாழ்ப்பாணம் | வேலணை | ஊர்காவத்துறை | சாவகச்சேரி | கிளிநொச்சி | வவுனியா | கனகராயன்குளம் | முல்லைத்தீவு

Deutsch and Italian வகுப்புக்கள்
JAFFNA COLLEGE UNDERGRADUATE DEPARTMENT,
No.464, Hospital Road, Jaffna.
Tel:- 021 222 3382
மேலதிக தொடர்புகளுக்கு 077 078 2022 (C-2100)

பங்குச்சந்தை முதலீடுகளுக்கான முழுமையான அறிவு

துறைசார் வல்லுநர்களின் பயிற்சிப்பட்டறை (WorkShop) பங்குச்சந்தை யாழ். கிளையில்

◆ பங்கு முதலீட்டு எண்ணக்கருக்கள்
◆ நிதிக்கூற்றுக்களின் பகுப்பாய்வு
CSE COLOMBO STOCK EXCHANGE
◆ பங்குத்தெரிவு உத்திகள்
◆ முதலீட்டினை ஆரம்பித்தல்

மதிய உணவு உள்ளடங்கலாக நான்கு அமர்வுகளுக்குமான கட்டணம் ரூபா 1000.
ஏப்ரல் 7 ஆம் & 21 ஆம் திகதி சனிக்கிழமைகளில் காலை 9.00 மணி முதல் மாலை 3.00 மணிவரை
பதிவுகளுக்கு மற்றும் மேலதிக தகவல்களுக்கு: 021 222 1455/ 077 782 2014, 147, 2/3, K.K.S. Road, Jaffna. (சி-2093)


இப்பத்திரிகை வலம்புரி அன்கோ ஸ்தாபனத்தாரால் இல.3,2 ஆம் ஒழுங்கை, பிறவுண் றோட், யாழ்ப்பாணம் என்னும் முகவரியிலுள்ள அவர்களது அச்சகத்தில் 04.04.2018 இல் அச்சிட்டு வெளியிடப்பட்டது.